
கல்கி

KALKI 16-3-1975 60 காசு





இதமூட்டும்
இன்ப
மணம்...
CROOKES
Lacto-Calamine
LUXURY TALC
பூவிதழ் போல்
மென்மையான
லாக்டோ-
காலமைன்
லக்சரி டால்க்...
குளுமையான
காலமைன்
கலந்தது...மேனிக்கு
இதமூட்டும்.
நாளெல்லாம் நீடித்த
புதுமணம்...உமக்கே
சொந்தம்.
க்ரூக்ஸ்
லாக்டோ-காலமைன்
லக்சரி டால்க்



CMGF-42-104 TM

கல்கி

ஆனந்த பங்குனி, 2 ★ மார்ச் 16, 1975

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள
பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே!
சம்பவங்களும் கற்பனையே.




மேலட்டை: வண்ணப்படம் ரவீந்திரபல்லா



அடுத்த இதழில்...

போட்டிக் கதை:
ஒரு நாள் கழிகிறது
ஜயா சுப்பிரமணியம்



தரிசு நிலம் தங்கமாகிறது



மெய்யான பசுமைப் புரட்சி
பற்றி சிறப்புக் கட்டுரை



தொழிலதிபர் திரு டி. எஸ். கிருஷ்ணாவின் திடீர் மரணம் தமிழ்நாட்டின் தொழில்துறைக்கு ஏற்பட்டுள்ள பேரதிர்ச்சியும் பேரிழப்புமாகும். டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் அச்சுவேர், ஆணிவேர் போல் சுமார் 35 ஆண்டுகளாகத் தாங்கிக் கொண்டிருந்தவர் ஸ்ரீ கிருஷ்ணா. போக்குவரத்துத் துறையில் டி. வி. எஸ். ஸ்தாபனத்துக்குத் தனி இடம் தேடி நிரந்தரமான புகழ் மேடை அமைத்துத் தந்த பெருமை ஸ்ரீ டி. எஸ். கே.வையே சேர்ந்தது. சென்னைக்கடுத்த பாடி பகுதியில் மோட்டார் உபகரண உற்பத்தித் தொழிற்சாலைகள் பலவற்றை அமைத்து நிலைக்கச் செய்தவர்கள் ஸ்ரீ கிருஷ்ணாவும் அவரது சகோதரர்களுமே. டி.வி.எஸ். நிறுவனங்களுக்கு அப்பாலும் அவரது தொழில் திறமை வியாபித்திருந்தது. தாம் தொட்டவற்றையெல்லாம் தங்கமாக ஜொலிக்கச் செய்யும் அசாதாரணமான சாமர்த்தியம் பெற்றிருந்த ஸ்ரீ கிருஷ்ணாவின் மேதையைப் பாரத அரசும் தமிழ்நாடு அரசும் கூட நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டிருந்தன. பெருந் தொழிலதிபர் என்பதுடன் திரு கிருஷ்ணாவுக்கு ஒரு தனிப் பெருமையும் உண்டு. தொழிற்சாலையில் எந்தப் பகுதி வேலையாயினும் அதைத் தாமே செய்து காட்டத் தெரிந்தவர். அதனாலேயே தொழிலாளர்கள் அனைவரும் அவரைத் தங்களில் ஒருவராகவே மதித்து அன்பு வைத்திருந்தனர். டி. வி. எஸ். நிறுவனங்களில் தொழிலாளருக்கும் நிர்வாகத் துறைக்கும் ஒற்றுமை நிலைக்க இந்தத் திறமை பெரிதும் உதவியதெனலாம்.

ஸ்ரீ காமராஜ் அவர்களின் தலைமையில் அசையாத நம்பிக்கையும் அமரர் ஸ்ரீ டி. டி. கே. அவர்களிடம் மாறாத அன்பும் கொண்டிருந்த போதிலும் ஸ்ரீ கிருஷ்ணா மற்றக் கட்சிக்காரர்களிடமும் மதிப்பு வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ கிருஷ்ணாவின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது அன்புச் சகோதரர்களுக்கும் அருமைத் துணைவியார் ஸ்ரீமதி அம்புஜம் கிருஷ்ணாவுக்கும் குடும்பத்திலுள்ள ஏனையோருக்கும் டி. வி. எஸ். ஸ்தாபனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும் ஸ்ரீ கிருஷ்ணாவின் நண்பர்களுக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராவண ராஜ்யம்!

பாரதத்தில் ராமராஜ்யம் நடக்க வேண்டும் என்று கனவு கண்டார் அண்ணல் காந்தி அடிகள். இந்திரா அரசோ வானொலியில் காந்தி அஞ்சலியுடன் திருப்தி அடைந்துவிட்டது. நடப்பது ராவண ராஜ்யமாக இருக்கிறது! 'ராவணன்தான் அகம்பாவத்தினால் தன் னிச்சையாக நடக்கிறான்; அவனுக்கு நல்லது கெட்டதை எடுத்துச் சொல்லவே இலங்காபுரியில் யாரும் இல்லையோ?' என்று வருந்திக் கேட்டாளாம் அசோகவனத்துச் சீதை. நல்லவர்கள், அறிஞர்கள் அன்றும் இருந்தார்கள், இன்றும் இருக்கிறார்கள். ஆனால் அதிகார ஆணவம் செவிசாய்க்க மறுத்தது, மறுக்கிறது. சமீபத்திய மத்திய பட்ஜெட் இதற்கு மற்றோர் உதாரணம்.

பட்ஜெட் என்பது வரவு செலவுகளைக் கூட்டிக் கழித்துத் துண்டு விழும் தொகைக்குப் புது வரி விதிப்பது அல்லது நோட்டு ஆச்சடிக்கச் செய்வது என்கிற காரியம் மட்டுமல்ல. அது நாட்டில் உற்பத்தி பெருக உதவ வேண்டும்; பொருளாதாரம் ஸ்திரப்பட வசதி செய்ய வேண்டும்; மக்களின் சுபிட்ச வாழ்வுக்கு வழி வகுக்க வேண்டும். இதையெல்லாம் அடுத்தடுத்து வரும் நமது நிதி மந்திரிகள் சிந்திப்பதேயில்லை. திரு சி. எஸ். அவர்களாவது ஏதாவது செய்வார் என்று எதிர்பார்த்தோம், ஏமாந்தோம்.

உற்பத்தி எட்டு முதல் பத்து சதம் வரை பெருக வேண்டும் என்று ஐந்தாண்டுத் திட்டம் கூறுகிறது. ஆனால் 73-74ல் உற்பத்தி அதிகரித்தது எவ்வளவு தெரியுமா? அரை சதம்! ஆம்! அரை சதம் தான்! ஜனத்தொகை கூடியதே யொழிய உணவு உற்பத்தி சென்ற ஆண்டைக் காட்டிலும் அதிகரிக்கவில்லை. அயல்நாட்டு வர்த்தகமோ ஆபத்தான கட்டத்தில் தத்தளிக்கிறது. இந்த ரீதியில் பொருளாதாரம் ஸ்திரப்படவாவது, மக்களுக்குச் சுபிட்ச வாழ்வாவது?

சி. எஸ். அவர்களும் வழக்கம்போல் — இல்லை வழக்கத்துக்கு அதிகமாகவே — மறைமுக வரிகளை ஏகத்தாறுக அதிகரித்து ஏற் கெனவே வானளாவ உயர்ந்துள்ள விலைவாசிகள் விண்ணை எட்ட வழி செய்திருக்கிறார். விலைவாசிகள் உயர்வதால் மக்களின் வாங்கும் சக்தி குறைந்து அதன் விளைவாக உற்பத்தி மேலும் பாதிக்கப்படும். விற்பனை வரிகளையும் எக்ஸைஸ் எனப்படும் உற்பத்தி வரிகளையும் உயர்த்தியதோடு புதிதாக ஒரு சட்டமும் பிறப்பித்திருக்கிறார் சி. எஸ். அதாவது உற்பத்தியாகும் எல்லாப் பொருள்களுக்குமே இனி எக்ஸைஸ் வரி உண்டு. இதுகாறும் இன்னின்ன பொருள்களுக்கு எக்ஸைஸ் வரி என்று பட்டியல் இருக்கும். இனி இன்னின்ன பொருள்களுக்கு எக்ஸைஸ் வரி கிடையாது என்றுதான் பட்டியல் தயாரிக்க வேண்டும்! எப்படி சி. எஸ்.ஸின் வரி விதிக்கும் ஆற்றல்! வரி வருவாயில் 'ரிகார்ட்' கண்டிருப்பது மற்றொரு சாதனை!

அரசுடைமை ஆன பாங்குகளிலிருந்து தொழில் நிறுவனங்கள் கடன் பெறுவதற்குப் பல முட்டுக்கட்டைகள் போடப்பட்ட நிலையில் அந்நிறுவனங்கள் தனியாரிடமிருந்து கடன் பெற்று வந்தன. இந்தப் பட்ஜெட்டில் அதற்கும் ஆபத்து வந்து விட்டது. காண்பிக்கப் பட்டுள்ள சில சலுகைகள் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கும் தொழிலகங்களுக்கு ஜன்னல் கதவைத் திறந்தாற் போலிருக்கிறதே தவிர பிராணவாயு செலுத்தியதாக எண்ண முடியவில்லை.

மத்தியதர வகுப்பினர் சேமிப்புச் செய்வார்களேயானால் அதற்கு வரிச் சலுகைகளை அதிகரித்திருக்கிறார் சி. எஸ். ஆனால் விலைவாசிகள் விஷம் போல் ஏறுகிற போது யார் எந்த அளவுக்குச் சேமித்து விட முடியும்?


ஜனசங்கத் தலைவர் அத்வானி இந்த பட்ஜெட்டைக் கொடுமை என்றதுடன், 'துன்புறுத்துவதில் இன்பம் காணும் பட்ஜெட்' என்றும் வர்ணித்துள்ளார். இதைவிடக் கடுமையாகவும் யாரும் வர்ணிக்க முடியாது; இதைவிடச் சரியான விதத்திலும் யாரும் பட்ஜெட்டை வர்ணிக்க முடியாது!

கல்கி

மலர் 34

இதழ் 33

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்


என்னங்க இப்படி எம்.ஜி.ஆர் குல்லாவோட கிளம்பிவிட்டீங்களே!
அதெல்லாமொண்ணு மில்லே. இது அப்துல்லாக்-குல்லா!
அவங்க ஒண்ணு சேர்ந்துட்-டாங்க. நம்மவங்க-தான் இப்படி!
எதிர்க்கட்சிகள்
ஜெ.பி இயக்கம்
காங்கிரஸில் உட்பிரிவுகள்

வெற்றிக்குக் கொடுத்த விலை!

'நாய் வாலை நிமிர்த்துவதாவது, வேதாளம் முருங்கை மரத்தைவிட்டு இறங்குவதாவது' என்று எண்ணி வந்தபோது ஷேக் அப்துல்லாவைப் பணிய வைத்தது திருமதி இந்திராகாந்திக்கும் அவர் சார்பில் பேச்சு வார்த்தை நடத்திய ஜி. பார்த்தசாரதி அவர்களுக்கும் பெரிய வெற்றிதான், மறுப்பதற்கில்லை. பிரத்தியட்ச நிலையை உணர்ந்த ஷேக் அப்துல்லா, 'காஷ்மீரம் இந்தியாவின் ஓர் அங்கம் என்ற நிலையை எந்த வகையிலும் மாற்ற முடியாது' என்பதை ஒப்புக் கொண்டு விட்டார். காஷ்மீர மக்களின் பெருமதிப்புக்கும் பேரன்புக்கும் பாத்திரமான ஒரு தலைவர் அங்கே பதவி ஏற்றிருப்பது நியாயம், நல்லதும்கூட. இந்நாள்வரை முதல்வராயிருந்த மீர்காஸிம் பெருந்தன்மையுடன் விட்டுக் கொடுத்து நம் மதிப்பில் உயர்கிறார்.

ஆனால் ராஜதந்திர ரீதியிலும் சர்வதேச நோக்கிலும் இந்திரா அம்மையார் பெற்ற இந்த வெற்றிக்குக் கொடுக்கப்பட்டுள்ள விலை ரொம்ப அதிகம். முதல் மந்திரி என்று அழைத்தால் என்ன, பிரதம மந்திரி என்று அழைத்தால் என்ன? பெயரில் என்ன இருக்கிறது என்று வாதாடுவது அபத்தம். பிரதம மந்திரி என்ற பெயருடன் சேர்ந்து அந்தப் பதவிக்குரிய உரிமைகளும் ஷேக்குக்குப் போய்ச் சேரும். அப்படிப் போகாவிட்டாலும் படிப்படியாக அவர் எடுத்துக் கொள்வார். ஒப்பந்தப்படியேகூட காஷ்மீரத்தில் பாராளுமன்றத்தின் செல்வாக்கு வெகுவாகக் குறைந்து மாநில சட்டசபையின் அதிகாரங்கள் மிக அதிகமாகின்றன. இதைவிடக் கவலை அளிப்பது உடன்படிக்கையின் மற்றொரு ஷரத்து. காஷ்மீரத்தில் நிறைவேற்றப்படும் சட்டங்களைப் பரிசீலனை செய்ய, ஏற்க அல்லது நிராகரிக்க சுப்ரீம் கோர்ட்டுக்கு உரிமையில்லை என்கிறது அது. இதனால் ஏற்படப் போகும் நீண்டகாலப் பின்விளைவுகளைச் சிந்திக்கையில் இந்த உடன்படிக்கை ஷேக் அப்துல்லாவுக்கும் அவரைப் போன்ற இதர பிரிவினைச் சக்திகளுக்கும் ஆரம்பகட்ட வெற்றி என்றே நினைக்கத் தோன்றுகிறது.

ஒப்பந்தத்தை ஜனசங்கம் எதிர்ப்பதை எள்ளி நகையாடுகிறார் பிரதமர். ஆனால் வரவேற்பவர்கள் யார் என்றும் பார்க்க வேண்டும். பாராளுமன்றத்திலே கம்யூனிஸ்டுகள் இந்த ஒப்பந்தத்தை வரவேற்று மாநில சுயாட்சி உரிமைகளைக் கேட்கும் மாநிலங்களுக்கெல்லாம் அதனை வழங்க வேண்டியதுதான் என்று கூறியுள்ளனர். பாரதம் படிப்படியாகப் பிளவு கண்டால் கம்யூனிஸ்டுகளை விடக் களிப்பெய்துபவர் வேறு யார்? தமிழக முதல்வரோ 'ஷேக் அப்துல்லா பெற்ற உரிமைகளைத் தமிழகத்தில் நானும் பெறாமல் விடமாட்டேன், போர்க்களத்தில் குதிப்பேன், சிறைவாசம் அனுபவிப்பேன்' என்று ஆரம்பித்துவிட்டார். அடுத்த தேர்தலில் தி.மு.க. தோற்பது உறுதி என்னும்போது திரு கருணாநிதிக்குப் போராடவும் சிறைவாசம் அனுபவிக்கவும் நிறைய வாய்ப்பு இருக்கும்.

வித்தை ஊன்றிவிட்டார் பிரதமர்.

சீட்டுக் கிழிந்தது!

உண்மையைச் சொன்னதற்காக மோகன் தாரியா பலிவாங்கப்பட்டிருக்கிறார். மந்திரி பதவி அவரிடமிருந்து பறிக்கப்பட்டது.

மந்திரி பதவி இன்று வரும், நாளை போகும்; ஆனால் உண்மைகள் நிரந்தரமானவை என்பதைப் புரிந்து கொண்டு தைரியமாக நடந்து கொண்ட தாரியாவை நாடு வாழ்த்துகிறது.

ஜே.பி.யின் போராட்டங்களில் தமக்கு ஈடுபாடு இல்லாவிட்டாலும் ஜே.பி. கூறுகிற குற்றச்சாட்டுக்களில் நியாயம் இருக்கிறது. அதனால் அவருடன் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டு நலனுக்கு உகந்த நடவடிக்கைகளை

ராஜாஜி சிந்தனை

கசக்கிப் பிழிகிறார்கள்!

ரூபாய் சரிவிலே விழுந்துகொண்டிருக்கிறது. சரிவின் கோணத்தை அதிகரிப்பது உயிராபத்தானது. அச்சடித்த நோட்டுக்களின் உதவியுடன் கொழிக்கலாம் என எண்ணுவது தற்கொலைக்கு ஒப்பாகும். பணவீக்கத்தைச் சிறிது சிறிதாக அடிக்கடி அதிகரிப்பதற்கும் ஒரேயடியாக உயிரைப் பறிக்கும் அளவில் அதிகரிப்பதற்கும் இடையில் வித்தியாசம் ஏதுமில்லை.

நேரடியான வரிகளால் பாதிக்கப்படாத வர்க்கத்தினரின் பாக்கெட்டில் கைபோடவே மறைமுக வரிகள் உதவுகின்றன. லெவிகள், உற்பத்தி வரிகள், சுங்க வரிகள், விற்பனை வரிகள் எல்லாம் பணவீக்கத்தால் ஏற்கனவே அதிகரித்துள்ள விலைவாசிகள் மேலும் உயரக் காரணமாகியுள்ளன.

கசக்கிப் பிழிவதற்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லையை அடைந்தாகிவிட்டது. நமது தலைவர்களுக்கு அடக்கமும் யதார்த்த நோக்கும் வேண்டும். பழைய கொள்கைகளையும் டம்பாச்சாரித் திட்டங்களையுமே விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தால் மூழ்கிப் போவோம்.

—சுயராஜ்யா, அக்டோபர் 17, 1964

எடுக்க வேண்டும் என்று கூறியது தாரியா செய்த 'குற்றம்' ஒன்று. இரண்டாவது 'குற்றம்' ஆளும் காங்கிரஸுக்குள்ளேயே பசுத் தோல் போர்த்திய புலிகளாகக் கம்யூனிஸ்டுகள் புகுந்திருக்கிறார்கள், எச்சரிக்கை தேவை என்றது. கட்சி நலனை உத்தேசித்தே தாரியா மேற்படி கருத்துக்களை வெளியிட்டார் என்றாலும் அம்மையாருக்குப் பொறுக்கவில்லை; சீட்டுக் கிழித்துவிட்டார்.

ஒரு மந்திரிக்குக் காண்பிக்கப்பட வேண்டிய குறைந்தபட்ச மரியாதையைக்கூடக் காண்பிக்காமல் — விளக்கம் கேட்காமல், ராஜினாமாவைக் கோரிப் பெறாமல் — சீட்டுக் கிழித்ததானது பிரதமரின் யதேச்சாதிகாரப் போக்குக்கு மற்றொரு சான்றாகத் திகழ்கிறது.

பணி மன்றத்துக்குப் 'பகீரதன்'

அமரர் கல்கி அவர்களுக்குக் கீழ் உதவி ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றிய அனுபவத்துடன் சத்திய கங்கை என்ற பத்திரிகையை வெற்றிகரமாக நடத்தி வரும் திரு பகீரதன், ராமலிங்கர் பணி மன்றத்தின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

ராமலிங்க சுவாமிகளின் அருள்நெறிகளை உலகெல்லாம் பரப்பும் உயர் நோக்கோடு தொழிலதிபர் திரு என். மகாலிங்கம் பெருமளவு நிதியை ஒதுக்கி இந்தப் பணி மன்றத்தை உருவாக்கினார்.



சாசுவத நிதியிலிருந்து கிடைக்கும் வருவாயுடன் இராமலிங்கரின் அன்பர்கள் தரும் ஒத்துழைப்பும் சேர்ந்துகொள்ளப் பணிமன்றம் பற்பல நல்ல காரியங்களைச் செய்து வருகிறது. வள்ளலார் பெயரில் கல்வி நிலையங்களைத் தொடங்குவது, அனாதை இல்லங்கள், மருத்துவ மனைகள் நிறுவுவது, வள்ளலார் போதனைகளை விளக்கும் பிரசுரங்களையும் நூல்களையும் வெளியிடுவது, தமிழ் மொழி, இலக்கியம், அறிவியல் கலைகளை வளர்ப்பது போன்ற பல ஆக்கப் பணிகளைப் புரிந்து வருகிறது. உன்னத நோக்கில் அமைந்த ஒரு பணிமன்றத்துக்கு உழைப்புக்கு அஞ்சாத பகீரதன் போய்ச் சேர்ந்திருக்கிறார். அவருக்குப் பெருமை; திரு என். மகாலிங்கத்தின் தர்ம சிந்தனையுடன் கூடிய ஞானப் பணிகளுக்குப் பக்கபலம். அறமும் அன்பும் அறிவும் வளர்க என வாழ்த்துவோம்.

ஏ. ஜி. வி.

மிகக் கடினமான அரசியல் பொருளாதார விஷயங்களையும் தெள்ளத் தெளிவாகப் பாமரருக்கும் புரியும் வண்ணம் எழுதிய ஏ.ஜி.வி. காலமாகிவிட்டார். அயல்நாடுகளின் அரசியல் நிலைகள் பற்றியும் அருமையான நூல்களை அந்த நாளிலேயே எழுதி வெளியிட்டவர் ஏ.ஜி.வி. சிறந்த பேச்சாளர். பக்திமான். சமஸ்கிருத தமிழ் இலக்கியங்களில் பாண்டித்தியம் உள்ளவர். தற்காலத் தமிழ் இலக்கியவளர்ச்சியிலும் அக்கறை கொண்டு எழுத்தாளர் சங்கத் தலைவராகவும் சாகித்ய அகாடெமி அங்கத்தினராகவும் திகழ்ந்தார்.



திரு வி. வி. கிரி அவர்களுடன் சேர்ந்து தொழிற் சங்க இயக்கத்தில் ஆரம்பமான இவர் பொது வாழ்வு பின்னால் தினமணியில் நாற்பத்தொரு ஆண்டு சேவையாகப் பரிணமித்தது. கடைசி மூச்சு வரை பத்திரிகையாளராகவே சிந்தித்துச் செயல்பட்டார் தினமணி துணை ஆசிரியர். பட்ஜெட் செய்திகளை வகைப்படுத்தி வெளியிட அவர் யோசனைகள் கூற வருவார் என்று எண்ணியிருந்த காரியாலய சகாக்கள் அதிர்ச்சிக்கு உள்ளாயினர். காரியாலயத்துக்குப் போய்த் தமது வழக்கமான குட்டி பூஜையை முடித்த மறுகணம் அவர் ஆவி பிரிந்தது.

வங்க சங்கத்தின் தமிழ்த் தலைவர்

வங்கத் தொழில் வர்த்தக சங்கத்தின் தலைவராகத் திரு ஏ. எல். முதலியார் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேற்கு வங்கத்தின் தொழில் வர்த்தகத் துறையில் மிகப் பிரபலமடைந்து உன்னத நிலைக்கு உயர்ந்துள்ள இந்தத் தமிழரை வாழ்த்துகிறோம். பாரத ஒருமைப் பாட்டுக்கு இதனை ஓர் எடுத்துக் காட்டாகக் கொள்ளலாம். திரு ஏ.எல். முதலியார் ஐ. ஸி. ஐ. நிறுவனங்களுடன் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தொடர்புகொண்டு இன்று இந்திய, ஆல்கலி அண்டு கெமிக்கல் கார்ப்பொரேஷனின் நிர்வாக இயக்குனராகத் திகழ்கிறார். இந்திய ரசாயனப் பொருள் உற்பத்தியாளர் கழகத்தின் துணைத் தலைவரும்கூட.



முதலியார் அவர்கள் தலைமையில் வங்கத் தொழில் வர்த்தக சங்கத்தின் பணிகள் முதலிடம் பெற்றுப் பிரகாசிக்கட்டும்.

திடீர் மதிப்பு!

பிரதமருக்குத் திடீரென்று அரசியல் சட்டத்தின் மீது அக்கறை பிறந்துவிட்டது! அதனை உருவாக்கிய மாமேதைகளைப் போற்றத் தோன்றிவிட்டது! காரணம் திரு ஜே.பி. தேர்தல் முறையில் சீர்திருத்தம் வேண்டும் என்று வற்புறுத்துவதுதான்!

முப்பத்து மூன்று மாறுதல்களைச் செய்து சிதைத்தபோதெல்லாம் அரசியல் சட்டத்தின் புனிதம் கெடுவதாகப் பிரதமருக்குத் தோன்றவில்லை. இப்போது, 'அடடா! அரசியல் சட்டத்தில் கை வைக்கப் பார்க்கிறார்களே' என்று அலறுகிறார். போதாக்குறைக்கு மத்திய அரசாங்கத்தின் தகவல் பிரசார இலாக்கா, "அரசியல் சட்டத்தைக் காப்பாற்றுங்கள்!" என்று பத்திரிகைகளில் விளம்பரம் போட்டு ஒப்பாரி வைக்கிறது. நல்ல வேடிக்கை!

முருகப் பெருமான் 1

""ஸ்வாமி'' என்பது கடவுளுக்குப் பொதுப் பெயர் என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். பரமேசுவரனும் ஸ்வாமி, மகாவிஷ்ணுவும் ஸ்வாமி, விக்நேசுவரரும் ஸ்வாமி — எல்லாத் தெய்வங்களையும் ''ஸ்வாமி'' என்று வைத்துக் கொண்டிருக்கிறோம். இப்படி எந்த மூர்த்தியாகவும் இல்லாமல், இந்த எல்லாமாகவும் ஆகியிருக்கிற பரமாத்மாவை, பராசக்தியை, கடவுள் (God) என்று எந்த மதஸ்தராலும் சொல்லப்படுகிறவரையும் ''ஸ்வாமி'' என்றே சொல்கிறோம்.

ஆனால் இந்த ''ஸ்வாமி'' என்கிற பெயர் வாஸ்தவத்தில் ஒருத்தருக்குத்தான் உண்டு. இப்போது நாம் சொல்கிற மற்ற சாமிகள் எல்லாம் அந்த ஒருவரிடமிருந்துதான் அவர் பெயரையே கடனாகக் கேட்டு வாங்கித் தங்களுக்கும் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த நிஜமான ஸ்வாமி யார் என்றால் சுப்பிரம்மணியர்தான்; முருகன், முருகப் பெருமான் என்று இந்தத் தமிழ் தேசத்தில் தனியன்போடு சொல்லப்படுகிறவர்தான்.

'எதனால் இப்படிச் சொல்கிறீர்கள்?' என்று கேட்பீர்கள். சகல சித்தாந்திகளும் ஒப்புக் கொள்கிற 'அமர கோச'த்தின் ஆதாரத்திலேயே இப்படிச் சொல்கிறேன்.

அகராதி, நிகண்டு என்றெல்லாம் சொல்கிறோமல்லவா? சம்ஸ்கிருதத்தில் இருக்கிற பிரசித்தமான அகராதிக்கு 'அமரகோசம்' என்று பெயர். 'அமரம்' என்று சுருக்கிச் சொல்வார்கள். அதைப் பற்றியும் அதை எழுதினவனைப் பற்றியும் கொஞ்சம் சொல்ல வேண்டும். சுப்பிரம்மணியர் விஷயத்துக்கு இது நேராகச் சம்பந்தமில்லைதான். இருந்தாலும் இதில் பல ரஸமான விஷயங்கள் இருப்பதால் சொல்கிறேன். இதில் நம் பகவத்பாதாளின் பெருமை, மதங்களில் ஒன்றுக்கொன்று இருக்கப்பட்ட உறவுகளின் போக்கு எல்லாம் வெளியாவதால் சொல்கிறேன்.

இந்த அகராதிக்குப் பேர் 'அமர கோசம்' என்றேன். 'கோசம்' என்றால் 'பொக்கிஷம்' என்று அர்த்தம். சப்தக் கூட்டங்கள், சொற்களின் சமூகம் பொக்கிஷமாக இருக்கிற புஸ்தகத்துக்கு 'கோசம்' என்று பெயர் வந்தது. இம்மாதிரி சம்ஸ்கிருதத்தில் பல கோசங்கள் (அகராதிகள்) இருந்தாலும் ரொம்பவும் பிரசித்தமானது 'அமர கோசம்' தான்.

இதற்கு 'அமர' என்கிற பேர் எப்படி வந்தது? சம்ஸ்கிருதத்தை தேவபாஷை என்பார்கள்; தேவர்கள் அமிருதம் உண்பதால் அமரர் எனப்படுவார்கள்; எனவே தேவ பாஷை அமர பாஷை என்றும் சொல்லப்படும். (அதற்கேற்றாற்போல், சம்ஸ்கிருதம் செத்த மொழி (Dead language) என்று சொல்லிக் கொண்டு, அதைச் சாக அடிக்க எத்தனையோ யத்தனம் செய்தாலும், எப்படியோ அதுவும் அமரமாக இருந்து கொண்டேதான் வருகிறது.) அமர பாஷையில் உள்ள கோசம்தான் அமர கோசமா என்று தோன்றலாம்.

ஆனால் இந்தக் கோசத்துக்கு 'அமரம்' என்கிற பெயர் இப்படி வரவில்லை. அதை இயற்றியவனின் பெயரை வைத்தே அதற்கு 'அமரம்' என்று பெயர் வந்தது. அமரசிம்மன் என்பவனால் செய்யப்பட்டதால் அதற்கு 'அமரகோசம்' என்று பெயர்.

அமரசிம்மன் மகா புத்திமான். இந்த நிகண்டுவைப் பார்த்தால் அறிவில் அவனுக்கு ஈடு உண்டா என்று பிரமிப்பு உண்டாகும். ஒவ்வொரு விஷயத்தையும் அவ்வளவு நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டு அர்த்தம் சொல்கிறான். ஆனால் இவன் ஹிந்து அல்ல. அமரசிம்மன் ஒரு ஜைனன். (தொடரும்)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்



பால் பொங்கட்டும் மணம் தளிரட்டும்



1. பால் கெட்டியாக இல்லை.
2. வாடை வீசுகிறது.
3. காப்பிக்கு இந்தப் பால் பயன்படுகிற இல்லை. ஆனால் தேநீர் தயாரிக்கலாம்.
4. பதப்படுத்திய (டோன்ட்) பாலைவிட நிலைப்படுத்திய (ஸ்டாண்டர்டைஸ்ட்) பால் தயிருக்கு நன்றாக இருக்கிறது.
5. பதப்படுத்திய பாலைவிட நிலைப்படுத்திய பாலில் வாடை அதிகம்.
6. விலை அதிகம்.
7. பால் கூப்பன்களைப் புதுப்பிக்க நெடுந் தொலைவு (உதாரணமாக நுங்கம்பாக்கத்திலிருந்து நந்தனம்வரை) போக வேண்டியிருக்கிறது. அந்த அந்தப் பேட்டையிலேயே புதுப்பித்துக்கொள்ள வழிவகைகள் செய்தால் நலமாக இருக்கும்.

மாதவரம் பாலை உபயோகிப்போர் கூறும் இக்குறைகளைச் சுமந்துகொண்டு தமிழ்நாடு பால் வளத் துறையின் நிர்வாக இயக்குநர் திரு எல். எம். மென்ஸிஸ் ஐ.ஏ.எஸ். அவர்களை அணுகுகிறேன். அவரது ஏற்பாட்டுக்கிணங்க நகர விற்பனை அதிகாரி டாக்டர் சி. ஆர். சீதாராமன் அவர்களுடன் மாதவரம் பால் பண்ணைக்குச் செல்கிறேன். பால் உற்பத்தியின் எல்லாப் பாகங்களையும் உன்னிப்பாகப் பார்வையிடுகிறேன். கறவை மாடுகள், காளைகள், கன்று போடவிருக்கும் பசுக்கள் என்று இனம் பிரித்து அவைகளைத் தொழுவத்தில் கட்டி வைத்துள்ள செம்மையான முறை, செயற்கைக் கருத்தரிப்பு ஏற்பாடுகள், மாடுகளுக்குப் போடப்படும் புஷ்டியுள்ள தீவனம், மருத்துவ வசதிகள் இவற்றைப் பார்க்கும்போது மகிழ்ச்சியாகவே இருக்கிறது. சுமார் 800 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மாதவரம் பால் பண்ணையில் 85 ஏக்கர் நிலத்தில் தீவனத்துக்கென்றே காராமணி, சோளம், புல் வகைகள் இவற்றை விவசாயத்துறைப் பட்டதாரிகள் மேற்பார்வையில் விஞ்ஞான முறைப்படி பயிர் செய்கின்றனர்.

இவ்வளவு உயர்ந்த ரகத் தீவனங்களைத் தின்று வளரும் மாடுகள் தரும் பால், புட்டிகளில் வரும்போது ஏன் 'ஒரு மாதிரி'யான வாடை வீசுகிறது? பால் பண்ணை உற்பத்தி அதிகாரி திரு ஜார்ஜ் தரும் விளக்கம் :

''பால் எந்த வாசனையையும் எளிதில் கிரகித்துக் கொள்ளும் தன்மையுடையது. அதனால்தான் பால் கறப்பதற்கு முன் ஒரு மணி நேரத்துக்கு மாட்டுக்குத் தீவனம் வைக்கிறதில்லை. சென்னை நகரில் நாங்கள் வினியோகம் செய்கிற ஒரு லட்சம் லிட்டர் பாலும் இப்பண்ணையிலேயே கறக்கப்படுவது அல்ல. இங்குள்ள மாடுகள் தரும் பால், நாளைக்குச் சராசரி 2000 லிட்டர் தான். பாக்கியெல்லாம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து சேரும் பாலும், ஐ. நா.வின் ஆதரவில் செயல்படும் உலக உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் நமக்குக் கிடைக்கும் பால் பவுடரும் 'பட்டர் ஆயி'லும் ஆகும்.''

''பால் கெட்டியாக இல்லை என்று வாங்குவோர் குறைப்படுகிறார்களே:''

''கொழுப்புச் சத்து அதிக அளவில் நமக்குத் தேவையில்லை. எண்ணெய், நெய் இவை போதிய அளவு நமது சமையல் முறை, உணவுப் பழக்கம் காரணமாக நமக்குக் கிடைத்துவிடுகிறது. எனவே 3 சதவிகிதம் கொழுப்புச் சத்து பாலில் இருந்தால் போதும். பதப்படுத்திய பாலில் 8.5 சதம் புரதச் சத்து இருக்கிறது. உடல் வளர்ச்சிக்குப் புரதச் சத்து இன்றியமையாதது. சத்துள்ள தூய்மையான பாலைப் புட்டிகளில் அடைத்து நாங்கள் விநியோகம் செய்தாலும் சிலர் புகார் கூறுகிறார்கள்.''

''பதப்படுத்திய பாலை மோர் விட்டுத் தோய்த்தால் தயிர் கெட்டியாக இல்லை என்று கூறுகிறார்களே, அதில் நியாயம் இல்லை என்றுகூறுகிறீர்கள்?''

''சாதத்தில் தயிர் விட்டுப் பிசைந்தால்விரல்களில் 'கொழ கொழ' வென்று வெண்ணெய்ப் பசை படிய வேண்டும் என்று நாம் சகஜமாக எதிர்பார்ப்போம். பதப் படுத்திய பாலில் தயாராகும் தயிர் அப்படி இராது தான். ஆனால் அது காரணமாகவே தயிர் தரக் குறைவானது என்று எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை. தேவையான சத்து இருக்கிறது.''

''தயிர் சரியாகத் தோய்வதில்லை, சீக்கிரம் புளித்து விடுகிறது என்கிறார்களே—அது ஏன்?''

''தயிருக்காகப் பாலைக் காய்ச்சும்போது பால் கொதிக்கும் அளவுக்குக் காய்ச்சக் கூடாது. எழுபது டிகிரி சூடு ஏறினால் போதும். வெதுவெதுப்பான சூடு இருக்கும்போது ஒரு லிட்டர் பாலுக்கு ஒரு டேபிள் ஸ்பூன் அளவு மோர் விட்டுக் கலக்கினால் பால் நன்றாகத் தோய்ந்துவிடும்.''

''கலக்க வேண்டியது அவசியமா? மோர் பாலுடன் தானாகவே கலந்து கொண்டு விடாதா?''

''பாலைக் காய்ச்சியதும் எப்படியும் அதன் மேல் மட்டத்தில் இலேசாக ஆடை படிந்து விடும். மோரை விட்டுக் கலக்காவிடில் மோர் ஆடையின் மீது மேல் மட்டத்திலேயே தங்கி விடக் கூடும். பாத்திரத்தின் அடிப் பாகத்திலுள்ள பாலில் புளிப்பு ஏறாது. இன்னொன்றும் கூறவேண்டும். தினமும் நம் வீட்டு மோரை விட்டுத் தோய்ப்பதற்குப் பதில் வேறு பாலில் தயாரான தயிர் அல்லது மோரைப் பயன்படுத்திப் பாருங்கள்! தயிர் நன்றாக இருக்கும்!''

''பாலின் விலையை உயர்த்தி விட்டீர்களே?'' என்று நிர்வாக இயக்குநர் திரு பென்னிஸ்ஸிடம் கேட்கிறேன். அவர் தரும் விளக்கம்:

''இப்போது மாட்டுத் தீவனம் விலை உயர்ந்துள்ளது. கடலைப் பிண்ணாக்கின் விலை மும்மடங்கு உயர்ந்துள்ளது. மாட்டுக்கு இன்றியமையாத புரதச் சத்து கடலைப் பிண்ணாக்கில் நிரம்ப இருப்பதால் அதனை என்ன விலையானாலும் வாங்கியே தீர வேண்டும். தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பால் வாங்கிச் சேகரித்து அதைச் சென்னைக்கு எடுத்து வர வேண்டும். டீசல், பெட்ரோல் விலை உயர்ந்துள்ளது. மாடு வைத்துப் பராமரிப்பவர்களுக்கு நாங்கள் மருத்துவ வசதி, செயற்கைக் கருத்தரிப்பு ஆலோசனை வழங்குவது முதலிய வசதிகள் அளித்தாலும் மற்றப் பண்டங்களின் விலை உயர்வதால் அவர்கள் எங்களுக்கு விற்கும் பாலின் விலையும் அதிகரிக்கத்தானே செய்யும்?''



பால் பாட்டில்கள் லாரியில் வந்து இறங்குகின்றன.

''நிலைப்படுத்திய பாலுக்குப் பதில் இப்போது பதப்படுத்திய பால் விநியோகிக்கிறீர்களே — காரணம் என்ன?''

திரு பென்னிஸ் கூறுகிறார்: ''டெய்ரி கார்ப்பரேஷன் தோன்றுவதற்கு முன்பு 40 ஆயிரம் முதல் 50 ஆயிரம் லிட்டர் பால் மட்டுமே வழங்கி வந்தார்கள். இப்போது ஒரு லட்சம் லிட்டர் பால் தினமும் உற்பத்தி செய்து தாம்பரம் வரை சென்னை நகரில் விற்பனை செய்கிறோம். பற்றாக்குறைக் காலத்தில் சிலருக்குப் பால் இல்லை என்று சொல்லி விட முடியுமா? பதப்படுத்திய பாலில் 3 சதவிகிதம் கொழுப்புச் சத்து உள்ளது. நிலைப் படுத்திய பாலில் நாலரைச் சதவிகிதம் உண்டு. அதனால் அனைவருக்குமே பதப்படுத்திய பால் வழங்குகிறோம். சில மாதங்களில் நிலைமை சரியானதும் நிலைப்படுத்திய பாலையே வழங்க முடியும்.''

''பம்பாயில் இதைவிட நல்ல பால் வழங்கப்படுகிறதாமே?''

''அது வெறும் பிரமை! அயல்நாடுகளிலிருந்து வந்திருந்த பால் துறை நுணுக்கங்கள் நன்கறிந்த சில பிரமுகர்கள் பம்பாய், டெல்லி, கல்கத்தா முதலிய நகரங்களில் உள்ள பால் பண்ணைகளை விட இதுவே மிகச் சிறந்தது என்று நற்சான்று வழங்கியுள்ளனர். அமுல் பண்ணை மாடலில் மாதவரம் பண்ணையை அமைத்து வருகிறோம். அங்கு 800 கூட்டுறவு நிறுவனங்களை அமைத்துப் பால் உற்பத்தி செய்கிறார்கள். தமிழ் நாட்டில் 900 கூட்டுறவு அமைப்புக்களை விவசாயிகளைக் கொண்டே உருவாக்கிப் பால் உற்பத்தி செய்கிறோம். பம்பாயில் ஒரு குடும்பத்துக்கு



''.....பால் எந்த வாசனையையும் எளிதில் சேர்த்துக் கொள்ளும். அதனால்தான் பால் கறப்பதற்கு முன் சில மணி நேரத்துக்கு மாட்டுக்குத் தீவனம் வைக்கிறதில்லை....''

இரண்டு புட்டி பால் மட்டுமே கொடுக்கிறார்கள். முதல் புட்டிக்கு விலை குறைவு. இரண்டாவது புட்டிக்குக் கூடுதலாக விலை கொடுக்க வேண்டும். நாங்கள் நிர்ணயித்துள்ள விலை அதைவிட மிகக் குறைவு.''

''அம்பத்தூரில் ஒரு பால் உற்பத்திச்சாலை தொடங்கப்படவிருக்கிறதென்று திரு ஜார்ஜ் கூறினாரே?''

''ஆமாம். பால் மிகுதியாகக் கிடைக்கிற பருவத்தில் வழக்கமாகப் பால் பண்ணைக்கு 'சப்ளை' செய்கிறவர்களிடம் வேண்டாம் என்று சொல்லிவிட முடியாது. நவீன பால் பண்ணைக்கு ஒரு பால் பவுடர் தொழிற்சாலை அத்தியாவசியம். மிகுதியான பாலைப் பவுடர் தயாரித்துக் கொள்ளப் பயன்படுத்தலாம். பற்றாக்குறைக் காலத்துக்கு இப்பவுடர் பயன்படும். மேலும், குழந்தை உணவு தயாரிக்கவும் பயன்படும். அதற்கான ஏற்பாடுகளும் நிறைவு பெறும் கட்டத்தில் இருக்கின்றன'' என்கிறார் திரு மென்னிஸ். தலைமைப் பொறுப்பு வகிக்கும் ஐ. ஏ. எஸ். அதிகாரியாகப் பணியாற்றி வந்தாலும் பால் பண்ணையைப் பற்றியும், கால் நடை பற்றியும் எல்லா நுணுக்கங்களையும் இவர் திட்டவட்டமாகத் தெரிந்து கொண்டிருப்பது நமக்கு வியப்பளிக்கவே செய்கிறது. பால் வழங்கும் 'டீயோஸ்க்'களுக்குத் திரு மென்னிஸ் திடீர் விஜயம் செய்கிறார்.

பால் கூப்பன்களைப் புதுப்பிக்கச் சில பகுதிகளில் வசிப்போர் அதிகத் தொலைவு செல்லும் படி இருக்கிறது என்ற புகார் பற்றி நகர விற்பனை அதிகாரி டாக்டர் சீதாராமனிடம் கேட்டதற்கு அவர் கூறுகிறார்: ''சில வட்டாரங்களில் கூப்பன் வழங்குவதற்கு அலுவலகம் தொடங்க நாங்கள் விரும்பினாலும் இடம் கிடைப்பது அரிதாக இருக்கிறது. ரூபாய் 2000 வரை 'பக்ஷீஷ்' கேட்கிறார்கள்.''

''பால் வழங்கும் 'டீயோஸ்க்' இலேயே புதிய கூப்பன்களை வழங்கவும் ஏற்பாடு செய்ய முடியாதா?''

''அதில் நடைமுறைச் சிக்கல்கள் சில உள்ளன. 'டீயோஸ்க்' அலுவலரிடம் பெருந் தொகை தங்கிவிடும். அதனைப் பண்ணைக்கோ பாங்குக்கோ எடுத்துச் செல்ல போலீஸ் பாதுகாப்பு வழங்க வேண்டியிருக்கும். சென்னையில் நல்ல கட்டடங்களில் இயங்கும் அலுவலகங்களில் இந்தியன் பாங்கி அதிகாரிகள் நேரில் வந்து பணத்தை வாங்கிக்கொண்டு ரசீது கொடுக்கிறார்கள். 'டீயோஸ்க்' அலுவலரிடம் ஆயிரக் கணக்கில் பணம் புழங்க அனுமதித்தால் 'ஜாமீன்' தொகை வசூலிக்க நேரிடும். அதற்கென்று குமாஸ்தாக்களை நியமிக்க வேண்டும். செலவு அதிகமாகும். பாலின் விலையும் கூடுதலாகக் கூடுமே!'' என்கிறார்.

''வேண்டாம்! இப்போதுள்ள நிலைமையே நீடிக்கட்டும். பாலின் விலையை உயர்த்த வேண்டாம்!'' என்று கூறி விடைபெறுகிறேன்.

—ரா.பா.



ஒருநாள் அதிகாலை சிறுவன் தனது அம்மாவை எழுப்பினான்.

''மிகவும் பிரமாதமான கனவு கண்டேன் அம்மா!'' என்றான்.

''என்ன கனவு கண்டாய்?'' என்று கேட்டாள் தாய்.

மகன் கனவைச் சொல்ல ஆரம்பித்தான். சற்று யோசித்தான். பிறகு, ''அம்மா, என்னால் சரியாகச் சொல்ல முடியாது. நீயே சொல்!'' என்றான்.

அம்மா சிரித்துக் கொண்டே, ''நீதான் கனவு கண்டது: நான் இல்லையே!'' என்றாள்.

''ஆனால் நீயும்தானே அதில் இருந்தாய்!'' என்றான் மகன்.

மினி நியூஸ்

தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைமருதூருக்கு அருகே சூரியனுக்கு சூரியனார் கோயில் என்று ஓர் இடம் இருக்கிறது. நம் நாட்டில் ஒன்பது இடங்களில் சூரியனுக்குத் தனியாகச் சந்நிதிகள் இருக்கின்றன. முதல் சூரியன் கோயில் ஏற்பட்ட இடம் மூல்டான்.

-கே. வேங்கடராமன்

மிருதங்கம்

பையன் அம்மாவிடம் சொன்னான்:

''நமது வீட்டுக்குக் கீழ் மாடியில் இருக்கும் மாமாவுக்கு நான் மிருதங்கம் வாசிப்பது மிகவும் பிடித்திருக்கிறது என்று நினைக்கிறேன்.''

''எதனால் அப்படி நினைக்கிறாய்?'' என்று கேட்டாள் தாய்.

''ஏன் என்றால் அவர் என்னிடம் ஒரு கத்தியைக் கொடுத்து என் மிருதங்கத்தின் உள்ளே என்ன இருக்கிறது என்று கத்தியினால் கிழித்துப் பார்க்கச் சொல்லியிருக்கிறார்!''



இப்போது வருகிறது...

அதிக சிக்கனமான
பிஜ்!

லாபமளிப்பதில் மற்றெல்லா துப்புரவு பவுடர்களையும் விடச் சிறந்தது.

புதிய
500 கிராம்
மீடியம் பேக் விலை
ரூ. 1.75
மட்டுமே!
(வரிகள் தனி)





பிஜ் மட்டுமே புதிய 500கிராம் மீடியம் பேக்கில் வருகிறது. அதுவும் ரூ. 1.75 விலையில் (வரிகள் தனி). இன்னமும் அதிக சேமிப்புக்காக முதலில் மீண்டும் மீண்டும் பயனுறும் பிஜ் பவுடர் பிளாஸ்டிக் டப்பாவில் வாங்கி பாருங்கள். பின்னர் அதன் காலி டப்பாவில் அதிக சிக்கனமான 5 கி.-வில் அல்லது 2 கி.-வில் பேக்கிலிருந்து பிஜ் நிரப்பிக்கொள்ளுங்கள். இதனுல் உங்கள் சமையலறை மற்றும் கண்ணாடிப் பாத்திரங்கள், தரை மற்றும் குளியலறையை சுத்தம் செய்யுங்கள். பின்னர் பாருங்கள். அவை தந்திடும் கண்ணைப் பறிக்கும் பளபளப்பை கூடவே, என்றும் கண்டிராத சேமிப்பை!

பிஜ் — கோத்ரெஜ் தயாரிப்பு

சிறப்பாகத் துலக்கிடும் பவுடர்
சிக்கனத்திற்கு இணையற்ற யோசனை!



சிவகாமியின் சபதம்

அமரர்

கல்கி

ஐம்பதாம் அத்தியாயம்

சிவகாமியின் சபதம்

உட்கார்ந்திருந்த சிவகாமி சட்டென்று எழுந்து நின்றாள். அவளுடைய உதடுகள் துடித்தன. புருவங்கள் மேலேறின. கண்களிலிருந்து மின்னல் கிளம்பிப் புத்த பிக்ஷுவைத் தாக்கின.

''கள்ளப் பிக்ஷுவே! எதற்காக என்னிடம் மன்னிப்புக் கேட்கிறீர்? எனக்கு என்ன அபசாரம் செய்தீர்?'' என்ற சொற்கள் சீறிக்கொண்டு பாயும் அம்புகளைப் போலச் சிவகாமியின் வாயிலிருந்து புறப்பட்டன.

பிக்ஷு திகைத்துப் போனார். தவறாக எதையோ சொல்லிவிட்டோம் என்ற உணர்ச்சியினால் ஏற்பட்ட தடுமாற்றத்துடன், ''ஆம், சிவகாமி! நான் உனக்குப் பெருந் தீங்குதான் செய்துவிட்டேன். எல்லாம் விவரமாகச் சொல்ல வேண்டும். அவசரமாக இரண்டொரு வார்த்தையில் சொல்லக் கூடிய விஷயம் அல்ல. தயவுசெய்து சற்றுச் சாவதானமாக உட்கார்ந்து கேள்!'' என்றார்.

''ஐயா! விவரமாக எல்லாம் சொல்வதற்கு முன்னால் ஒரு விவரம் சொல்லும். நீர் யார்? கருணாமூர்த்தியான கௌதம புத்தரின் சங்கத்தைச் சேர்ந்து சர்வ பரித்யாகம் செய்த துறவியா? அல்லது வஞ்சக நோக்கத்துடன் காவித் துணி வேஷம் தரித்த சளுக்க குலத்துச் சக்கரவர்த்தியா? சிற்ப சித்திரக் கலை


களிலும் பரத நாட்டியக் கலையிலும் உண்மை அபிமானம் கொண்ட பரதேசியா? அல்லது ஓர் ஏழைச் சிற்பி மகளைக் கெடுப்பதற்காகப் பிக்ஷு வேஷம் பூண்ட இராவண சந்நியாசியா? நீர் யார்? நாகநந்தியா? புலிகேசியா?''

இவ்விதம் கேட்டுச் சிவகாமி நிறுத்தியபோது, வானமுகட்டில் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலை வரையில் அதிர்ந்து நடுங்கும்படியாக மின்னல் மின்னி இடி இடித்து ஓய்ந்தது போல் இருந்தது.

இவ்வளவு இடி மின்னல்களும் நாகநந்தியின் முக பாவத்தில் எவ்வித மாறுதலையும் உண்டு பண்ணவில்லை. அவர் அதிசயமான அமைதியுடன், ''அம்மா சிவகாமி! உன்னுடைய சந்தேகங்களுக்குக் காரணம் இல்லாமல் போகவில்லை. ஆனால், உண்மையிலேயே நான் உலகப் பற்றறுத்த புத்த பிக்ஷுதான். உன்னுடைய பரத நாட்டியக் கலைக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்தவன்தான். விலங்கு இனத்தைச் சேர்ந்த மக்களின் முன்னால் தெரு வீதிகளில் உன்னை நடனமாடச்செய்த நிர்மூடப் புலிகேசி நான் அல்ல. பூர்வ ஜன்மத்தில் செய்த பாவத்தினால் அவனோடு உடன் பிறந்த துரதிருஷ்டசாலி நான். முன்னொரு சமயம் இருபத்தைந்து வருஷங்களுக்கு முன்னால் என் தம்பி புலிகேசியைக் கொலைகாரர்களிடமிருந்து காப்பாற்றுவதற்காக அவனுடைய உடையை நான் அணிந்து நடித்தேன். மறுபடியும் இருபத்தைந்து வருஷங்களுக்குப் பின் உன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவ்விதம் செய்தேன். ஆம், சிவகாமி! காஞ்சிக் கோட்டைக்கு வெளியே காட்டின் நடுவே எனக்கு முன்னால் நீ கை கூப்பி வணங்கி, 'என் தந்தையைக் காப்பாற்றுங்கள்!' என்று வேண்டிக் கொண்டாய். அதை நிறைவேற்றுவதற்காகத் துறவியின் காஷாயத்தைக் களைந்துவிட்டுச் சக்கரவர்த்தியின் ஆடைகளை அணிந்து கொண்டேன்'' என்றார்.

சிவகாமி பரபரப்புடன் பிக்ஷுவின் அருகில் ஓடிவந்தாள். மண்டியிட்டுக் கைகூப்பிய வண்ணம், ''சுவாமி! இந்த அபலைப் பெண்ணின் ஆத்திர மொழிகளை மன்னித்து விடுங்கள். என் தந்தையைத் தாங்கள் காப்பாற்றினீர்களா? அவர் உயிரோடிருக்கிறாரா? எங்கே இருக்கிறார்? எப்படி இருக்கிறார்?'' என்று அலறினாள்.

''அம்மா! உன் தந்தையின் உயிரைக் காப்பாற்றினேன். உனக்கு நான் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றி விட்டேன். கொஞ்சம் அமைதியாக



உட்கார்ந்து கேட்டால் எல்லா விவரங்களும் சொல்கிறேன்'' என்றார் பிக்ஷு.

சிவகாமி உட்கார்ந்தாள். தாம் புலிகேசிபோல் வேஷந் தரித்துச் சென்று கையும் காலும் வெட்டப்படுவதற்கிருந்த ஆயனரைக் காப்பாற்றியதையும், ஆனால் அவர் தவறி மலைமீதிருந்து கீழே விழுந்ததையும், அதனால் கால் முறிந்ததையும், உணர்விழந்த நிலையில் அரண்ய வீட்டுக்குக் கொண்டு போய் அங்கு அவருக்கு உணர்வு வந்த பிறகு விடை பெற்று வந்ததையும் புத்த பிக்ஷு சொல்லிவந்தபோது சிவகாமிக்கு அவரிடம் எல்லையற்ற நன்றி உணர்ச்சி உண்டாயிற்று. தான் அவரைக் குறித்துச் சந்தேகித்ததெல்லாம் எவ்வளவு தவறு என்று அடிக்கடி நினைத்துப் பச்சாதாபப் பட்டாள். நீர் ததும்பிய கண்களினால் பிக்ஷுவைப் பார்த்துச் சொன்னாள்: ''சுவாமி! என் அருமைத் தந்தையைக் கொடிய தண்டனையிலிருந்து மீட்டு அவருடைய உயிரையும் காப்பாற்றிய தங்களுக்கு என் ஆயுள் உள்ளவரையில் நன்றிக் கடன் பட்டிருக்கிறேன். அப்படியிருக்கும்போது, தாங்கள் இங்கு வந்ததும் என்னிடம் மன்னிப்புக் கேட்டீர்களே, அது ஏன்? தங்களை அநியாயமாகச் சந்தேகித்ததற்காக நான் அல்லவா தங்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும்! சளுக்க சக்கரவர்த்தியும் தாங்களும் ஒருவரேதான் என்று தவறாக எண்ணியதனால், தங்களைப் பற்றி அநியாயமாகச் சந்தேகப்பட்டேன். என்னை இந்த வாதாபிக்கு அழைத்து வந்தவரும், நாற்சந்தியில் நடனமாடச் செய்தவரும் தாங்கள்தான் என்று எண்ணிக் கோபங் கொண்டிருந்தேன். சுவாமி! என்னை மன்னித்துவிடுங்கள்!'' என்று சிவகாமி கூறியபோது அவளுடைய கண்களில் நீர் தாரையாகப் பெருகியது.

''சிவகாமி! நான் உன்னை மன்னிக்க வேண்டிய அவசியமில்லை. உண்மையிலேயே நீதான் என்னை மன்னிக்க வேண்டும். உனக்கு நான் பெரிய துரோகம் செய்திருக்கிறேன்; இன்று இந்தத் தூர தேசத்தில் நீ தன்னந் தனியாகச் சிறைப்பட்டிருப்பதற்குக் காரணம் நான்தான்! என்னை மன்னித்துவிடு!''

இவ்விதம் புத்த பிக்ஷு உணர்ச்சியினால் கம்மிய குரலில் கூறியபோது, சிவகாமி தன் கண்களில் பெருகிய கண்ணீரைத் துடைத்துக்கொண்டு நாகநந்தியின் முகத்தை வியப்புடன் ஏறிட்டுப் பார்த்தாள்.



''ஆம், சிவகாமி! நான் சொல்வது சத்தியம். வாதாபிச் சைனியம் காஞ்சியின் மீது படையெடுத்து வருவதற்குக் காரணமாயிருந்தவன் நான்தான். என் சகோதரன் புலிகேசிக்கு முதலில் அந்த உத்தேசம் இருக்கவில்லை. வாதாபிச் சைனியம் முழுவதும் வேங்கியை நோக்கிப் போவதாயிருந்தது. வாதாபிச் சைனியத்தை இரண்டாகப் பிரித்துப் புலிகேசியைக் காஞ்சிக்கு விரைந்து வரும்படி கூறியவன் நான்தான். வேங்கி இராஜ்யத்தின் மீது படையெடுக்கத் தம்பி விஷ்ணுவர்த்தனனை அனுப்பினால் போதும் என்றும் எழுதினேன். அதன் பலன் என்ன விபரீதமாயிற்று, தெரியுமா? விஷ்ணுவர்த்தனனுடைய பத்தினி இன்று விதவையாயிருக்கிறாள், அவளையும், அவளுடைய சின்னஞ் சிறு



புதல்வனையும் இன்றைய தினம்தான் இந்நகரில் பத்திரமாகக் கொண்டுவந்து சேர்த்தேன்...''

''சுவாமி! இத்தனை நாளும் இந்த நகரில் தாங்கள் இருக்கவில்லையா?'' என்று சிவகாமி கேட்டாள்.

''இல்லை, சிவகாமி! இருந்திருந்தால் உன்னுடைய தெய்விக நடனக் கலை இப்படிச் சந்தி சிரிப்பதற்கு விட்டிருப்பேனா? கலை உணர்ச்சி இல்லாத நிர்மூடப் புலிகேசி இப்படிச் செய்துவிட்டான்! அவன் இவ்விதம் செய்வான் என்று தெரிந்திருந்தால் வட பெண்ணைக் கரையில் உன்னை அவனிடம் ஒப்படைத்திருக்க மாட்டேன்.''

பிக்ஷு வடபெண்ணைக் கரையைப் பற்றிக் கூறியதும் அன்றொரு நாள் இரவு சிவகாமி கண்ட கனவுத் தோற்றம் அவள் நினைவுக்கு வந்தது. ''வடபெண்ணைக் கரையில் என்னை விட்டு விட்டுப் போனீர்களா? அது எப்படி? உங்களைக் காஞ்சிக்குப் பக்கத்தில் அல்லவா நான் பார்த்து வரம் கேட்டேன்?'' என்றாள்.

''சக்கரவர்த்தி வேஷம் பூண்டு உன் தந்தையைக் காப்பாற்றிய பின் உடனே என் வேஷத்தைக் கலைத்துவிடவில்லை, சிவகாமி! அதே வேஷத்தில் மகேந்திர பல்லவனுடன் போரிட்டேன். மணிமங்கலத்தில் அவனை முறியடித்துவிட்டு உன்னைத் தொடர்ந்து வந்தேன். பொன்முகலி நதிக் கரையில் நீ என்னைப் பார்த்து, சிறைப்பட்ட பல்லவ நாட்டுப் பெண்களையெல்லாம் விடுதலை செய்ய வேண்டும் என்று வரம் கேட்டாய். வாதாபிக்கு நீ மனத் திருப்தியுடன் வருவதாய் இருந்தால் அவர்களை விடுதலை செய்வதாகச் சொன்னேன். நீயும் சம்மதித்தாய். அப்போது உன்னையும் நான் விடுதலை செய்து உன் தந்தையிடம் சேர்ப்பித்திருக்கலாம். அப்படி நான் செய்யவில்லை. உன்னை வஞ்சித்து வாதாபிக்குக் கொண்டு வந்தேன்! உன்னிடம் நான் மன்னிப்புக் கேட்டுக் கொண்டது ஏன் என்று தெரிகிறதா, சிவகாமி!'' என்றார் பிக்ஷு.

''தெரிகிறது, சுவாமி! இதற்கு முன் எனக்குக் குழப்பம் அளித்துக் கொண்டிருந்த இன்னும் பல விஷயங்களும் விளங்குகின்றன. ஆனால், ஒரே ஒரு சந்தேகம் மட்டும் இன்னும் தீரவில்லை. எதற்காக இவ்வளவெல்லாம் நீங்கள் செய்தீர்கள்? எதற்காக இவ்வளவு சூழ்ச்சிகளும் பிரயத்தனங்களும் செய்து இந்த அபலைப் பெண்ணை இங்கே கொண்டு வந்து சேர்த்தீர்கள்? உலகத்தைத் துறந்து பிக்ஷு விரதம் பூண்ட தங்களுக்கு இந்த ஏழைப் பெண்ணால் என்ன உபயோகம்? கால் ஒடிந்து ஆதரவற்றுக் கிடக்கும் என் தந்தையிடமிருந்து என்னைப் பிரித்துக் கொண்டு வந்ததில் தாங்கள் என்ன லாபத்தைக் கண்டீர்கள்! என்ன பலனை உத்தேசித்து என்னை இங்கே சிறைப்படுத்தி வைத்திருக்கிறீர்கள்?''

''சிவகாமி! சொல்கிறேன், கேள்! என் சொற்படி காலமல்லாத காலத்தில் காஞ்சி மேல் படையெடுத்த காரணத்தினால் வாதாபியின் வீர சைனியத்தில் பாதிக்கு மேல் அழிந்து விட்டது. வேங்கியை வென்று, சென்ற வருஷம் மகுடம் சூடிய விஷ்ணுவர்த்தனன் அந்த வெற்றியை நிலைநாட்டிக்கொள்ள முடியாமல் மாண்டான். இந்த விபரீதங்களுக்கெல்லாம் காரணமானவள் நீதான்! உன்னை முன்னிட்டுத்தான் இதை



புள்ளியிட்ட கோட்டிற்கு வெட்டவும்.

பக்கத்திலுள்ள கூப்பனை வெட்டி எடுங்கள் அதில் உங்கள் பெயரையும், முகவரியையும் ஆங்கிலத்தில் பூர்த்தி செய்து, கூப்பனில் உள்ள முகவரிக்கு போஸ்ட் செய்யுங்கள். (தபாலில் அனுப்புங்கள்) உங்களுக்கு ஒரு விசேஷ தள்ளுபடிச் சீட்டு அனுப்பப்படும். அந்தச் சீட்டை உங்கள் டீலரிடம் கொடுங்கள். அவர் பட்டியல் விலையைவிட ரூ. 1.50 குறைந்த விலையில் ஹேலோ வெய்ல் ஆ:ப் லவ் டால்க் எகானமி சைஸ் டப்பா ஒன்று கொடுப்பார். இந்த விசேஷ சலுகை குறுகிய காலத்திற்கு மட்டுமே உண்டு. எனவே முந்துங்கள். இன்றே கூப்பனை தபாலில் சேருங்கள்.

COUPON K

To
Halo Veil of Love Talc D.O.
C/o Colgate-Palmolive (India) Pvt. Ltd.
12-A Ritchie Street, Madras 600 002.

Dear Sirs,
I would like to have my Halo Veil of Love Talc discount voucher sent to :

Name ______________________

Address ______________________

____

HT.G.I TH

ஸ்ரீ வைஷ்ணவ சபா, கல்கத்தா (Regd.)

நான்காவது ஆண்டு விழா

சங்கதா கதா நந்தினி

குமாரி A. சூடாமணி அவர்களால்

வால்மீகி ராமாயணம், சங்கீத உபந்நியாசம்

கல்கத்தா, P-94, ராஜா பஸந்த்ராய் ரோடில் அமைந்துள்ள மைசூர் அஸோஸியேஷன் ஹாலில் நடைபெறும்

நிகழ்ச்சி நிரல்

1975 மார்ச் மாலை

23வ.	6 மணி	ராமாவதாரம்
24வ.	7 மணி	விசுவாமித்ர யாகம்
25வ.	7 மணி	சீதா கல்யாணம்
26வ.	7 மணி	குக-பரத சமாகமம்
27வ.	6 மணி	பாதுகா பட்டாபிஷேகம்
28வ.	6 மணி	சுக்ரீவ சகாயம்
29வ.	6 மணி	அங்குல்ய பிரதானம்
30வ.	6 மணி	விபீஷண சரணாகதி
31வ.	7 மணி	ராவண வதம்
ஏப்ரல் 1வ.	7 மணி	ஸ்ரீ ராம பட்டாபிஷேகம்



திருமதி பர்வதம்மாள் (*Mrs. S.P.S. Iyer of Rangoon*) 1881ம் ஆண்டு செப்டம்பர் மாதம் பிறந்தார். அவர் ரங்கூனில் பல ஆண்டுகள் சமூக சேவை புரிந்தார். அவர் இந்திய மாதர் சங்கத்தின் காரியதரிசியாகவும், தலைவராகவும் சிறப்புறப் பணியாற்றியுள்ளார். அன்னாருக்கு அநேக பேரன்களும், பேத்திகளும் உள்ளனர். அப்பெருமாட்டி சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்து பிப்ரவரி மாதம் 21வ. சிவலோக பிராப்தி அடைந்தார். அவர் ஆன்மா சாந்தி அடைவதாக.

Dr. C. S. V. Rajappa &
Mrs. S. Alamelu B. A., B. Ed
Sons and grand sons & grand daughters

யெல்லாம் நான் செய்தேன். ஏன் என்று சொல்கிறேன், கேள்!''

இந்தப் பூர்வ பீடிகையுடன் நாக நந்தி பிக்ஷு தமது கதையைக் கூறத் தொடங்கினார். அஜந்தாக் குகைகளில் தாம் கழித்த இளம் பிராய வாழ்க்கையைப் பற்றிக் கூறினார். அஜந்தாக் குகைச் சுவரில் தாம் பார்த்த பரத நாட்டியப் பெண் சித்திரத்தைக் குறித்தும் அதைப் பற்றித் தாம் கண்ட மனோ ராஜ்யக் கனவுகளைக் குறித்தும் சொன்னார். தென்னாட்டின் நிலைமை எப்படியிருக்கிறதென்று அறிந்து கொள்ளத் தாம் யாத்திரை வந்தது பற்றியும், அப்போது ஆயனர் வீட்டில் அஜந்தா சித்திரக் கன்னிகை உயிர் பெற்று வந்து நடனமாடிய காட்சியைக் கண்டு பிரமித்தது பற்றியும் உணர்ச்சி ததும்ப விவரித்தார்.

''சிவகாமி! அன்றுமுதல் நான் ஒரு புது மனிதன் ஆனேன். சளுக்க சாம்ராஜ்யத்தின் மகோந்நதத்தைப் பற்றி அதுவரை நான் கட்டிக் கொண்டிருந்த ஆகாசக் கோட்டைகள் தகர்ந்து விழுந்தன. இந்தப் பரந்த பரத கண்டம் முழுவதையும் புத்த சங்கத்தின் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர வேண்டும் என்றும், அப்பேர்ப்பட்ட மகா புத்த சங்கத்துக்கு நான் தலைமைப் பிக்ஷு ஆகவேண்டும் என்றும் நான் கொண்டிருந்த மனோரதங்களும் மறைந்தன. 'சாம்ராஜ்யங்களும் புத்த சங்கங்களும் எப்படியாவது போகட்டும். உன்னை நடனமாடச் சொல்லிப் பார்த்துக் கொண்டே என் வாழ்நாளைக் கழித்து விடுவது' என்று சங்கல்பம் செய்து கொண்டேன். அதற்குப் பிறகு உன்னை எப்படி இந்த வாதாபி நகருக்குக் கொண்டு சேர்ப்பது என்பது ஒன்றே என் மனக் கவலை ஆயிற்று. அதற்காக என்னவெல்லாமோ சூழ்ச்சிகள் செய்தேன்; எத்தனையோ உபாயங்களைக் கையாண்டேன்.''

இப்படி பிக்ஷு சொல்லி வந்தபோது சிவகாமியின் உள்ளத்தில் ஏற்கனவே குடிகொண்டிருந்த பெருமிதமான கர்வமும் பரிதாப உணர்ச்சியும் சேர்ந்தாற் போல் பொங்கிக் கொண்டு வந்தன. 'ஆகா! இந்த ஏழைச் சிற்பியின் மகள் காரணமாக இரண்டு பெரிய சாம்ராஜ்யங்கள் சண்டை போட நேர்ந்ததல்லவா?' என்ற பெருமித கர்வத்தை ... யோ! க...ற்றிலிரு... ...து ... பார்... அந்தோ ... மாக ஏற்பட்டனவா?' என்ற பரிதாப உணர்ச்சியும் மேலிட்டு வந்தது.

''சிவகாமி! உன்னுடைய கலையின் மேல் நான் கொண்ட மோகத்தினால் ஒரு பெரிய யுத்தத்தையே உண்டுபண்ணினேன். பயங்காளியும், கோழையுமான அந்த அற்பன் மாமல்லனிடமிருந்து உன்னைக் காப்பாற்ற இவ்வளவு பிரமப் பிரயத்தனங்களும் செய்தேன். ஆனால், அவ்வளவும் இப்போது நிஷ்பலமாயின. நான் இல்லாத சமயத்தில் உன்னைத் தெரு வீதிகளின் நாற்சந்தியில் ஆடச் செய்து உன்னையும் உன் கலையையும் நிர்மூடன் புலிகேசி கேவலப் படுத்தி விட்டான். சிவகாமி! என்னை மன்னித்துவிடு. நீ பட்ட அவமானத்துக்கும் நீ அடைந்த துன்பத்துக்கும் பரிகாரம் செய்துவிடுகிறேன். உன்னை உன் தந்தையின் வீட்டில் கொண்டு போய்



விட்டுவிட ஏற்பாடு செய்கிறேன். சக்கரவர்த்தியிடம் போராடி இதற்கு அநுமதியும் பெற்று வந்து விட்டேன்.''

இதைக் கேட்டதும் சிவகாமி நியாயமாகத் துள்ளிக் குதித்துக் குதூகலமடைந்திருக்க வேண்டுமல்லவா? விதி வசத்தினாலோ அல்லது விசித்திரக் கோணல்கள் நிறைந்த பெண் மனோபாவத்தினாலோ, சிவகாமி அவ்விதம் மகிழ்ச்சி யடையவில்லை. மௌனமாகச் சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

''சிவகாமி! ஏன் பேசாமல் இருக்கிறாய்? எப்போது புறப்படலாம், சொல்! உன்னைப் பல்லக்கில் ஏற்றித் தக்க ... பெண் ... தந்த ...



கிறேன். பொன்முகலி ஆறுவரையில் உன்னைக் கொண்டு போய் விட்டுவிட்டு அவர்கள் திரும்புவார்கள்'' என்று புத்த பிக்ஷு கூறி வந்தபோது, அதுகாறும் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த சிவகாமி சட்டென்று எழுந்து நின்று, ஆவேசம் ததும்பிய குரலில் பின்வரும் பயங்கர மொழிகளைக் கூறினாள்:

''அடிகளே! கேளுங்கள். இந்த வாதாபி நகரத்தை விட்டு நான் எப்போது கிளம்புவேன், தெரியுமா? பயங்கொள்ளி என்று நீங்கள் அவதூறு சொல்லிய வீர மாமல்லர் ஒரு நாள் இந்நகர் மீது படையெடுத்து வருவார். நரிக் கூட்டத்தின் மீது பாயும் சிங்கத்தைப் போலச் சளுக்க சைனியத்தைச் சின்னபின்னம் செய்வார். நாற்சந்தி மூலைகளில் என்னை நடனம் ஆடச் செய்த பாதகப் புலிகேசியை யமன் உலகத்துக்கு அனுப்புவார். தமிழகத்து ஸ்திரீ, புருஷர்களைக் கையைக் கட்டி ஊர்வலம் விட்ட வீதிகளில் இரத்த ஆறு ஓடும். அவர்களை நிறுத்திச் சாட்டையால் அடித்த நாற்சந்திகளிலே வாதாபி மக்களின் பிரேதங்கள் நாதியற்றுக் கிடக்கும். இந்தச் சளுக்கர் தலைநகரின் மாட மாளிகை கூட கோபுரங்கள் எரிந்து சாம்பராகும். இந்த நகரம் சுடுகாடாகும். அந்தக் காட்சியை என் கண்ணால் பார்த்துவிட்டுப் பிறகுதான் இந்த ஊரை விட்டுக் கிளம்புவேன். சளுக்கப் பதர்களை வென்று வெற்றி மாலை சூடிய மாமல்லர் என் கரத்தைப் பிடித்து அழைத்துக் கொண்டு போவதற்கு வருவார். அப்போதுதான் புறப்படுவேன். நீர் அனுப்பிப் போக மாட்டேன். பல்லக்கில் ஏற்றி அனுப்பினாலும் போக மாட்டேன். யானை மீது வைத்து அனுப்பினாலும் போக மாட்டேன்!''

இந்தப் பயங்கரமான சபதத்தைக் கேட்ட நாகநந்தியின் முகத்திலே புன்னகை தோன்றியது. தம்முடைய சூழ்ச்சி மீண்டும் பலித்து விட்டது என்று எண்ணி அந்தப் பொல்லாத பிக்ஷு உள்ளுக்குள் உவகை யடைந்தார் போலும்! (தொடரும்)

படித்துப் பாருங்கள்

சோவியத் மக்களோடு

சோவியத் நாட்டுடன் இந்தியா 1971 ஆகஸ்ட் மாதம் ஒன்பதாம் தேதி ஒரு நீண்டகால நட்புறவு உடன்படிக்கைசெய்து கொண்டது. இந்த உடன்படிக்கையைச் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக சோவியத் அரசாங்கம் கருதி நவம்பர் எட்டாம் தேதி தொடங்கி ஒரு மாத காலத்துக்குக் கொண்டாடியது. இந்த ஒரு மாத காலக் கொண்டாட்டத்தைக் காண சோவியத் அரசாங்கம் இந்திய நாட்டிலிருந்து நால்வரை அழைத்திருந்தது. அந்நால்வரில் ஒருவர் சென்னை பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள்.

அவர் டாஷ்கண்டுக்குச் சென்றார் என்றால், டாஷ்கண்ட் உஸ்பெஸ்கிஸ்தானின் தலைநகரம் என்று கூறுவதோடு அமையாது உஸ்பெக்கிஸ்தானின் சரித்திர கால வரலாற்றையே சுருக்கமாக அளித்து விடுகிறார் தமது இந்த நூலில்.

''சோவியத் மகளிரைப் பற்றிக் குறிப்பிடும்போது சோவியத் மகளிரின் இலட்சியம் அசைந்தாடும் மலர்க்கொடிகளாக இருப்பதல்ல; காட்சிப் பொருளாக விளங்குவதல்ல; பயனுள்ள குடிமக்களாக வாழ்வதே அவர்களுடைய லட்சியம். அதற்கேற்ற மூளை வளர்ச்சியையும் பண்பட்ட உள்ளத்தைப் பெறுவதிலே நாட்டமுடையவர்கள் சோவியத் பெண்கள்'' என்று கூறுகிறார்.

சோவியத் நாட்டில் இவர் இருந்தபோது இவருக்கு ஜுரம் வந்து விட்டது. அப்போது அவரை எவ்வளவு அருமையாக டாக்டர்களும் நர்ஸ்களும் பார்த்துக் கொண்டார்கள் என்பதைச் சற்று விரிவாகவே எழுதியிருக்கிறார்.

சோவியத் நாட்டின் புகழைப் பாடும் நூல்களின் வரிசையில் இந்த நூலும் சேருகிறது. எனினும் ஆசிரியர் கல்வியாளராதலால் வெறும் பிரசார நூலாக இல்லாமல் சோவியத் ஒன்றியத்தில் கண்ட நல்ல அம்சங்களையெல்லாம் தொகுத்து நூலாக வழங்கியிருக்கிறார். நடை பாடப் புத்தக நடையாகத் தோன்றினாலும் புத்தகம் படிப்பதற்கு அலுப்புத் தட்டவில்லை.

பிரசுரம்: வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை—600017; விலை: ரு. 3.50.

பட்டாம் பூச்சி



படத்தின் பெயரில் மட்டும் புதுமையில்லே ; திரைக் கதையிலும் புதுமை, நட்சத்திரத் தேர்விலும் புதுமை. 'பெரிய' நடிகர்களைக் கதாநாயகர்களாகப் போட்டால்தான் படம் ஓடும் என்ற திரையுலக நியதி வெறும் மாயை என்பது சில காலமாக நிரூபணமாகி வருகிறது.

இளம் நடிகர் கமலஹாஸனைக் கதாநாயகனுகக் கொண்ட படத்தைத் தயாரிக்க முன்வந்த படாதிபதியைப் பாராட்டுவதோடு 'ஹீரோ' ஸ்தானத்தை நிரந்தரமாகப் பற்றிவிட்ட கமலஹாஸனையும் பாராட்ட வேண்டும். ஆரம்பத்தில் அப்பாவியாக நடித்த போதும், ஓர் அழகியின் காதலை அநாயாசமாகப் பெற்று அவளோடு ஒரு ஹோட்டல் அறையில் தங்கிச் சினிமா 'சான்ஸ்' தேடியபோதும் கமலஹாஸன் அருமையாக நடித்திருக்கிறார். ஒரு புதிர்க் கதை சொல்லி ஜெயசித்ராவிடம் தோற்றபோது அவரது முகபாவம் நன்ருயிருந்தது. கடைசியில் சினிமா 'சான்ஸ்' மோகத்தில் காதலியைக் கைவிடுகிருர். வில்லனுக மாறி அவளை உதறித் தள்ளியவரையில் பிரமாதப்படுத்தியிருக்கிருர்.

ஜெயசித்ராவுக்கு நல்ல பாகம். காதலிக்கவும், கண்ணீரில் கரையவும் கடைசியில் காதலனிடமே சீறிப்பாய்ந்து அவனைக் கொல்லவும் சந்தர்ப்பங்கள் கிடைத்திருக்கின்றன. ஜெயசித்ரா பாராட்டும் விதத்தில் நடித்திருக்கிருர்.

நாகேஷும் வி. கே. ராமசாமியும் படத்தின் நகைச்சுவைப் பகுதியை நன்கு கவனித்துக் கொள்கின்றனர். கூட மனோரமாவும் சேர்ந்துவிட்டால் கேட்க வேண்டுமா?

ஜே. ஜே. விஜயத்தின் ஒளிப்பதிவு ''பட்டாம் பூச்சி'' பாராட்டுப் பெற உதவுகிறது.

சினிமா 'சான்ஸ்' ஒரு கானல் நீர், அது தன்னை நம்பி வந்த காதலியையே கைவிடத் தூண்டிவிடும் ஒரு பைத்தியக்கார வெறி என்பதை எடுத்துக் காட்டக் கதாநாயகனையே நம்பிக்கைத் துரோகியாகக் காட்டிய உத்தி பாராட்டுக்குரியது.

கதாநாயகன் தவறே செய்யக்கூடாது என்ற நியதிக்குள் சிக்கிக் கொண்டு விட்டால், புதுமையைப் புகுத்துவது இயலாத காரியம். கடைசியில் காதலர்கள் இருவரையும் தீர்த்துக் கட்டி விருப்பதிலும் துணிச்சலைக் காண்கிறோம்.

கதை, வசனம், டைரக்ஷன் ஆகிய மூன்று பொறுப்புக்களையும் ஏற்றவர் பேராசிரியர் ஏ. எஸ். பிரகாசம். படம் பிரகாசிக்கக் கேட்பானேன் !

பி. சுசிலா பாடும், ''மதனகாமராஜனுக்கு' என்ற கண்ணதாசனின் பாடல் நன்ருயிருக்கிறது.

ஆரம்பத்தில் உள்ள விறுவிறுப்பும், வேகமும் இடைவேளைக்குப் பிறகு குறைந்துவிட்டது துர்ப்பாக்கியம்தான்.

ஸ்ரீ பிரகாஷ் புரொடக்ஷன்ஸாரின் ''பட்டாம் பூச்சி'' ரசிகர்கள் வரவேற்க வேண்டிய படம் !

— காந்தன்

ரயிலடியை நோக்கிப் புது மணத் தம்பதியைச் சுமந்து கொண்டு மாட்டு வண்டி ஓட்டமும் நடையுமாகச் சென்றது. தம்பதியை வழியனுப்ப மற்றொரு மாட்டு வண்டியில் உறவினர் வந்து கொண்டிருந்தனர்.

ஜரிகை வேலைப்பாடு அமைந்த பட்டுச் சேலை உடுத்தியிருந்த மணமகள் வண்டிக் கூண்டில் அமைந்திருந்த அரையடி ஜன்னல் வழியே தெரியும் மாந்தோப்பையும் மரக் கிளைகளில் பாடி மகிழும் பறவை இனங்களையும் கண் குளிரக் கண்டாள்.

மணமகன் தாரிக் அலி, ''ஜவ்ஹர்பானு, இதைவிடப் பெரிய தோப்பும் துரவும் நமக்கு இருக்கு. அவற்றையெல்லாம் நீ பார்த்தால் ரொம்பவும் பரவசப்பட்டுப் போவாய்'' என்றான்.

ஜவ்ஹர்பானுவின் இதயம் சற்று முன்பு வீட்டில் நடந்த நிகழ்ச்சியை அசை போட்டது.


இல்லாமை, இயலாமை இவ்விரண்டு காரணங்களால் தன் கண்ணின் மணியைப் போல் வளர்த்த புதல்வி ஜவ்ஹர் பானுவை உரிய வயதில் கண் நிறைந்த கணவனுக்குக் கட்டி வைக்க அவளுடைய பெற்றோரால் முடியவில்லை. தள்ளாத இந்த வயதில், சீதனக் கொடுமை தலைவிரித்தாடும் இந்த நாளில் தாரிக் அலி என்ற லட்சாதிபதியான முடவனுக்கு ஜவ்ஹர் பானுவைக் கட்டி வைக்க முன் வந்ததில் வியப்பில்லை.

எல்லா வகைச் செலவுகளையும் மணமகனே ஏற்றான்.

எல்லாச் சடங்குகளும் நிறைவேறின. மணமகள் புக்ககம் புறப்பட ஆயத்தமானாள்.

தாயும் தந்தையும் அவளை வாழ்த்தி அனுப்பினார்கள். கண்களில் நீர் மல்க, நாத் தழுதழுக்கத் தந்தை வாழ்த்தும்போது, ''பானு, உன்னை இப்படிப்பட்ட மாப்பிள்ளைக்குக் கட்டி வைச்சுட்டோமே என்று இப்பத் தானம்மா உணர்றேன்...ஒனக்கு ஒரு புள்ளே பொறந்து இப்படி ரெண்டு காலும் வௌங்காம போனா... தாரவா வீசுறுவே...? அப்படி நெனைச்சுக்கோம்மா! ஆண்டவன் உன்னை நல்லபடியாக் காப்பாத்துவான்.''

ஜவ்ஹர் பானு, ''நீங்க என்ன வாப்பா...? நான் மனசுலே ஒன்னுமே நெனைக்கல்லே! நீங்கதான் என்னைப் பத்திக் கவலைப்படாமல் இருக்கணும். அம்மாவுக்கும் ஆறுதல் சொல்லுங்க! நீங்களும் அம்மாவும் சௌகரியப் படறச்சே எங்க வீட்டுக்கு வந்து போய்க்கிட்டு



இருங்க'' என்றுள் — தனக்குள் குமையும் வேதனைகளை உள்ளடக்கியபடியே.

தாரிக் அலி, ''என்ன பானு, எங்கேயோ பார்த்துக் கொண்டிருக்கிறாய்? நம்முடைய தோப்பிலே செவ்விளநீர் உண்டு. ஏழெட்டு வகையான மாங்காய்கள் காய்த்து உலுப்பும் மாமரங்களும் உண்டு. ரோஜாப் புஷ்பங்கள்.. எலுமிச்சை, நெல்லி, கோழிப் பண்ணை, மான்கூட வளர்க்கிறோம்!'' என்றுகூறி அவளை நிகழ் காலத்துக்கு அழைத்து வந்தான்.

''அப்படியா?''

'' ஆமாம், பானு! எல்லாவற்றையும் நானே கவனிக்கிறேன். என் சித்தி மகன் ஜப ருல்லா இருக்கான். சுத்த முரடன். கொஞ்சம்கூடப் பொறுப்பு கிடையாது. அவனை நம்பி ஒருகாரியம் ஒப்படைக்க முடியாது. அடடே! நானே எப்படி இத்தனையையும் கவனிக்கிறேன் என்று பார்க்கிறாயா? சக்கர வண்டி வீட்டில் இருக்கிறது. பண்ணைக்குள் ஜீப்பில் போய் வருவேன். யார் யாரிட்டே எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று என் தந்தையிடம் நிறையப் படித் திருக்கிறேன்.''

''கேட்கவே சந்தோஷமா இருக்கு.''

''பானு! நான் ஒரு குறிக்கோள் வைத் திருக்கிறேன். அதை எந்த வகையிலாவது நிறைவேற்றணும். அதற்கு நீயும் ஒத்துழைக்க ணும்.''

'' சொல்லுங்க!''

''ஜபருல்லா இருக்கானே அவன் ஒரு முன்கோபி. எதையும் முன்னே பின்னே யோசிக்க மாட்டான். சட்டுப்புட்டுன்னு எந்தக் காரியத் தையும் செய்துடுவான்...என் தாய் காலமான புதிதில், என் தாய் கூடப் பிறந்த சித்தியை எங்கள் வாப்பா மறுமணம் செய்து கொண்டார்கள். அவர்களுக்குப் பிறந்தவன்தான் இந்த ஜபருல்லா. என்னைவிட ஐந்து வயசு இளையவன். என்றாலும்,

அபலைக்கு வாழ்வு...

"கிருபாகரன்"



போட்டிக் கதை. 25

இளம்பிள்ளை வாதத்தால் முடமான எனக்கே எங்கள் வாப்பா நிறையச் சொத்துக்களை எழுதி வைத்திருக்கிறார்கள். பூர்வீக வீடும் நமக்கே சொந்தம். சித்திக்கும் ஜபருல்லாவுக்கும் அடுத்த தெருவில் வீடு இருக்கிறது. என் கல்யாணத்துக்குப் பிறகு சித்தி அடுத்த தெரு வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்று தான் ஏற்பாடு. ஆனால் நான்தான் இப்போதைக்கு யாரும் பாகப் பிரிவினை செய்து கொள்ள வேண்டாம் என்று கேட்டுக் கொண்டிருக்கிறேன்.''

''ஏன் ?''

''சொல்கிறேன்! ஜபருல்லாவுக்கு இரண்டு வருஷங்களுக்கு முன்பே கல்யாணம் ஆகிவிட்டது. அந்தப் பெண்ணுக்கு — ஸாகிராவுக்கு என் மீது எப்பவும் ஓர் அலாதி கரிசனை. அக்கறை! கணவனுடன் பிறந்த தமையனுக்கு ஆற்ற வேண்டிய சேவையை, கொழுந்தியாள் என்ற முறையில், எனக்கு ஸாஹிரா சற்று அதிகமாகவே செய்து வந்தாள். ஜபருல்லாவைவிட அதிக அளவு எனக்குச் சொத்து சேர்க்கப்பட்டிருந்ததில் ஜபருல்லாவுக்கும் சித்திக்கும் என் மீது காழ்ப்பு உண்டு. இதன் காரணமாக ஸாகிரா எனக்குச் சேவை செய்து வந்ததை அவர்கள் இருவரும் விரும்பவில்லை. மனித இதயம் கொண்ட ஸாகிரா, ஈவு இரக்கமற்ற மாமி—கணவன் இவ்விருவரின் உளப் பாங்கையும் கண்டு உருகினாள்.

''அன்று எனக்குக் கடுமையான ஜுரம். சுய உணர்வின்றிப் புலம்பிக் கொண்டிருந்தேனாம் — ஸாகிரா சொன்னாள். என் தந்தை உயிரோடு இருக்கும் வரையில் என் மீது பரிவு காட்டி வந்த சிற்றன்னை அவள் விதவையானதும் என் மீதுள்ள பந்த பாசத்தை உதறிவிட்டாள். எனவே, நான் என்ன சிரமப்பட்டாலும் ஏன் என்று கேட்கமாட்டாள்! ஸாகிராவின் அரிய உதவியாலும், சேவையாலும் தான் ஓரளவு என் ஜுர வேகம் தணிந்து சுகம் பெற்றேன்.

''இந்தக் கட்டத்தில் சித்தியின் சொல்லை மீறி எனக்கு ஸாகிரா பரிவு காட்டியதால், ஜபருல்லாவிடம் இல்லாததையும் பொல்லாததையும் கூறி ஸாகிராவை வீட்டை விட்டே விரட்டியடிக்க வைத்துவிட்டாள்.

''அந்தச் சம்பவம் இப்பவும் என் கண்களில் நீரை உருக்க வைக்கிறது.

''கழனியிலிருந்து திரும்பி வந்தவனிடம் சித்தி வைத்த வத்தி உடனே பற்றி எரிந்தது. சாதம் வடித்துக் கொண்டிருந்த ஸாகிராவின் தலை முடியைப் பிடித்து முறுக்கியபடி முதுகிலே நாலு மொத்து மொத்திக் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டான்.

''நான் எவ்வளவோ மன்றாடினேன், தாய்மையான அந்தப் பேதைப் பெண்ணுக்காக! என் முயற்சி அவன் முன்னே எடுபடவில்லை!

''பானு! சிறுகச் சிறுக மிருகமாக மாறி வரும் ஜபருல்லாவையும் இரும்பைவிட இதயத்தைக் கடிதாக்கி வரும் என் சிற்றன்னையையும் நீதான் திருத்தி நல் வழியின் பக்கம் திருப்ப வேண்டும்! ஒரு பாவமும் அறியாத மெல்லிதயம் கொண்ட ஸாகிராவை வாழாவெட்டி நிலையிலிருந்து மீள வைக்க

மோகினி

யார் வில்லன்?

யார் நல்லவன்?



குமாரி கல்யாணி

மணமான ஒரு பெண்ணை ஒருவன் அவள் வீட்டுக்குள் வந்து குடும்பத்துள் ஒருவனாக நடித்து, அலைக்கழிக்கிறான்; திருமணத்துக்கு முன்பு அவள் கொண்டிருந்த காதல் தொடர்பையும், அது சம்பந்தமான காதல் கடிதங்களையும் காட்டி நடுங்க வைக்கிறான். கதாநாயகனாக வரும் மோகன் அக்குடும்பத்தின் சொத்தை அபகரிக்கும் நோக்கத்தோடு செய்யும் படுகொலைகள் திடுக்கிட வைக்கின்றன. இந்நாடகத்தில் யார் வில்லன், யார் நல்லவன் என்று நிர்மாணிக்க முடியாமல் இருப்பதுதான் சஸ்பென்ஸ்.

குடும்பத்தின் வேண்டாத விருந்தாளி ஜோஸப்பாக வரும் பிம்லி சீனிவாசன் அருமையாக நடித்தார். மரகதத்தின் ஆவி தோன்றி அச்சுறுத்தும் விதத்தில் பேசவும் மறையவும் நம்பமுடியாத காட்சிகளானாலும் அரிய சாதனை என்றுதான் கூறவேண்டும். நாடகத்தை எழுதி, டைரக்ட் செய்திருப்பவர் 'இருள்' பத்து. அதிர்ச்சி தரும் நாடகங்களில் அனுபவம் பெற்றவர்.

ராதா, ஜிதா சகோதரிகளாக வந்து நன்றாக நடித்தனர், கல்பனாவும் வசந்தியும். மோகனாக வந்து மேடையில் பரபரப்பை ஏற்படுத்தியவர் சாரதி. மேடைக்கேற்ற தோற்றமும் அமைதியான நடிப்பும் அவருக்குப் பாராட்டைப் பெற்றுத் தந்தன.

உதயா ஃபைன் ஆர்ட்ஸ் குழுவினரின் ''மோகினி''யில் கதைச் சுவை இல்லாது போனாலும் திகில் சுவை நிச்சயம் உண்டு. -காந்தன்



அன்பான கடவுளே,
நீ இல்லேன்னு சொல்லிண்டிருக்கிறவங்க
ளோட நீ "டூ" போட்டுடறயாமே? நான்
அப்படிச் சொல்லலே. நேக்கு ஒன்னை
ரொம்பப் பிடிக்கும்.
சின்னப் பையன்,
சம்பி.
சில துண்டுக் காகிதங்கள்...
தூக்கியெறிய முடியாதவை.
காரணம்...அவற்றிலே காவியங்கள் புதைந்திருக்கும். அதோடு, இன்றைய காகிதப் பஞ்சத்தில், ஒவ்வொரு துண்டுக் காகிதமும் ஒரு கோடி பெறும்.
ஆந்திரப் பிரதேஷ் பேப்பர் மில்லில், நாங்கள் சீம் கணக்கில் காகிதம் தயார் செய்கிறோம்... எழுத, அச்சடிக்க, பொருட்களைப் பொதிந்து கட்ட என்று. ஆயின், அது எந்த மூலைக்கு? எங்கள் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, ஒரு குறுகிய காலத் திட்டம் வகுத்துக் கொண்டு, அசுர கதியில் அதிகப்படி வேலை செய்து வருகிறோம்.
ஓரளவு காகித பஞ்சத்தைக் குறைக்க இது உதவும்—மகிழ்ச்சியான செய்தியில்லையா இது? காகிதம் இல்லாத வாழ்வில் வேடிக்கையும் விளையாட்டும் ஏது?
ஆந்திரப் பிரதேஷ் பேப்பர்

விலைவாசிகள் விஷம் போல் ஏறிவரும் இந்த நாட்களிலும் கூட



உங்கள் மன நிம்மதிக்கு மட்டும் பஞ்சமில்லை.

30 வருடங்களில் உங்கள் ஆயுள் இன்சூரன்ஸின் மதிப்பு ரூ. 2500/- அதாவது நீங்கள் சாதாரணமாக நாளொன்றுக்கு ஒன்று இரண்டு தடவை வெற்றிலை பாக்குக்கென 25 காசு* வீதம் செலவிடுவதைப் போன்றதே.



* இப்போது உங்கள் வயது 30 என்று வைத்துக் கொள்வோம்

PRATIBHA-2012-IVI-2 TAM

இந்த நாட்களிலும்

ஆயுள் இன்சூரன்ஸ் உதவியினால் நீங்கள்
மன நிம்மதி பெறுவது உங்கள் சக்திக்குட்பட்டதே.

வேண்டும். இந்தக் குறிக்கோளுக்காகத்தான் கல்யாணமே வேண்டாம் என்று இத்தனை வருஷங்களாக ஒதுங்கி யிருந்த நான், உன்னை மணப்பதற்குச் சம்மதித்தேன்.''

புது மனை வந்த பிறகுதான் ஜவ்ஹர் பானு தான் வாழ விருக்கும் இல்லத்தை நோக்கினாள். முகப்புப் பகுதியை அழித்துப் புதிய பாணியில் கட்டியிருந்தார்கள். பிற்பகுதி பெரும்பாலும் புராதன காலத்துப் பாணி தான். வாசலில் நுழையப் போகும் சமயம் தாரிக் அலியின் சிற்றன்னை வஹீதா மணமக்களுக்கு ஆரத்தி எடுத்து வரவேற்றாள்.

ஜவ்ஹர் பானுவுக்கு வஹீதாவின் நோக்கும் போக்கும் புதுமையாக இருந்தன. சில சமயம் புரியாத புதிராகவும் இருந்தன.

ஜபருல்லாகூட அண்ணி என்று மரியாதை கொடுத்தே பேசி வந்தான்.

புக்ககத்துக்கு வந்த அன்று வஹீதாவே படுக்கை அறையை நேர்த்தியாக அலங்காரம் செய்தாள். பட்டு மெத்தையில் போர்வை விரித்துத் தலையணைகள் வைத்துப் பின்னர் ஜவ்ஹர் பானுவைக் கையைப் பிடித்து அழைத்து வந்து அந்த அறைக்குள் விட்ட போது, ''இனி மேல் வெட்கப்படக்கூடாது! நபிகள் நாயகம் சொன்னார்கள், 'இறைவனுக்குப் பின் வேறு யாருக்காவது மனிதர்களை ஸுஜூது செய்வதற்கு இறைவன் ஏவி இருந்தால், கணவனுக்கு மனைவி ஸுஜூது செய்ய வேண்டும் என்று நான் ஏவி யிருப்பேன்!' என்று. ஆதலால், நீ உன் கணவனுக்குக் கட்டுப்பட்டு, அவன் ஆணைக்கு உட்பட்டு நடம்மா! எனக்கு ஆண்டவன் பெண் குழந்தையைத் தரவில்லை. உன்னைத்தான் தந்திருக்கிறான்; நீ என் மகளைப் போல! நீ பெற்றெடுக்கும் குழந்தை பெண்ணாக இருக்க வேண்டும் என்பதே என் ஆசை அம்மா!'' என்று அன்பு ததும்பச் சொன்னாள்.

படுக்கை அறைக்குள் பிரவேசித்த ஜவ்ஹர் பானு அசந்து போனாள். இப்படிப்பட்ட புனிதவதியையா கணவர் 'இரும்பிதயம் கொண்டவர்' என்று சொன்னார்.

சிறிது நேரத்தில் மேனியில் டவலைப் போர்த்தியபடி. சக்கர வண்டியில் வந்தான் தாரிக் அலி.

ஜவ்ஹர் பானு, ''பார்த்தீர்களா, உங்கள் சிற்றன்னையின் ஏற்பாட்டை? இவர்களைப் போய்ச் சீறும் சிறுத்தை என்றீர்களே!'' என்றாள்.

'' நீ தெரிந்து கொள்ள வேண்டியது நிறைய இருக்கிறது!''

''இருக்கட்டுமே! என்ன இருந்தாலும் என்னால் அவர்களை நல்லவர்கள் இல்லை என்று கூறிவிட முடியாது!''

''ஓகோ, அப்படியா? நீ உன் மாமியிடம் நாளை கேள்: 'மாமி, உங்கள் சின்ன மருமகளையும் இங்கே அழைத்து வாழ வைக்கக் கூடாதா?' என்று. அப்போது புரியும் அவர்கள் சுய உருவம்.''

''இன்ஷா அல்லாஹ்! விடியட்டும். நிச்சயமாகக் கேட்கிறேன். அதற்கு அவர்கள் ஒரு போதும் மறுக்கவேமாட்டார்கள்.''

''உன் உறுதி பயன் அளிக்கட்டும்.''



லிங்கனின் ஆசை!

அமெரிக்காவில் அடிமைத் தளை ஒழிய முழு முதல் காரணமாயிருந்தார் ஆப்ரஹாம் லிங்கன். ஆனால் அவர் இத்துடன் திருப்தியடையவில்லை. சொன்னார்:

''நமது வெற்றி இன்னும் பூரணமாகவில்லை. நமது நாட்டிலிருந்து அடிமைத்தனம் ஒழிந்தது போலவே கள்ளும் குடியும் ஒழிந்துபோக வேண்டும். இதுவும் போதாது. உலகத்தின் எந்தப் பகுதியிலும் ஓர் அடிமையாவது, ஒரு குடியனாவது இல்லாமல் போக வேண்டும்!

''இங்கே வா, பானு! என்ன இப்படிப் பத்தாம் பசலி மாதிரி கொண்டை கட்டி இருக்கே! இப்படிக் கிட்டே. வா. நானே தலை வாரிப் பின்னல் முடிந்து பூ வைத்துவிடுறேன். சே! புதுப் பெண்ணு, லட்சணமா இருக்க வேண்டாமா?'' என்று வஹீதா, பானுவை வலுக் கட்டாயமாகத் தன் எதிரே அமர வைத்துத் தலை வாரினாள்.

இதுதான் சமயம் — நல்ல தருணம் என்று ஜவ்ஹர் பானு மெல்லக் கேட்டாள்: ''மாமி! நான் ஒண்ணு கேட்பேன், கோபித்துக்கொள்ளக் கூடாது!''

''என் கண்ணு! நான் உன்னிடம் கோபித்துக் கொள்வேனா? என் செல்லமில்லே.... சொல்லம்மா.... கேளம்மா....''

''ஜபருல்லா மச்சான் சம்சாரத்தை — உங்கள் சின்ன மருமகளை இங்கே காணவில்லையே. உங்களுக்குள் சண்டையா? என்ன நடந்திருந்தாலும் நீங்கள் மன்னிச்சு இந்த வீட்டுக்கு அழைத்து வர வேண்டும்.''

'' கண்ணு! அந்த மூதேவியைப் பத்தி உனக்குத் தெரியாது. அவளைக் கையைக் கழுவிவிட்டு உன் மச்சானுக்கு வேறே பொண்ணு பார்க்கப் போறேன் அம்மா...''

''அப்படி என்ன தப்பு அவள் செஞ்சாள்?''

''அந்த அசிங்கத்தை எப்படியம்மா சொல்றது? ஊம்! பேச்சை விடு. வேறே பேச்சு இருந்தால் பேசு.''

''என்ன மாமி, இப்படிப் பட்டுன்னு முடிச்சால் எப்படி? என்ன அசிங்கம் நடந்தது?''

''உங்கிட்டே மறைக்கிறதுலேயும் தப்பில்லே! அந்த மூளி என் மகனுக்கு வாழ்க்கைப் பட்டது உண்மைதான். சொத்து பத்துக்கள் நெறைய தேறும்னு வந்துச்சி. இங்கே வந்த பிறகுதான் எல்லாச் சொத்தும் சுகமும் என் மூத்த பிள்ளை பேருக்கு இருக்குன்னு அதுக்குத் தெரிஞ்சு போச்சு. அதனாலே எங்களை மதிக்கிறது இல்லே. எதைச் சொன்னாலும் அலட்சியப்படுத்துவது போன்ற நிலைக்கு வந்துவிட்டாள். கடைசியிலே சொத்துக்கு ஆசைப்பட்டு என் மூத்த மகனையே கைக்குள்ளே போடப் பார்த்தாள்.... அதோடு அவளை விரட்டிவிட்டோம்.''

''அப்போ அந்தப் பெண்ணை இனி அழைப்பதாக இல்லை. அப்படித்தானே?''

''நிச்சயமாய் அழைக்கப் போவதில்லை!''



நம் நாட்டில் பலர் மத ஒருமைப்பாட்டுக்கு உதாரணமாக விளங்குகிறார்கள். பெங்களூரிலிருந்து சிறுகுப்பா என்ற ஊருக்குப் போகும் வழியில் உள்ள ஓர் அனுமார் கோயிலில் பூஜை செய்பவர் ஒரு முகமதியர்! அவர் உருதுவிலேயே வழிபாடுகளை நடத்துகிறாராம். பிரபல நாதஸ்வர வித்துவான் திரு ஷேக் சின்ன மௌலானா குருவாயூர் கோயிலில் அடிக்கடி நாதஸ்வரம் வாசிக்கிறார். பிரபல மலையாளப் பின்னணிப் பாடகர் திரு ஜேசுதாஸ் ஒரு கிறிஸ்தவர். ஆனாலும் பல இந்துக் கோவில்களில் (அவைகளைப் புதுப்பிப்பதற்காக) உதவி நிதிக் கச்சேரிகள் நிகழ்த்தியிருக்கிறார். தில்லியில் ராம்லீலா உத்ஸவத்துக்கு விக்கிரகம் செய்பவர்கள் பலர் முஸ்லிம்கள்: முஹர்ரத்துக்கு தஜியாக்கள் செய்பவர் பலர் இந்துக்கள்! - ஆதாரம்: ''ஹிந்துஸ்தான் டைம்ஸ்''

தகவல்: அனிதா ராமச்சந்திரன்

''நீங்க அப்படி ஜபருல்லா மச்சானுக்கு வேறே பெண் பார்க்கிறதா இருந்தா.... நல்லா இருக்காது. பாவம், அதுவும் ஒரு பெண்தானே!''

'' பெண் பார்ப்பதைப் பின்னால் யோசித்துக் கொள்கிறேன்..... அந்தப் பெண் மறுபடியும் இங்கே வர்றதா இருந்தால்.... எங்களுக்கு உங்கள் பாகத்துக்குக் கிடைத்த சொத்தைத் தரவேண்டும். அப்படீன்னு நாளைக்கே என் மருமகளை இங்கே வரச் சொல்றேன்.''

''புரியலையே, மாமி நீங்கள் சொல்றது ?''

''புரியும்படி சொல்றேன், கேள். உன் மாமா ஒரு கண் சுண்ணாம்பும், இன்னொரு கண் வெண்ணெயும் வைச்சுட்டுக் கண்ணை மூடிட்டார். மூத்த குடியாள் மகனுக்கு ஏகப்பட்ட சொத்து, பூர்வீக வீடு இவற்றையெல்லாம் எழுதி வைச்சுட்டு, என் மகனுக்கு அடுத்த தெரு வீடும் கொஞ்சமா சொத்தும் எழுதி வைச்சிருக்காங்க. இதுதான் நியாயமா?.... ஏம்மா, எம்மவன் ஜபருல்லா அவருக்குப் பொறந்தவன்தானே! ஏன் இந்தப் பாரபட்சம்? ஏதோ உன் புருஷன் கால் வெளங்காதவன்! அதுக்காக இவ்வளவு அநியாயமா? உன் புருஷன்கூட என் மவனைப் பண்ணைப் பக்கம் வர விடுறதில்லே. ஏதோ வாலிப முறுக்குலே ஆங்குள்ள பெண்கள்டம் சேட்டை பண்ணினானாம். இதைப் பெரிசா எடுத்துக்கிட்டு ஜபருல்லாவைப் பண்ணைப் பக்கம் அண்ட விடுறதில்லே... அதனாலே... உங்கள் பாகத்துச் சொத்து எங்களுக்கும் எங்கள் பாகத்துச் சொத்து உங்களுக்கும் சேர வேண்டும்.''

'' இதுக்குத்தானா மாமி...? அதுக்கு நானச்சு!''

''உங்களைத்தானே!'' என்று கணவன் தாரிக் அலியிடம் ஜவ்ஹர் பானு குழைந்து வந்தாள்.

தேங்காய் மகசூலைப் பண்ணையில் அமைந்திருந்த பங்களாவில் இருந்தபடி நோட்டமிட்டுக் கொண்டிருந்த தாரிக் அலி, ''என்ன விஷயம் ?'' என்று கேட்டான்.

''ஓர் அபலையின் வாழ்வும் தாழ்வும் உங்கள் முடிவில் இருக்கிறது. அவளுக்கு உதவ நீங்கள் முன் வரவேண்டும்.''

''நீ சொல்றது ஒன்னுமே விளக்கமாக இல்லையே!''

''உங்கள் பாகத்துக்கான சொத்து முழுவதையும் உங்க தம்பி சம்சாரம் பெயருக்கு எழுதி வைத்து, ஒப்படைத்துவிடுங்கள்.''

''நீ என்ன பானு, உளர்றே ?''

'' நான் ஒன்னும் உளறல்லே! நம்ம சொத்து முழுவதையும் அந்தப் பெண்ணுக்கு எழுதிக் கொடுத்துவிட்டால் நாளையே உங்கள் சித்தி அந்தப் பெண்ணை அழைத்து மகனோடு குடும்பம் நடத்தத் தயார் என்று கூறிவிட்டார்கள்.''

''பைத்தியக்காரத்தனம்! மற்றவர்களைப் போல் ஓடி ஆடிப் பிழைக்க முடியாத எனக்கு என் தந்தை ஒதுக்கி வைத்த சொத்தைக் கேட்பது வடிகட்டிய பைத்தியக்காரத்தனம். என்னை நம்பி வாழ்க்கைப்பட்ட உன்னை—இனி நான் பெற்றெடுக்கப் போகும் சந்ததிகளை வாழ வைக்க எனக்கு இருக்கும் ஒரே ஒரு பிடிப்பு இந்தச் சொத்துக்கள்தாம். இதை அபகரித்துவிட்டு உன்னையும் என்னையும் நட்டாந்தரத்தில் விடப் பார்க்கிறாள் சித்தி! இதற்கு ஒரு போதும் நான் சம்மதிக்கமாட்டேன்!''

ஜவ்ஹர் பானு அமைதியோடு தாரிக் அலி முன்னே வந்து, ''இந்தக் கைகளைப் பார்த்தீர்களா ?'' என்று தன் இரு கரங்களை நீட்டிக் கேட்டாள்.

''கைகளுக்கு என்ன? . நல்ல கைகளாகத் தான் இருக்கு!''

'' இந்தக் கை உரம் பெற்ற நாளிலிருந்து ஓய்ந்திருந்ததில்லை. இறைவன் அருளால், நான் உழைத்து உங்களைக் காப்பாற்றுவேன்! பாய் முடைந்த இந்தக் கை, பிடி சுற்றிய இந்தக் கை, நூல் நூற்ற இந்தக் கை பெறப் போகும் சந்ததிகளைக்கூடக் காப்பாற்றும். கவலையை விடுங்கள். ஓர் அபலையை வாழ வையுங்கள்.''

''பானு! உன் தியாகத்தை வரவேற்கிறேன்.''

''அல்ஹம்து லில்லாஹ்!''

இப்போது ஜவ்ஹர் பானு ஒரு குழந்தைக்குத் தாய். அது அவள் பின்னும் கோரைப் பாயைத் தன் பிஞ்சுக் கரங்களால் அளைந்து கொண்டிருந்தது. அப்போது பண்ணையாள் ஒருவன் ஓடோடி வந்து, ''ஜபருல்லா முதலாளி குடிபோதையில் மோட்டார் சைக்கிள் ஓட்டி லாரியோடு மோதியதில் ஒரு கால் முறிந்துவிட்டது'' என்றான்.

இதற்குள் வஹீதாவும் வந்துவிட்டாள், இதைக் கேள்விப்பட்டு. குலுங்கிக் குலுங்கி அழுதாள். தாரிக் அலி சோகமாகச் சிரித்துச் சொன்னான்: ''சித்தி! என் தந்தை ஒதுக்கிய சொத்து உழைக்க முடியாதவனுக்குத் தான்! எனக்கு உழைக்க பானு இருக்கிறாள்.''



தீவுகள்
இந்திரா பார்த்தசாரதி
எழுதும்
புதிய தொடர் கதை
ஏப்ரல் 13ல் சித்திரைச்
சிறப்பிதழில் ஆரம்பம்
"இப்போ எங்கே கிளம்பறே?"
"அவரோட வீட்டுக்கு."
"கொலை நடந்திருக்கு.....அங்கே எதுக்குப் போறே?" விஜயா பதில் சொல்லவில்லை.
உமா கேட்டாள்: "என்ன விஜயா, உனக்கு அறிவு மழுங்கிப் போச்சா? இது நடந்தப்புறமா அவனைக் கல்யாணம் பண்ணிக்கிறதா இருக்கே?"
விஜயா

பொன்னியின் புதல்வர்

சுந்தா

33. இரண்டாவது சிறைவாசம்

> அச்சத்தை விரட்டிடடா – நல்
> ஆண்மையைக் கைக்கொள்ளடா !
>
> — பாரதியார்

கல்கிக்கு இரண்டாவது சிறைத் தண்டனை 1930 செப்டம்பரில் கிடைத்தது. அது பற்றி, அதே மாதம் 26ஆம் தேதிய ''சுதேசமித்திரன்'' பத்திரிகையில் வெளியான செய்தி :

> தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி ஸ்ரீமான் ஆர். கிருஷ்ணமூர்த்தி, 24ம் தேதி தடை உத்தரவை மீறிக் கூட்டத்தில் பேசியதால் அவர் 188(2)ஆவது பிரிவின்படி விசாரிக்கப்பட்டு, கோபிச்செட்டிப்பாளையம் சப் டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டால் ஆறு மாதக் காவல் தண்டனை விதிக்கப்பட்டார்...



எப்படி, எப்போது கல்கி, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் காரியதரிசியானார்? அவருடைய கதை உத்திகளில் ஒன்றையே கையாண்டு, கொஞ்சம் பின்னே சென்று முன்னுக்கு வருவோம்.

''சுதந்திரப் போர்'' என்ற சிறு புத்தகத்தைக் கல்கி அச்சடிக்கக் கொடுத்தார் அல்லவா? அதன் பிரதிகளையும், அது போன்ற வேறு சில பிரசார நூல்களின் பிரதிகளையும் அச்சிட்டு விநியோகிப்பதால் தாம் நிச்சயம் சிறைவாசம் செய்ய நேரும் என்பதைக் கல்கி உணர்ந்திருந்தார். தாம் சிறைவாசம் செய்கையில், காந்தி ஆசிரமத்தில் மனைவி தனியே இருக்கவேண்டாம் என்று எண்ணி, அவளைத் தஞ்சாவூரில் பிறந்தகத்தில் கொண்டு போய்விட்டார். அங்கிருந்து தமது ஊருக்குப் போய்த் தம் குடும்பத்தாருடன் ஒரு நாள் தங்கினார். இரண்டு ஊர்களிலும் அவர் தாம் சிறைபுகவிருப்பதை உற்றார் உறவினர்களிடம் மகிழ்ச்சியுடன் அறிவித்தார். அவருடைய மகிழ்ச்சியை அண்ணாவைத் தவிர யாரும் பகிர்ந்து கொண்டிருக்கமாட்டார்கள். மிகவும் வருத்தப்பட்டிருப்பார்கள். அவருடைய பிடிவாதத்தைக் குலைக்க முடியாதே என்பதை எண்ணியும் தவித்திருப்பார்கள்.

சென்னை திரும்பிய கல்கி ''சுதந்திரப் போர்'' பிரதிகளை விநியோகித்தார். இப்பணியில் அவருடைய நண்பர்களும் சேர்ந்து கொண்டார்கள். அவர்களைப் பிடிக்கப் போலீஸார் முயன்றார்கள். சத்தியாக்கிரகப் படைக்கு ஆள் திரட்டும் பிரசாரப் பணியில் ஈடுபட்டிருந்த கல்கி, அதில் கணிசமான பலன் கிடைக்கிறவரையில், போலீஸின் கையில் அகப்பட்டுக் கொள்ள விரும்பவில்லை. சென்னையிலிருந்து நழுவிச் சென்று, பின்னர் தலை மறைவாக வேலை செய்யத் தொடங்கினார். பிரசுரங்களை இனி ரகசியமாய் அச்சடித்து விநியோகிப்பது என்றும் தீர்மானித்தார்.



''நடந்து போகையில் வாய்ப்பான இடம் ஏதாவது கண்ணில்பட்டால் போதும். கல்கி அதன்மேல் உட்கார்ந்து ஆனந்தமாய்ப் பாரதியார் பாட்டுக்களைப் பாடுவார்!''

''சுய புராணம்'' என்ற ஒரு கட்டுரையில் ''உட்புகுந்த படலம்'' எனும் பகுதியில் அவர் சொல்கிறார் :

> அந்நாளில் நான் முக்கியமாகச் செய்த வேலை, பெங்களூர் சென்று அங்குள்ள (திரு சதாசிவம் போன்ற) நண்பர்களின் உதவியினால் 'சுதந்திரப்போர்', 'மகாத்மாவின் சிறைவாசம்', 'மகாத்மா சரித்திரம்', 'சுயராஜ்யம்

ஏன்?' என்ற கானைப் பிரசுரங்கள் ஒரு லட்சம் பிரதிகள் அச்சடித்து வந்ததாகும். இவற்றில் 'சுயராஜ்யம் ஏன்?' என்னும் பிரசுரத்தில் உண்மைகள் சிறிது அளவுக்கு மீறி விட்டபடியால் போலும், சர்க்கார் அதைப் பறிமுதல் செய்ய உத்தரவிட்டனர். இதன் காரணமாகத் தமிழ் நாட்டில் அநேகருடைய வீடுகள் சோதனைக்கு உள்ளாயின. சென்னையில் போலீஸார் எனது நண்பர் ஒருவர் வீட்டுக்குப் பல குண்டாந்தடிகளுடன் சென்று சோதனை செய்து, கடைசியில் சில கிழிசல் காகிதங்களைக் கைப்பற்றிச் சென்றனராம்.

(ஆ. வி. 14—4—'31)

இதில் கல்கி குறிப்பிட்டுள்ள ''நண்பர் ஒருவர் வீடு'' என்பது, அப்போது முல்லா சாகிப் தெருவிலிருந்த துமிலனின் வீடாக இருக்கலாம். ஏனெனில், தம்முடைய வீட்டில், சென்னை விநியோகத்துக்காகப் பல பிரசுரங்களைக் கல்கி வைத்திருந்தார் என்று துமிலன் தெரிவித்தார். (அவற்றில் ஒன்று ஜலியன்வாலாபாக் படுகொலை பற்றியதாம்.) அவற்றை பம்பாய்த் தொண்டர் ஒருவர் மாணவர்களுக்கு விநியோகித்துக் கொண்டிருந்த போது, அவரைப் போலீஸார் பிடித்துவிட்டார்கள். லாக் அப்பில் அவரை அடிதண்டமாய் அடித்துக் கேட்கவே, அவர் துமிலனின் வீட்டைக் காட்டிக் கொடுத்தார். போலீஸார் அந்த வீட்டைச் சோதனை போட்ட போது, அங்கிருந்த புத்தகங்கள் எல்லாம் தீர்ந்து போயிருந்தன. தடயம் ஏதும் அகப்படாவிட்டாலும், துமிலனைப் போலீஸார் கூட்டிச் சென்று, கடுமையாய் எச்சரிக்கை செய்து அனுப்பினார்கள்.

தாமே கல்கியின் பிரசாரப் புத்தகம் ஒன்றை அவருக்காகப் பெங்களூரில் அச்சடிக்கக் கொண்டு போனதாகத் துமிலன் தெரிவித்தார். பெங்களூரில் அச்சாகும் பிரதிகள் அந்த ஊர்க் கதர்க் கடைக்குப் போகுமாம். அவற்றைக் கதர்த் துணிக் கட்டுகளில் ஒளித்து வைத்து, பல வேறு ஊர்க்கதர்க்கடைகளுக்கு அனுப்புவார்களாம்.

''அப்போது நீங்கள் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டிருந்தீர்களா?'' என்று துமிலனைக் கேட்டதற்கு, ''நேரடியாக ஈடுபடவில்லை. கல்கிக்கு உதவியாய் இதைப்போல் சில வேலைகள் செய்தேன்'' என்றார்.

''திருச்செங்கோட்டில் இருக்கையில் கல்கி, ஆனந்த விகடனுக்கு எழுதிக் கொண்டிருந்தார் அல்லவா?''

''ஒரு கட்டுரை அல்லது கதை அத்துடன் ஒரு தலையங்கமும் அனுப்புவார்.''

''அவற்றை வி.பி.பி.யில் அனுப்புவார் என்பது உண்மையா?''

''உண்மைதான். வாசகனின் விருப்பப்படி அப்படி அனுப்பினார். நானே பல மாதங்களில் எழுபத்தைந்து ரூபாய் கொடுத்து வி.பி.பி.யைப் பெற்றுக் கொண்டதுண்டு. அதற்காகவே வாசன் என்னிடம் பணம் கொடுத்து வைத்திருப்பார்.''

கல்கியைப் பற்றிப் பலவேறு தகவல்களைச் சொல்லிக் கொண்டிருக்கையில் துமிலன், ''கல்கி நன்றாக மரம் ஏறுவார் தெரியுமோ?'' என்று கேட்டார்.



''சிறுவனாய் இருக்கையில் ஏறுவதுண்டு என்று கேள்விப் பட்டிருக்கிறேன்.''

''முப்பது வயது இளைஞராய் இருக்கையிலும் ஏறிப் பார்த்திருக்கிறேன். நடந்து போகையில் வாய்ப்பான கிளை எதையேனும் கண்டு விட்டால் போதும், அதன் மேல் உட்கார்ந்து ஆனந்தமாய்ப் பாரதியார் பாட்டுக்களைப் பாடுவார்.''



''எங்கே, சென்னையிலா?''

''இல்லை; திருச் செங்கோட்டில்.''

''அங்கே நீங்கள் போவதுண்டா?''

1. மதுரை பிச்சைமுத்தம்மாள் தலைமை வகித்த மூன்றரை மாத காலத்தில் தமிழ் நாட்டில் சிறை புகுந்தோர் இரண்டாயிரம் பேர். இந்தத் தொகை அந்தப் போராட்டம் முழுதிலும் சிறை சென்றோரின் எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்காகும்!

2. ''காந்தி ஆசிரமத்தைச் சேர்ந்த தொண்டர்கள் மிக ஆர்வமான சேவைகள் செய்தார்கள். அந்தத் தொண்டர்களில் ஸ்ரீ ரா. கி. முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர்'' என்று பாராட்டி எழுதிய நாமக்கல் கவிஞர்.

3. ''நண்பர் சதாசிவம் நாடெங்கும் அலைந்து திரிந்து செய்த அருந்தொண்டைக் குறித்து எழுத என் கை கூசுகின்றது.''



''ஒரு சமயம் சில வார காலம் அவருடன் ஆசிரமத்தில் இருந்தேன். அக்கம் பக்கத்து ஊர்களில் எல்லாம் அவருடன் சுற்றினேன். ஆனந்தவிகடனை வாசன் இரண்டு மாதங்களுக்கு நிறுத்தி வைத்திருந்த சமயம் அது.''

''நிறுத்திவைக்கக் காரணம் என்ன?''

''அக்காலத்தில் ஆனந்தவிகடனுடன் ஆனந்தவாஹினி என்ற தெலுங்குப் பத்திரிகை ஒன்றையும் வாசன் நடத்தி வந்தார். அந்தத் தெலுங்குப் பத்திரிகையில் வந்த ஒரு விஷயத்துக்காக, இரண்டாயிரம் ரூபாய் ஜாமீன் கட்டும்படி நோட்டீஸ் வந்தது. வாசன் அதைக் கட்டாமல் இரண்டு பத்திரிகைகளையுமே நிறுத்தி வைத்தார். பிறகு, ஆனந்தவிகடனை மட்டும் மறுபடியும் தொடங்கி நடத்தினார்.''

அப்படி நிறுத்தி வைக்கப்பட்டவை, 1930 ஜூலை, ஆகஸ்டு மாதங்களுக்கான இதழ்கள். ஜூன் மாத ஆனந்த விகடனில், அது பற்றி வெளியான குறிப்பில் ஒரு பகுதியைப் பார்ப்போம்:

...நாம் ஜாமீன் கொடுப்பதற்காகப் பண விஷயத்தில் பின்வாங்கவில்லை. முதலாவதாக அச்சுச் சட்டத்தை ஆட்சேபிக்கிறோம். இரண்டாவதாகப் பணத்தைக் கட்டிவிட்டு ஆனந்தவிகடனில் சாரமற்ற விஷயங்களைப் பிரசுரிக்க இயலவில்லை. எனவே, நாம் ஜாமீன் கொடுக்க மறுத்து அச்சாபீஸ் வேலையைத் தாற்காலிகமாக நிறுத்தி விட்டதைச் சந்தா நண்பர்கள் பாராட்டுவார்களென்று நம்புகிறோம்.

சந்தா நண்பர்கள் சிறிது காலம் கல்கியின் கட்டுரைகளைப் படித்தின்புற முடியாததற்கு வருந்துகிறோம்...

அடக்குமுறை நீண்ட நாட்களுக்குத் தலை விரித்தாட முடியாது. அவசர அச்சுச் சட்டம் எடுத்துவிடப்பட்டவுடன் ஆனந்தவிகடன் சந்தாதாரர்களுக்கு நஷ்டஈடாகப் பிரத்தியேக வெளியீடுகள் அனுப்ப, கூடிய விரைவில் ஏற்பாடுகள் செய்வோம்.

—எஸ்.எஸ். வாசன், ஆசிரியர்

ஆனந்தவிகடன் நின்றிருந்த காலத்தில் கல்கியுடன் சுற்றியது பற்றி, மேலும் சில தகவல்களையும் துமிலன் தெரிவித்தார் :

''அப்போது கல்கியை 'இரகசியப் போலீஸார் தொல்லைப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு அவர், ரொம்பச் சாமர்த்தியமாய் டிமிக்கி கொடுப்பார். யாரேனும் பின்தொடர்வதாய்த் தெரிந்தால், மடமடவென்று நடந்து, தெருக்களில் இப்படியும் அப்படியும் திரும்பி, ஏதேனும் ஹோட்டல் அல்லது வீட்டுக்குள் புகுந்து, பின்வழியாய் வெளியேறி விடுவார்.''

அந்த நாட்களில் கல்கி, பிரசுரங்கள் மூலம் சத்தியாக்கிரகப் பிரசாரம் செய்வதோடு நிற்கவில்லை. நேரிலேயே பலரை அணுகிப் ''போர்க்களம்'' செல்லும்படி தூண்டிக் கொண்டிருந்தார். இதற்கு ஓர் உதாரணம், நாமக்கல் கவிஞரை அவர் தூண்டியது. கவிஞரே அது பற்றிச் சொல்கிறார் :

(காந்தி) ஆசிரமத்தைச் சேர்ந்த தொண்டர்கள் மிகவும் அபூர்வமான சேவைகள் செய்தார்கள். அந்தத் தொண்டர்களில் ஸ்ரீ ரா. கி. முதன்மையாகக் குறிப்பிடத் தகுந்தவர். அந்த இயக்கத்தில் சேலம் ஜில்லாவில் சிறை சென்றவர்களின் எண்ணிக்கை அதிகப்பட்டதற்கு இவருடைய உழைப்பே மிகவும் உதவிற்று. என்னையும் ஸ்ரீ நாகராஜ ஐயங்காரையும் ''ஏன் நீங்கள் இருவரும் சிறைக்குப் போகாமல் வெளியில் இருக்கின்றீர்கள்?'' என்று கேட்கும் பாவனையில் இரண்டு மூன்று முறை நாமக்கல்லுக்குத் தூது வந்தார். அதற்கு நாகராஜ ஐயங்கார் கல்கியிடம் ''இந்தத் தாலுக்காவில் சத்தியாக்கிரகம் ஒழுங்கான முறையில் நடப்பதற்கு ராமலிங்கமும் நானும் கொஞ்ச நாளைக்கு அவசரப்படாமல் இருப்பதுதான் நல்லது'' என்று சமாதானம் கூறினார். ஏராளமான காங்கிரஸ்காரர்கள் உடனே சட்ட மறுப்புச் செய்து சிறைகளை நிரப்பிவிட வேண்டும் என்று துடிதுடித்த இளைஞர் ரா. கிருஷ்ணமூர்த்திக்கு இது திருப்தி அளிக்கவில்லை.

(வெள்ளி மணி 25—7—'47)

அந்த நாட்களில் தாமும் கல்கியும் தேசியச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய விதம் பற்றியும், சதாசிவத்தின் பாட்டுத் திறமை பிரசாரத் திறமை பற்றியும், அதே கட்டுரையில் கவிஞர் கூறுகிறார் :

...ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தி சொற்ப சுகத்தோடு ஓயாது உழைப்பார். முணு முணுக்காமல் எந்த வேலையும் இச்சையோடு செய்வார். பார்த்தால் ஒன்றும் தெரியாதவர் போல் வெகு அடக்க ஒடுக்கமாக இருந்தாலும் காங்கிரஸ் பிரசாரங்களில் வெகு பரபரப்பும் சுறுசுறுப்பும் கொண்டவர். இப்படிப்பட்ட தெய்வீக விசுவாசத்தோடு ஊழியம் செய்த தொண்டர்களின் சிறந்த குணங்களினால் தான் காந்தீயம் அப்போது அவ்வளவு கலபமாக மக்களிடையே பரவுவது சாத்தியமாயிற்று. 'கல்கி' பத்திரிகையில் ஸ்ரீ ரா. கிருஷ்ணமூர்த்தியுடன் இப்போது கூட்டாளியாக இருக்கிற ஸ்ரீ சதாசிவமும் அப்போது எங்களோடு பிரசாரங்களில் ஈடுபட்டிருந்தார். ஸ்ரீ சதாசிவம் பாரதியாரின் பாடல்களை வெகு கம்பீரமான குரலில் நல்ல பாணியோடு பாடுவார். தமிழ் நாட்டில் பாட்டுப் பாடியே கூட்டம் கூட்டும் பழக்கத்தை முதன் முதலில் கையாண்டவர் ஸ்ரீ சதாசிவம்தான். விளம்


தொட்டிட மழமழ
மென்மை...
தோற்றமோ
புத்தம் புதுமை
LUX
NEW!
LUX
POWDER
SOFT AS NEW
லக்ஸ் பவுடர்
நேர்த்தியான துணிகளைப் புதுக் கருக்கான
மென்மையோடு வைத்திருப்பது லக்ஸ் பவுடர்
சென்னையிலும்
பெங்களூரிலும்
மட்டுமே கிட்டும்.
துணிகளுக்கு மென்மையூட்டும் விசேஷப் பொருள்கள் உள்ளன
லக்ஸ் பவுடரிலே; மதிப்பரிய ஆடைகளை அவை புதுக் கருக்கான
மென்மையோடு பேணுகின்றன...சலவைக்குச் சலவை.
ஸில்க், கம்பளி, ஸிந்தெட்டிக் துணிகள் போன்ற மென்மையான எல்லாத்
துணிகளையும் சலவையிலே பூப்போலப் பராமரிப்பது மென்மையான லக்ஸ்.
வுல்மார்க் உடையது லக்ஸ் ஒன்றுதான்--சர்வதேசக் கம்பளிச் செயலகத்தின் நற்சான்று முத்திரை அது.
லின்டாஸ்-LXP. 7 MB-140 TM
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.



''தெரியுமா? என்னுடைய மனைவி ஒரு ஏழைக் குடும்பத்திலிருந்து வந்தவள்.''
''அதிர்ஷ்டசாலி நீர்! என் மனைவி ஒரு ஏழைக் குடும்பத்தை வருத்தவள்.''

பரமே செய்யாத நாட்களிலும் அவர் வந்து அரை மணி நேரத்துக்குள் ஆயிரக் கணக்கான ஜனங்களைத் திரட்டி விடுவார். அதற்குப் பிறகு வெகு கலபமாக ஸ்ரீ ரா. கி.யும் நானும் பிரசங்க மாரி பொழிவோம்.

சதாசிவத்துடன் கல்கி இணைந்து இரண்டு மாத காலம் தேசியப் பணி ஆற்றினர். இணைப்பான அந்தப் பணி வாய்த்தது எப்படி என்பதைக் கல்கியே சொல்லட்டும் :

...எனது பழைய சிறை நண்பரான ஸ்ரீ. இ. சதாசிவம் மாகாணக் (காங்கிரஸ்) காரிய தரிசி. பதவி ஏற்றுக் கொண்டார். அவருடைய முதல் காரியங்களில் ஒன்று, ''தான் காரிய தரிசியாயிருப்பதால் நீர் உடனே வந்து சேரவேண்டும்'' என்று எனக்குப் பிறப்பித்த மறுக்க வொண்ணுத கட்டளையாகும். அவ்வளவுதான், இரண்டு வருஷ சிறை வாசத்துக்கு ஆயத்தம் செய்து கொண்டு கிளம்பினேன்...

அந்த இரண்டு மாத காலமும் தமிழ் நாட்டு காங்கிரஸ் தலைவியாய் இருந்த மாதரசி டாக்டர் பிச்சைமுத்து அம்மாளின் உதவி கொண்டு நண்பர் சதாசிவம் நாடெங்கும் அலைந்து திரிந்து செய்த அருந் தொண்டைக் குறித்து எழுத என் கை ஊறுகின்றது. அதை எழுதப் புகுந்தேனுயின் இது ''சுய புராண''மாவதற்குப் பதிலாக வேறு ஒரு புராணமாகி விடும். ஆதலின், அவர்களுடன் சில சமயம் சேர்ந்தும், சில சமயம் தனியாகவும் என்னால் இயன்ற தொண்டு செய்து வந்தேன் என்று மட்டும் குறிப்பிடுகிறேன்.

(ஆ. வி. 14—4—'31)

ராஜாஜி சிறை புகுந்த போது, அவர் வகித்திருந்த, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைமைப் பதவியை ருக்மிணி லக்ஷ்மிபதி ஏற்றூர். அவர் கைதானதும், அந்தப் பதவி, மதுரை பிச்சைமுத்தம்மாளைச் சார்ந்தது. அந்த டாக்டர் அம்மாள் தலைமை வகித்த மூன்றரை மாத காலத்தில், தமிழ் நாட்டில் சிறை புகுந்தோர் இரண்டாயிரம் பேர். இந்தத் தொகை அந்தப் போராட்டம் முழுதிலும் சிறை சென்றேரின் எண்ணிக்கையில் மூன்றில் இரு பங்காகும்.

அவரும், அவருடன் சதாசிவமும் தாமும் செய்த பணி பற்றி, மற்றெரு கட்டுரையில் கல்கி விவரம் தந்திருக்கிறூர். ''அப்போர் தமிழ் நாட்டில் பெரும்பாலும் ஒரு பெண்மணியின் தலைமையிலேயே நடந்தது என்னும் ஆச்சரியமான விஷயத்தை நான் உங்கள் முன்னிலையில் இப்போது சொல்கிறேன்'' என்று தொடங்கி, கல்கி சொல்கிறூர்

டாக்டர் பிச்சைமுத்தம்மாளுக்கு உதவியாக அவருடன் பல ஊர்களுக்குப் போகும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அலுப்புச் சலிப்பு என்பதின்றி எவ்வளவோ கஷ்டங்களையும், இடைஞ்சல்களையும் பொருட்படுத்தாமல், அம்மாள் ஊர் ஊராகச் சென்று பொதுக்கூட்டங்களில் பேசி ஜனங்களை ஊக்கப்படுத்தினர்கள்...

அம்மாள் சாந்த குணமும், சாதுவான தோற்றமும் உடையவர். (ஆனல்) அவருடைய மனேதைரியம் வியத்தற்குரியதாகும். கோயமுத்தூரில் அம்மாளின் தலைமையில் நடந்த ஒரு பெரிய பொதுக்கூட்டம் இப்போது என் மனக் கண் முன் காட்சியளிக்கிறது. கூட்டம் தொடங்கும் சமயத்தில், ஒருவர் ஓட்டம் ஓட்டமாக ஓடிவந்து, பக்கத்திலுள்ள ஒரு கட்டடத்தில் ஸ்பெஷல் போலீஸ்காரர்கள் குண்டாந்தடி சகிதம் கூடியிருப்பதாகவும், அவர்கள் பொதுக்கூட்டத்தை அடித்துக் கலைக்கப் போகிறுர்கள் என்றும் தெரிவித்தார். இந்தச் செய்தியை நண்பர் சதாசிவம் கூட்டத்தில் இருந்தவர்களுக்கு எடுத்துக் கூறி, தடியடிகளைத் தாங்கிக் கொண்டு தைரியமாக உட்கார்ந்திருக்கக் கூடியவர்கள் மட்டும் இருக்கலாம் என்றும், மற்றவர்கள் எழுந்து போய் விடலாம் என்றும் சொன்னர். ஒருவரும் எழுந்து போகவில்லை. ஆனல் இந்தச் செய்தி வெறும் 'உடான்ஸா'கப் போயிராமல் உண்மையிலேயே அன்று போலீஸ்காரர்கள் வந்து தடியடிப் பிரயோகம் செய்திருந்தால் அவர்களில் எத்தனை பேர் எழுந்து போகாதிருந்திருப்பார்கள் என்று சொல்ல முடியாது. அநேகருக்கு நெஞ்சு பட்பட்டென்று அடித்துக்கொண்டிருந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனல் ஸ்ரீமதி பிச்சைமுத்து அம்மாளிடம் மட்டும் அணுவளவேனும் பரபரப்பாவது பதைபதைப்பாவது காணப்படவில்லை. அந்தச் சமயத்தில் அம்மாள் வழக்கம்போல் கிழக் கிந்தியக் கம்பெனியார் வந்து இந்தியாவில் பருத்தித் தொழிலை அழித்த பழைய கதையை எடுத்துக் கொண்டு—சாவதானமாகப் பேச

ஆரம்பித்தார்கள் என்றால், அவருடைய மனம் சிறிதும் கலங்கவில்லை என்பதற்கு வேறு என்ன ருசு வேண்டும்?....

அம்மாளின் குரலும் மிகவும் மெலிந்த குரல். எனவே பெரிய கூட்டங்களில் அவர் நீளமாகப் பேசத் தொடங்கிவிட்டால், உட்கார்ந்திருப்பவர்கள் பாடு உண்மையில் சங்கடந்தான் என்பதில் சந்தேகமில்லை. கும்பகோணத்தில் நடந்த கூட்டத்தில் ஒருவர் இடையில் எழுந்து நின்று, ''அம்மாள் பேசுவது காது கேட்கவே இல்லை, கொஞ்சம் உரக்கப் பேசினால் நல்லது'' என்றார். அதற்கு நான் சமாதானம் சொல்ல வேண்டியதாயிற்று. ''இம்மென்றால் சிறைவாசமும், ஏனென்றால் தடியடிப் பூசையுமாய் இருக்கும் இந்நாளில் இந்த அம்மாள் தமது வருவாயை எல்லாம் விட்டு, எல்லாக் கஷ்டங்களுக்கும் துணிந்து, காங்கிரஸ் தலைவியாக உங்கள் முன் வந்து நிற்பது ஒன்றே போதாதா? அவர்கள் பேசி நீங்கள் கேட்கவும் வேண்டுமா? அவரைப் பார்த்து மனம் திரும்பாத நீங்கள் அவர் பேச்சைக் கேட்டுத் தானா திரும்பப் போகிறீர்கள்?'' என்று சொல்லி அவரை உட்கார வைத்தேன்...

டாக்டர் பிச்சைமுத்தம்மாள் காங்கிரஸ் தலைமை வகித்தபோது நடந்த சம்பவங்களில் திருச்சி கலாசாலை மறியல் கடைசியானதாகும். அதிலேதான் அம்மாள் சிறை புகுந்தார்கள். இப்போது பலனைக் கொண்டு பார்த்தால் சுத்த அசட்டுத்தனம் என்று தோன்றும். அந்த முயற்சி அப்போது ஏன் நடத்தப்பட்டது என்னும் ரகசியத்தைச் சொல்கிறேன், கேளுங்கள். தமிழ் நாட்டில், சிறை செல்லத் தயாராய் இருந்தவர்கள் எல்லாரும் அநேகமாய் ஆகஸ்ட் மாதத்துக்குள் சிறை புகுந்து விட்டார்கள். தலைவி டாக்டர் பிச்சைமுத்தம்மாளும் இன்னும் இரண்டொருவரும் தான் மிகுந்திருந்தார்கள். அம்மாளோ சிறைக்குப் போக வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருந்தார். அவரும் மற்றுமுள்ள சிலரும் போய்விட்டால் அப்புறம் காங்கிரஸ் வேலை என்னாவது? ஆதலின், ''எப்படியும் சிறைக்குத்தான் போகப் போகிறோம், நமக்குப் பின்னால் வேறு சிலர் வரக்கூடிய வழியில் போகலாம்'' என்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

திருச்சியில் இரண்டாயிரம் மாணாக்கர்களுக்கு மேல் இருக்கிறார்களே? இவர்களில் ஆயிரம் பேராவது தேசபக்தி உடையவர்களாய் இருக்க மாட்டார்களா? இவர்களிலே ஐந்நூறு பேராவது மறியலின் பயனாகச் சுதந்திரப் போரில் சேர மாட்டார்களா? வேண்டாம்! நூறு பேர் வரட்டுமே! இவர்கள் போய் மற்ற ஊர்க் கலாசாலைகளில் மறியல் செய்தால், அங்கங்கே நூறு நூறு பேர் வருவார்கள் அல்லவா? இவர்களைக் கொண்டு தமிழ் நாட்டையே ஓர் ஆட்டு ஆட்டி விடலாமே! இப்படியெல்லாம் ஒரு பக்கம் ஆசை. மற்றொரு பக்கம், ''ஒரு மாணாக்கன் கூட வராவிட்டால்தான் என்ன? நாம் எப்படியும் சிறைக்குப் போகிறோம் அல்லவா?'' என்ற திருப்தி.

திருப்தி ஏற்பட்டது. ஆனால் ஆசை நிறைவேறவில்லை. மூன்று நாள் மறியல் நடந்தது.



''வந்தது எனக்காக; வாழ்வது பிறருக்காக; சிந்தனை நட்புக்காக; செயலெல்லாம் கடமைக்காக.'' இதுவே ஸ்ரீசாயி முருகனின் வாழ்க்கை ரகசியம் ஆகும். தம்மிடம் வருவோர் குறைகளையெல்லாம் தாயினும் மேலான கருணை கூர்ந்து விசாரித்து அதற்குத் தக்க வழி வகைகளைச் செய்வார்.

ஸ்ரீ முருகனின் திருவருளும், அன்னை ஸ்ரீ புவனேசுவரியின் அருட்பார்வையும் பெற்ற இவர் உதகை ஸ்ரீசாயி முருகன் சேவா சங்கத்தின் அழைப்புக்கு இணங்க இம்மாதம் 16ந் தேதி வரை உதகையில் தங்குவார். உதகைவாழ் மக்கள் இவரது விஜயத்தால் பயன் அடைவார்களாக.

திருச்சி நகரம் அந்த மூன்று நாளும் அல்லோல கல்லோலப்பட்டது. மாணாக்கர்களும் அந்த மூன்று நாட்களும் கலாசாலை போகாமல் இருந்தனர். தலைவர் டாக்டர் பிச்சைமுத்தம்மாள் சிறை புகுந்தார். காரியதரிசி சதாசிவமும், அவர் பெங்களூரிலிருந்து கொண்டு வந்திருந்த தொண்டர்களும் சிறை சென்றார்கள்.

டாக்டர் அம்மாள் சிறை புகுந்த காட்சி கல்லையும் கரையச் செய்திருக்கும். ஆனால் நமது மாணாக்கர்கள் கேவலம் கல்லா என்ன? ''கோடையிடி'' மகாலிங்கய்யர் அந்நாட்களில் மாணாக்கர்களுக்குப் போட்ட சத்தம், மலையடிவாரத்தில் போய்ப் போட்டிருந்தால் மலைகூடப் பெயர்ந்திருக்கும். ஆனால் நமது மாணாக்கர்கள் கேவலம் மலையா என்ன? அவர்கள் அசையவில்லை....

தேசத்துக்காக ஒரு வருஷப் படிப்பைத் தியாகம் செய்யும்படி டாக்டர் அம்மாள் மாணாக்கர்களைக் கேட்டுக் கொண்டார். அம்மாளின் வேண்டுகோளை எல்லா மாணாக்கர்களும் கேட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும் என்று ஒரு நிமிஷம் யோசித்துப் பாருங்கள். சுதந்திரப் போரில் தமிழ்நாடு இரண்டு மடங்கு பிரகாசித்திருக்கும். மாணாக்கர்கள், சிறைவாச அனுபவமும், நல்ல தருணத்தில் தாய் நாட்டுக்குத் தொண்டு செய்தோம் என்னும் ஆத்ம திருப்தியும் அடைந்திருப்பார்கள்.

(ஆ. வி. 16—12—'31)

கல்கியின் சித்தி குமாரர், சுப்புணி என்ற வி. சுப்பிரமணியத்தை, ''அந்த மறியலில் நீங்கள் கலந்து கொண்டீர்களா?'' என்று இந்த நூலின் ஆசிரியன் கேட்டபோது, ''மறியல் செய்தவர்களுக்குப் பணிவிடை செய்தேன்'' என்று பதில் சொன்னார். ''அண்ணா சொன்னபடி மறியல் தொண்டர்களுக்குப் பால் கொடுத்



''புதுக்கோட்டை, ராமசாமி, சின்னசாமி, கோவிந்தசாமி, வண்ணாரப்பேட்டை அப்துல் காதர், அரும்பாக்கம் ரமேஷ், ரகு, பாமா, சேலம் ஷேக் மொஹதீன், திருச்சி பொன்னுசாமி, அன்வர்கான், மதுரை மாரிமுத்து, சுப்பிரமணியம்; மயிலாப்பூர் ஹேமா, ரமா, பூமா; கோயமுத்தூர் பாலு, சோமாஸ், கந்தன், ரமேஷ் நண்பர்கள், ஆழ்வார்பேட்டை விஜயா; திருவல்லிக்கேணி சரஸ்வதி, சுந்தர், கோபாலபுரம் வரதராஜன், ராஜாமணி நண்பர்கள்; அருப்புக்கோட்டை காத்தவராயன், ராமதுரை, ரங்கசாமி, கிருஷ்ணசாமி, கோபாலகிருஷ்ணன்; சிவகங்கைசுப்பிரமணியன், அனந்தகிருஷ்ணன்; ராயபுரம் பேட்டை பாலா, மணியன், நண்பர்கள்; திருக்கோஷ்டியூர் கண்ணன், கோவிந்தன்; ராயப்பேட்டை பிந்து மாதவராவ், கோவிந்த ராவ், குண்டுராவ் மற்றும் பலர் விரும்பிக் கேட்ட பாடலை நேரம் இல்லாததால் நானே ஒலிபரப்புகிறேன்....'' கே.ஆர்.

தேன். டாக்டர் சாமிநாத சாஸ்திரி வீட்டிலிருந்து குடம் குடமாய்க் காய்ச்சின பாலை, ஒரு மாட்டு வண்டியில் வைத்துக் கொண்டு, ஒவ்வொரு கல்லூரி வாசலிலும் நின்ற தொண்டர்களுக்குக் கொடுத்தேன்.''

''உங்கள் அண்ணு என்னென்ன செய்தார்?''

''முன்கூட்டிச் செய்ய வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்தார். மறியலுக்கு முதல் நாள், பெரிய பொதுக் கூட்டம் ஒன்றில் பேசினர். தாம் படித்த கலாசாலையின் வாசலிலேயே மறியல் செய்தார்.''

''மறியல் என்றல், கோஷம் இட்டாரா? அல்லது....''

''மற்றத் தொண்டர்களுடன், வாசலில் குறுக்கே படுத்துக் கொண்டார்.''

செப்டம்பர் ஐந்தாம் தேதி, டாக்டர் பிச்சை முத்தம்மாளும் சதாசிவமும் சிறை புகுந்தார்கள். அப்படிப் புகுவதற்கு முன்னல் அவர்கள் முறையே, சாமிநாத சாஸ்திரியைத் தமிழ் நாட்டுக் காங்கிரஸின் தலைவராகவும், கல்கியைக் காரியதரிசியாகவும் நியமித்தார்கள். தாம் உடனேயே கைது செய்யப்படலாம் என்பதைக் கல்கி எதிர்பார்த்து, அதற்காக ஏழெட்டு நாட்கள் திருச்சியிலேயே இருந்தார். ஆனல் வாரண்டு ஏதும் வராததால், மதுரை, உத்தமபாளையம், பெரிய குளம், பொள்ளாச்சி, கோயமுத்தூர், திருப்பூர் முதலிய ஊர்களுக்குப் போய்ப் பிரசாரம் செய்தார்.

24ம் தேதி கோபிச்செட்டிப்பாளையத்துக்குச் சென்றார். அங்கே நடந்தது என்ன என்பதை, மறுபடியும் ''சுய புராணம்'' கட்டுரையில் கல்கியே சொல்லக் கேட்போம் :

அன்று மாலை ஒரு பொதுக்கூட்டம் நடத்தத் தீர்மானித்தோம். தடி கொண்டு அடித்தோ, வேறு எந்தவிதத்திலோ, கூட்டம் நடைபெருமல் தடுத்துவிட வேண்டும் என்று கண்டிப்பான உத்தரவு வந்திருப்பதாய்ச் சிலர் சொன்னர்கள். உண்மையில் இவ்வளவு மகத்தான சம்பவம் ஏதும் நடைபெறவில்லை. கேவலம் ஒரு 144 ஆவது உத்தரவுதான் வந்தது. அதையும் கூட்டத்தில் நான் பேச எழுந்திருக்கும் சமயத்தில் கொண்டு வந்து கொடுத்தார்கள். ''அப்பனே! மகாராஜனுய் இரு!'' என்று அவரை மனதார வாழ்த்தி விட்டு, இன்றுடன் நம் தொல்லை எல்லாம் தீர்ந்தது என்று, களிப்புடன் ஏதேதோ பேசி முடித்தேன்...

144ஆவது பிரிவின்படி பிறப்பித்த உத்தரவை மீறிப் பொதுக்கூட்டம் நடத்தி அதன் மூலம் அமைதிக்குப் பங்கமும் பொதுஜனங்களுக்கு அசந்துஷ்டியையும் உண்டாக்கினதாக என்மீது வழக்கு.

நான் கொடுத்த வாக்குமூலம் வருமாறு: ''144வது உத்தரவை நான் மனதார, வேண்டுமென்று மீறி நடந்தது உண்மையே. ஆனல் அமைதிக்குப் பங்கம் உண்டாக்கினதாகச் சொல்வது உண்மையல்ல. அது என் தர்மத்துக்கு விரோதம். ஜனங்களுக்கு அசந்துஷ்டி உண்டாக்கினதாகச் சொல்வதும் பொய். அதற்கு மாருக, என் பேச்சைக் கேட்ட சபையினர் அடிக்கடி குதூகலமாய்ச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பில் இப்போது சாட்சி கூறிய ஹெட் கான்ஸ்டபிளும் கலந்துகொண்டார்.''

இந்தக் கடைசி வாக்கியம் கோர்ட்டிலும் சிறிது நகைப்பை உண்டாக்கிற்று. ''ஆறு மாதம் வெறுங் காவல்'' என்று கடைசியாக மாஜிஸ்டிரேட் கூறியபோது, அவ்வளவு சுலபமாக நான் விடுபடுவேன் என்று கனவிலும் கருதவில்லை.

(ஆ. வி. 14—4—'31)

முதலில் கல்கியைக் கோயமுத்தூர் சிறையில் வைத்தார்கள். முன்பு திருச்சிச் சிறையில் வரவேற்றது போல, அங்கேயும் சதாசிவம் அவரை வரவேற்றார்.

மூன்றரை மாதங்களுக்குப் பிறகு, கல்கியைக் கள்ளிக் கோட்டைச் சிறைக்குக் ''கமான்'' செய்தார்கள் — அதாவது, மாற்றல் செய்தார்கள்.

மகாத்மா காந்திக்கும் இராஜப் பிரதிநிதிக்கும் இடையே உடன்படிக்கை ஏற்பட்டதன் பேரில், மற்ற அரசியல் கைதிகளைப் போலவே அவரையும், முழுத் தண்டனைக் காலத்துக்கு முன்னதாகவே, 1931 மார்ச்சு 19ஆம் தேதியன்று விடுதலை செய்தார்கள். (தொடரும்)

காட்சி 15

(வக்கீல் சத்தியநாராயணா வீடு. பாத்திரங்கள்: சத்தியநாராயணா, பங்கஜம், பாதிரியார்.)

சத்தியநாராயணா: ஃபாதர், காரு... இப்புடு கேஸ் சால பாக உந்தி. இங்க ஒரு வாரம் உந்தி. உங்க கேஸ் ஜெயிக்குது. அந்த டாக்ஸி டிரைவர்கூடப் போலீஸ்லே ஸரண்டர் ஆவலாம். தப்பு லேது... நான் பார்த்துக்கறேன். பிராஸிக்யூஷன் சாட்சி— ஆதை நான் துவம்சம் செய்தானு.... ஈ... ஸ்டேட்மெண்ட் ஒகடி சாலு.

அருமைநாயகம்: சரி. அந்தத் தாமஸை இப்பவே போலீஸ்லே ஒப்படைச்சுடலாமா?

சத்: ஒத்து. கூடாது. நேனு டைம் செப்தானு. அப்ப செய்யலாம். ஆடண்டி ஃபாதர்! பிராஸிக்யூஷன் உங்க கேஸ், தாமஸ் கேஸ் இரண்டுலேயும் தூள் தூளாகறதண்டி. பௌடர் சேஸ்தானு; சட்னி சேஸ்தானு! இப்புடு நானு மெட்ராஸ்லே முதல் பத்து வக்கீல்லே ஒண்ணு. இதுக்கப்புறம் அட்வகேட் ஜெனரலுக்கு நெக்ஸ்ட் நாதான்.



அரு: இப்பவே ஏன் இதெல்லாம் பேசணும்? நான் ஆரோக்கியசாமியைப் பார்த்துட்டு வரேன்.

சத்: எந்துகு?

அரு: ஆரோக்கியசாமி தானாகவே தன் மகன் செய்த தவற்றையும் ஒத்துக்கிட்டுப் போலீஸ்லே தான் கொடுத்த தகவலையும் பொய்னு ஒத்துக்கிட்டா ஆண்டவன் அவரை மன்னிச்சுடுவான்.

சத்: ஆண்டவன் எந்துகு மன்னிக்காவாலா? ஆண்டவன் கையிலே மன்னிப்பு ஸ்டாக் ரொம்ப சும்மிகா உந்தி. ஆல்வாரும் தப்பு செய்யறாங்க. அல்லாரையும் மன்னிச்சு மன்னிச்சு இப்ப ஆண்டவன்கிட்ட மன்னிப்பு ஸ்டாக் லேது. எம்.எல்.ஏ.வை மன்னிக்கறுரு. எம்பியை மன்னிக்கறுரு. மினிஸ்டரை மன்னிக்கறுரு. ஆரோக்கியசாமிக்கு மன்னிப்பு இருக்காது. ஆரோக்கியசாமி போனக்கு ரொம்ப நீளங்கா உந்தி!

அரு: ஆண்டவன் கருணைக்கு அளவேது? அதுவும் இல்லாம ஆரோக்கியசாமி தன்னுடைய பொய்க் கம்ப்ளெயிண்டை வாபஸ் வாங்கிக்கிட்டு நடந்த உண்மையை ஒத்துக்கிட்டா அவர் குடும்பத்துக்குப் பெரிய கௌரவம் கிடைக்கும். அவர் மகனாலே அழிஞ்ச கௌரவத்தை, இவர்தான் பெருந்தன்மையினாலே திருப்பிக் கொண்டு வர முடியும்.

சத்: ஆரோக்கியசாமிக்குக் கௌரவம் எந்துகு? டப்பு வந்தா, அது சாலு. இப்புடு அவர் கம்ப்ளெய்ண்ட் பொய் அனி சொல்லி, வாபஸ் வாங்கிட்டா அப்புறம் கேஸ் நடக்கறதுக்கு நேனு எந்துகு? நா கொடுக்கு வெங்கட் நடத்துவானு! ப்ளீஸ்! இப்புடு மெட்ராஸ்லே நேனு முதல் பத்து வக்கீல்லோ ஒண்ணு. ஈ கேஸ் நடத்தா, நெக்ஸ்ட் அட்வகேட் ஜெனரல் சான்ஸ்கூட ஒஸ்துந்தி.

அரு: நீங்க அட்வகேட் ஜெனரல் ஆகப் போறீங்களா, ஜட்ஜ் ஆகப் போறீங்களாங்கறது, இப்ப எனக்கு முக்கியம் இல்லே. கேஸுக்கு இன்னும் ஒரு வாரம் இருக்குது. அதுக்குள்ளே ஆரோக்கியசாமி உண்மையை ஒத்துக்கிட்டா, போலீஸ்லே கேஸையே வாபஸ் வாங்கினாலும் வாங்கலாம் இல்லையா?

சத்: உம்.

அரு: அப்போ, ஆரோக்கியசாமிக்குக் கௌரவம், பெருந்தன்மை, தீதாவுக்கும் நடந்து போன ஒரு கெட்ட நிகழ்ச்சியைப் பத்திக் கோர்ட்டுலே பேச வேண்டிய அவசியம் இருக்காது. தாமஸ் பேரிலேயும் தொலைக் குற்றம் இருக்காது.

சத்: எனக்கும் வேலை இருக்காது. அட்வகேட் ஜெனரல் சான்ஸ் இருக்காது. ஃபாதர் காரு! நான் சொல்றது கேளண்டி.

அரு: ஐ யாம் ஸாரி மிஸ்டர் சத்தியநாராயணா. உங்களுக்கு வரக்கூடிய பதவியையும் புகழையும்விட மத்தவங்களுக்குத் திரக்கூடிய பிரச்னைகள் எனக்கு முக்கியமா இருக்குது. நீங்க உங்களைப் பத்தியே நினைக்கிறீங்க. அந்தக் கீதா பத்தி நினையுங்க.....

சத்: எந்துகு? நான் என் ஒய்ஃப் பங்கஜம் தவிர வேற எந்தப் பொம்பிளை பத்தி நினைக்கிறது லேது. நீங்க பாதராக இருந்துகொண்டு ஊரிலே இருக்கிற பொம்பிளை பத்தி நினைன்னு சொல்றது ரொம்பத் தப்பு!

அரு (சிரித்துக் கொண்டே): இட் ஈஸ் ஆல் ரைட். நான் ஆரோக்கியசாமியைப் போய்ப் பார்க்கிறேன்.

சத்: அவரு உண்மையை ஒப்புக்கமாட்டாரு. அவரு கம்ப்ளெய்ண்ட் வாபஸ் வாங்க மாட்டாரு.

அரு: உண்மையை ஒப்புக்கிற மனோதைரியத்தையும் பெருந்தன்மையையும் ஏசு அவருக்குக் கொடுப்பாருன்னு நான் நம்பறேன்.

சத்: வேங்கடாசலபதி குடுக்கமாட்டாருன்னு நேனு நம்பறேன்.

(பங்கஜம் வருகிறாள்.)

பங்கஜம்: வாங்கோ... வாங்கோ.... ஹார்லிக்ஸ் சாப்பிடறேளா?

சத்: ஹார்லிக்ஸ் ஒத்து. என் கேஸ¬ அவர் கெடுக்கிருரு.

பங்: எல்லாம் கேட்டுண்டுதான் இருந்தேன். நீங்க கவலேப்படாதேள். அந்த ஆரோக்கியசாமி உண்மையை ஒப்புக்கமாட்டார்.

அரு: இல்லேயம்மா; எந்த மனுஷனுமே உண்மையை எப்பவாவது ஒத்துக்கிட்டுத்தானே ஆகணும்? உண்மையை ஒப்புக்காட்டி அழிவுதானே வரும்?

பங்: தெரிஞ்ச மாதிரி பேசாதேள். உண்மையை ஒத்துக்காதவாள்ளாம் அழிஞ்சு தான் போயிடறுளா? இன்னும் சட்ட சபை, பார்லிமெண்ட் எல்லாம்கூட உயிரோடத் தான் இருக்கு. தெரியுமோல்லியோ?

அரு: எனக்கு அரசியல்லே ஈடுபாடு இல்லே!

பங்: அதனுலேதான் எப்பவுமே உண்மையைப் பத்திப் பேசிண்டு இருக்கேள். கொஞ்சம் அரசியலும் தெரிஞ்சுக்கோங்கோ. அப்பத்தான் உண்மையைக் கொஞ்சமாவது மறப்பேள்.

அரு: என்ன மிஸ்டர் சத்யநாராயண! உங்க ஒய்ப்ப இவ்வளவு பாலிடிக்ஸ் பேசறுங்க.

சத்: ஏம் சேலேதி? இப்ப வேடி சொல்றது தானே பாலிடிக்ஸ்! ஜெண்ட்ஸ் வாய் மூஸ் கோனி பேசாம இருக்கவால.

அரு: சரி. நான் புறப்படறேன்.

பங்: ஆரோக்கியசாமி வீட்டுக்குப் போகாதீங்கோ.

அரு: இல்லேம்மா. அவருக்கும் பொருத்தன்மையா நடக்கவும், பாவ மன்னிப்புக் கேட்கவும் ஒரு சந்தர்ப்பம் இருக்குது. அதை அவருக்குத் தெரியப்படுத்தறது என் கடமை. அவரும் ஓர் உண்மையான கிறிஸ்தவராக மாறட்டும்.

பங்: ஒரே ஒரு பொய் கிறிஸ்தவர் இருந்துட்டுப் போகட்டுமே, என்ன இப்ப? நான் அட்வகேட் ஜெனரல் பொண்டாட்டியாற சான்ஸ் இருக்கு. அதைக் கெடுக்காதீங்கோ.

(ஃபாதர் வெளியே போகிருர்.)

சத்: ஏடு கொண்டல வாடா! வெங்கடரமணு! அந்த ஆரோக்கியசாமி உண்மையை ஒப்புக்கக் கூடாது. அவருக்கு நல்ல புத்தி குடு. அவர் கம்ப்ளேயிண்ட் வாபஸ் வாங்க மாட்டேன் அனி ஃபாதர்கிட்ட சொல்லணும். அப்புடு நேனு ஈ ஃபாதர் திருப்பதிக்குக் கூட்டிக்கினு வந்து தலேக்கு மொட்டை அடிக்குது.

பங்: முருகா! பழனி ஆண்டவா! நான் ஃபாதரைப் பழனிக்கு அழைச்சிண்டு வந்து அவர் தலேக்கு மொட்டை அடிக்கறேன்!

சத்: இரண்டு தடவை மொட்டை அடிச்சா அவர் தலே பாவம், ஏமி ஆவறது?

பங்: சரி.... திருப்பதிலே பாதி, பழனிலே பாதி.

சத்: வாடு பாதிரி. அதை மறந்துட்டோமே!

''இல்லேயம்மா; எந்த மனுஷனுமே உண்மையை எப்பவாவது ஒத்துக்கிட்டுத்தானே ஆகணும்? உண்மையை ஒத்துக்காட்டி அழிவுதானே வரும்?''

காட்சி 16

(ஆரோக்கியசாமி வீடு. பாத்திரங்கள்: ஆரோக்கியசாமி, அருமைநாயகம்.)



ஆரோக்கியசாமி: எனக்கு நீங்க சொல்ற முறையிலே பெருந்தன்மையோ, கௌரவமோ வேண்டியதில்லே.

அருமைநாயகம்: போலீஸ்லே கொடுத்த பொய் கம்ளெயிண்டை வாபஸ் வாங்கிஞ... உங்களுக்கு ஆண்டவன் மன்னிப்புக் கிடைக்கும். நீங்க கன்ஃபெஷன் பண்ணறதுதான் நியாயம்.

ஆரோ: கன்ஃபெஷன், பாவ மன்னிப்பு பத்திப் பேச நீங்க யாரு? இப்ப நான் சர்ச்சுக்கு வந்து கன்ஃபெஷன் பண்றதா இருந்தா கூட உங்க மூலம் செய்ய முடியாதே? நீங்க இப்போ ஒரு பாதிரியாராக இயங்கவில்லே, மிஸ்டர் அருமைநாயகம்! அதுக்குக் காரணம் என்ன? யோசிச்சுப் பாருங்க. உங்க மேலே வந்த அவதூறுகள். பிஷப்பை விலைக்கு வாங்க முடியாதுன்னு சொன்னீங்க. ஆனு அவர் நியாயத்தை எடை போட உபயோகிக்கும் தராசை என்னுலே விலைக்கு வாங்க முடியும்னு காட்டினேனு இல்லேயா? பேப்பர்லே நியூஸ் வந்ததாலே உங்களுக்குத் துணையா நின்ன பிஷப்புக்கு வேறே வழி இல்லாம போச்சு. அவர் கண்களைச் செய்திகள் மறைச்சுடிச்சு. அந்தப் பத்திரிகைச் செய்திகளை நான்தான் விலைக்கு வாங்கினேன். தெரியுமில்லேயா?

அரு: அதைப் புரிஞ்சுக் கிட்டேன்.

ஆரோ: இன்னும் சில விஷயங்களையும் நீங்க புரிஞ்சுக்கணும். என்னுலே எதையுமே விலைக்கு வாங்க முடியும்னு இன்னும் உங்களுக்குப் புரியலேயே. அதனுல்தானே என் கிட்ட வந்து பெருந்தன்மை பத்தியும், கௌரவம் பத்தியும் பேசறீங்க? அதையும் என்னுலே விலைக்கு வாங்க முடியும்....

அரு: பெருந்தன்மையும் கௌரவமும் கடைச் சரக்கு இல்லே, விலைக்கு வாங்க. நம்ம நடத்தையினுலே தான் அவை நம்மைத் தேடி வரணும்.

ஆரோ: பர்ஸைத் தேடி எல்லாமே வரும், மிஸ்டர் அருமைநாயகம்! பெருந்தன்மையையும், கௌரவத்தையும்நான் விலைக்கு வாங்கறேனு இல்லேயா பாருங்க.

அரு: எதை வாங்கி என்ன பிரயோசனம்? உண்மையை உங்களாலே என்ன கொடுத்தும் விலைக்கு வாங்க முடியாது!

ஆரோ: உண்மைக்கும் ஒரு விலே உண்டு, உங்களுக்கும் ஒரு விலே உண்டு!

அரு: உண்மை சந்தைக்கு வந்த பொருள் இல்லே.

ஆரோ: சந்தையில் அதற்குக் குறிப்பிட்ட ஒரு விலே இல்லாது போகலாம்; ஆனுல் ஏதோ ஒரு விலே உண்டு. உண்மை, உண்மைன்னு பைத்தியம் பிடிச்சு அலேயற உங்களைப் போல் உள்ளவங்களும் உங்க விலேயைச் சொல்லமாட்டீங்க. ஆனு நானுகவே விலேயைக் கண்டுபிடிச்சு மதிப்புப் போட்டுக் கொடுத்தேன்னு, உண்மை, நீங்க, உங்க நம்பிக்கைகள் எல்லாத்தையுமே விலேக்கு வாங்குவேன்.

அரு: அப்பனே! நீ என்னை வாங்க முடியாது. என்னு உண்மையை உன்னுல் விலேக்கு வாங்க முடியாது!

ஆரோ: அருமைநாயகம்! மனசுக்குள்ளே நீங்க இன்னமும் பாதிரியார்னு நினேச்சுக்கிட்டுப் பேசறீங்க போலிருக்கு!

அரு: இல்லே; என்னை ஓர் உண்மைக் கிறிஸ்தவனு நினேச்சுக்கிட்டுப் பேசறேன்.... ஆனுல் ஓர் உண்மைக் கிறிஸ்தவனிடம் நான் பேசிக் கொண்டிருக்கவில்லே என்பது எனக்கு இப்போ புரியுது.

ஆரோ: கிறிஸ்துவனு இல்லாதது பற்றி நான் வெட்கப்படவில்லே.

அரு: அது எனக்குப் புரியுது, ஆரோக்கியசாமி! அதனுல்தான் உன்னைக் கண்டு நான் வெட்கப்படறேன்!


(தொடரும்)

''அப்பனே! நீ என்னை வாங்க முடியாது. என்னு உண்மையை உன்னுல் விலேக்கு வாங்க முடியாது!''



கார் ஓட்டுவது சங்கடமாயுள்ளதா?

ஃபயர்ஸ்டோன் உங்களுக்கு உதவக் காத்திருக்கிறது.




ஸ்டீரிங்கைப் பிடித்ததும், வீதியில் நடப்போரின் மனநிலை, போக்குவரத்துச் சட்டங்கள், இரவில் காரோட்டுவது, இன்னும் பல விஷயங்களைக் கற்றறிந்திருக்க விரும்புகிறீர்கள். அதோடு கார் நீங்கள் சொல்லுகிறபடி கேட்க, நல்ல டயர்களும் வேண்டுமென்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஃபயர்ஸ்டோன டயர்களைப் பொருத்தி, தைரியமாய்ச் செல்லுங்கள்.

ஃபயர்ஸ்டோன டயர்களுக்குள்ள மூன்று சிறந்த தன்மைகளை அறிந்து பாராட்டுவீர்கள்.

- சாலையை அணைத்துச் செல்லும் தன்மை—வேகத்திலும், திருப்பத்திலும், நிறுத்துவதிலும் ஆபத்தில்லாதது.
- உறுதியான ஸ்பிரிங் தன்மை—கரடுமுரடான பாதைகளில் சமாளிக்கக் கூடியது.
- தனிப்பட்ட ட்ரிப்பிள்-ஸ்ட்ரெந்த்துடன் அமைத்திருப்பதால் ஃபயர்ஸ்டோன டயர்கள் வலுவாய் இருக்கின்றன; இதனால் நீடித்த உழைப்பு.

"புது ட்ரைவர்கள் கவனிக்க, ஃபயர்ஸ்டோன் தரும் குறிப்புகள்". நீங்கள் கேட்டு எழுதினால், விளக்கப் படங்களுடன் கூடிய சிறு புத்தகத்தை இலவசமாய் அனுப்புகிறோம். முகவரி: ஃபயர்ஸ்டோன் டயர் & ரப்பர் கம்பெனி ஆப் இந்தியா ப்ரைவேட் லிமிடெட், கட்ஸ் ரோட், மதராஸ் 600 002. இப் பத்திரிகையின் பெயரையும் குறிப்பிட்டு எழுதவும்.



ஃபயர்ஸ்டோன் டயர்கள்

இந்திய சாலைகள், மற்றும் போக்குவரத்து நிலைகளுக்கேற்ப இந்தியாவில் தயாரிக்கப்படுகின்றன.

RADEUS/FS-II



'**நா**டோடி' சிறுவில் மழை வரவழைக்கக் கையாளப்பட்ட வழக்கத்தை மிகவும் விநோதமானதென்று குறிப்பிட்டுள்ளார். நம் ஊரில் நடக்கும் வழக்கத்தை விட்டு விட்டார். 'கொடும்பாவி' என்ற பெயரில் ஒரு பூதாகாரமான உடலை வைக்கோல், காகிதம், களிமண் முதலியவற்றால் செய்து ஒவ்வொரு தெருவாக இழுத்துச் சென்று கடைசியில் ஒரு முச்சந்தியில் அதைக் கொளுத்தும் வழக்கம் இன்றும் நடந்து வருகிறது.

மாயூரம்,
25–2–75 சகுந்தலா சின்னிகிருஷ்ணன்

திருமபுரி மாவட்டத்தில் மழை வேண்டிச் சில சிற்றூர்களில் பெண்களும், தாய்மார்களும் சேர்ந்துகொண்டு வீடு வீடாக மாலை நேரத்தில் சென்று பாடல்களைப் பாடுவார்கள்.

மானத்தை நம்பியிருந்தேன்
மக்களையும் பெத்தெடுத்தேன்

என்று ஆரம்பித்துப் பாடல் நீண்டுகொண்டே போகும். பாடலின் இறுதியில் வீட்டில் உள்ளவர்கள் ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டு வந்து பாட்டுப் பாடும் கும்பலின் மீது தெளிப்பார்கள்.

பெங்களூர்
25–2–75 ச. பாக்கியநாதன்

தமிழ் நாட்டில் உள்ள சௌராஷ்டிர பிராமணர்கள் பேசும் சௌராஷ்டிர மொழிக்குத் தனியாக ஒரு லிபி இருப்பதாகவும் அதைத் தள்ளி வைத்துவிட்டு, தேவநாகரி (ஹிந்தி) லிபியில் சொல்லித் தர வேண்டும் என்று அரசியல் பின்னணியில் சிலர் மதுரையில் தலையெடுத்திருப்பதாகவும் ''பார்வதி மணாளன்'' என்பவர் எழுதிய கடிதம் வட்ட மேஜைப் பகுதியில் பிரசுரமாகியிருப்பதைக் கண்டு, சௌராஷ்டிர சமூகத்தினர் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளனர்.

இப்பொழுது சௌராஷ்டிர சமூகத்தில் ஒருசிலர், ராமராய் என்பவர் பிற்காலத்தில் உருவாக்கிய லிபிதான் புராதன லிபி என்று மக்களிடையே தவறான பிரசாரம் செய்து எங்கள் மொழியின் அசல் லிபியான நாகரி லிபியை எதிர்த்து வருகின்றனர். சரித்திரச் சான்றுகளுக்கு முரணான இந்தப் பிரசாரத்துக்குத் தமிழ் நாட்டில் நிலவுகின்ற ''ஹிந்தி எதிர்ப்பு'' உணர்ச்சியை அவர்கள் மிகச் சாமர்த்தியமாகப் பயன்படுத்திக் கொண்டு எங்களது தமிழ்ச் சகோதரர்களின் மனத்தில் தவறான எண்ணத்தை உருவாக்க முயலுகின்றனர்.

சம்ஸ்கிருதம், ஹிந்தி, மராத்தி, ராஜஸ்தானி, நேப்பாளி முதலிய பல மொழியினர் தேவநாகரி லிபியைப் பயன்படுத்துகின்றனர். அந்த லிபியைப் பயன்படுத்தும் எல்லா மொழியினரையும் ''ஹிந்திவாலாக்கள்'' என்று கூறிவிட முடியாது. மொழி வேறு, லிபி வேறு. லிபியை மொழியுடன் குழப்பிக்கொள்ளக் கூடாது.

ஹிந்தியை ஆட்சி மொழியாகத் திணிக்கக் கூடாது என்று, சகோதரத் தமிழர்களுடன் இணைந்து குரல் எழுப்பும் சௌராஷ்டிரர்கள், தங்களுடைய சொந்த லிபியான தேவநாகரியைப் பயன்படுத்துவதை ஹிந்தித் திணிப்பு என்று கருதக் கூடாது.

மதுரை
18–2–75 கொப்ளான் லெஷ்வன்

உள்ளத்தைக் குளிர வைக்கும் அம்சங்கள் பலவற்றை இந்த இதழ் 'கல்கி'யில் கண்டு மகிழ்ந்தேன். அவைகளுள் குறிப்பாகச் சில:
1. காஷ்மீரக் கன்னியின் வண்ணப் படம்.
2. ''கூட்டணி வெற்றி'' (தலையங்கம்),
3. 'கல்கி' எழுத்தாளர்களின் கதைகள் சிறந்ததாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது (என்ன சேதி)
4. ''சுயராஜ்யா'' ஆசிரியராக ஆர். வி. அமைவது; 5. மழையை வேண்டிப் பாட உதவும் பாடல்; 6. போட்டிக் கதை ''உருவாக்கினார்''; மற்றும் ''மகரிஷி''யின் சிறுகதை.

பாண்டி–6
28–2–75 ஜி. கே. பத்மநாபன்

பொன்னியின் புதல்வருடைய வாழ்க்கை வரலாற்றினை மிகுந்த ஆர்வத்துடன் படித்து வருகிறேன். 'கல்கி'யின் சரித்திரத்துடன் வேறு பலரது வாழ்க்கை வரலாற்றுப் பகுதிகளும் விடுதலைப் போரின் முக்கிய கட்டங்களும் பின்னிப் பிணைந்து வந்து பிரமிப்பூட்டுகின்றன. ஒவ்வொரு அத்தியாயமும் ஒரு தனிக் கட்டுரையாகவே சுவை தருமாறு எழுதுகிற புதிய உத்தியை சுந்தா அற்புதமாகக் கையாள்கிறார்.

சென்னை-20 குமரன்
5-3-75

(இந்தத் தொடரினை ஆவலோடு படித்துச் சேகரித்து வருபவர்கள் 27ம் அத்தியாயத்தில், ஆனந்த விகடன் தொடங்கியது, 1926ல் மே மாதம் என்பதற்குப் பதிலாக, பிப்ரவரி மாதம் என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறோம். - ஆசிரியர்)

''**நா**ன்தான் தங்கம்'' என்ற கட்டுரையில் தங்கத்தின் விலை ஐம்பதாண்டுகளுக்கு முன் இருந்ததைவிட இன்று பன்னிரண்டு மடங்கு அதிகரித்திருப்பதாய் எழுதியுள்ளது. நீங்கள் குறிப்பிட்டுள்ள விலைகளின்படியே பார்த்தால் முப்பத்திரண்டு மடங்கு என்று இருக்க வேண்டும்.

பம்பாய்–50
21–2–75 டி. வி. கனகசபை

ஒரு தமிழ் மகனின் வீர மரணம் என்ற கட்டுரையைப் படித்தபோது கண்களில் நீர் மல்கியது.

மீசநல்லூர்
28–2–75 அ. சுப்பராயன்

(இப்படிப் பலர் இக்கட்டுரை குறித்து எழுதியிருக்கிறார்கள். - ஆசிரியர்.)

சென்னையில் தாஜ் கோரமண்டல் ஹோட்டல் அண்மையில் தமிழக முதல்வர் திரு மு. கருணாநிதி அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த ஐந்து நட்சத்திர ஹோட்டலில் 'மைசூர்' உணவு விடுதி அலங்காரச் சிறப்பும் இந்திய பாணி உணவின் ருசி மகிமையும் கொண்டது.





தொத்து நோய் உள்ளவர்களை உடனே அதற்கான ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்ப்பதற்காக ஒரு விசேஷ ஆம்புலன்ஸ் மேற்கு ஜெர்மனியில் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

இதில் பணியாற்றுபவர்கள் விசேஷ உடை அணிந்திருக்கிறார்கள். ஆம்புலன்ஸை ஒருமுறை உபயோகித்த பின் நீராவியை விசையுடன் செலுத்தி வண்டியைச் சுத்தம் செய்வார்கள்.



நமது காரியாலயத்தில் ஓவியராகப் பணியாற்றிக் கல்கி வாசக நேயர்களின் பேரபிமானத்தைப் பெற்றுள்ள திரு திருநாவுக்கரசு (கல்பனா) தற்போது ஜவுளி வியாபாரம் ஆரம்பித்திருக்கிறார். சுபலக்ஷ்மி என்று பெயர் கொண்ட கடையை மாம்பலம் ரங்கநாதன் தெருவில் நடத்தி வருகிறார்.

தொடக்க விழாவன்று கல்கி அதிபர் திரு சதாசிவம் விஜயம்செய்து வாழ்த்தினார். படத்தில், ஸ்ரீ சதாசிவத்துக்கும் ஸ்ரீமதி எம். எஸ்ஸுக்கும் பட்டுப் புடவை ரகங்களைக் கல்பனா காண்பிக்கிறார்.

காது கேளாத சிறுவர் சிறுமியருக்காக நடத்தும் மைலாப்பூர் 'லிட்டில் ஃபுட்ஸ்டெப்ஸ்' பள்ளியின் ஐந்தாவது ஆண்டு விழாவில் 'ஸ்வராஜ்யா' ஆசிரியர் ஸ்ரீ கே. சந்தானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்தார். அவருக்கு எதிரே அமர்ந்திருப்பவர் ஸ்தாபகர் ஸ்ரீமதி மேனகா பார்த்தசாரதி.



ஜைன மத சந்யாசினி சாத்வி பிரமோத் சுதாஜி அவர்களின் முன்னிலையில் நான்கு இளம் பெண்கள் 'பெரிய தீக்ஷா' பெற்று சந்நியாசினிகள் ஆயினர். இந்தப் புனித வைபவத்தை யொட்டி ஒரு கண் ஆஸ்பத்திரி உள்படப் பெருந் தொகை செலவில் பல தர்ம காரியங்கள் நடந்துள்ளன. படத்தில், குருஜி உபதேசிக்கும் பிரதிக்ஞைகளை நான்கு சந்நியாசினிகளும் திரும்பச் சொல்கின்றனர்.





சோவியத் கலாசாரக் கழகத்தின் இன்னூர் கண்காட்சியில் 'ரோபாட்', தமிழக ஆளுநர் கே. கே. ஷா அவர்களுடன் உரையாடுகிறது. இந்த 'ரோபாட்' குழந்தைகள் முதல் முதியவர்கள் வரையில் அனைவரையும் மகிழ்வித்தது.

◄ செய்மலர் • தலைவர் தரிசனம் - 8



கே. கிருஷ்ணமூர்த்தி

என். ஆர். நடராஜன்

மூன்று தலைமுறையாக வழக்கறிஞர் தொழில் நடத்தும் குடும்பத்தைச் சேர்ந்தவர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி. 1968ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், ஜனசங்கத் தலைவர், திரு தீனதயாள் உபாத்யாயா, வட இந்தியாவில் ரயில் பிரயாணத்தின்போது கொலை செய்யப்பட்டதும், வரும்படி நிறைந்த தம் வக்கீல் தொழிலைத் தியாகம் செய்து முழு நேரக் கட்சி உறுப்பினராகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார் திரு கிருஷ்ணமூர்த்தி. ஒரு கட்சித் தலைவரை ஒழித்துவிட்டால் கட்சியும் மறைந்துவிடும் என்று நினைப்பவர்களுக்குச் சவாலாக இவருடைய போக்கு அமைந்தது. இவரைப் போலவே பிற மாநிலங்களிலும் பலர் துணிச்சலோடு தங்கள் பதவிகளையும் அலுவல்களையும் துறந்து கட்சிப் பணிக்குத் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

மதுரையைச் சேர்ந்த திரு கிருஷ்ணமூர்த்திக்கு 1964ல் திருமணம் நடந்தது. பொதுவாகத் திருமணத்தின் போது நண்பர்கள் மணமகனுக்குப் பரிசுகள் வழங்குவதுதான் சம்பிரதாயம். ஆனால் மணக்கோலத்திலிருக்கும் கிருஷ்ணமூர்த்தியிடமிருந்து நண்பர் எஸ். பி. தாஸ் என்பவர் ஒரு பரிசை எதிர்பார்த்து வேண்டினார். அந்த நண்பர் எதிர்பார்த்த பரிசு, கிருஷ்ணமூர்த்தி ஜனசங்கத்தில் சேர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதுதான். ஏற்கனவே ராஷ்டிரீய சுயம் சேவக் சங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்திக்கு நண்பரின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்வதில் சிரமம் ஏதும் தோன்றவில்லை. அந்தப் பரிசைஅளித்து விட்டார்.

நல்ல பேச்சாளர். வட பாரதத்திலிருந்து வரும் தலைவர்கள் பொதுக் கூட்டங்களில் உரையாற்றும் வேளைகளில் கிருஷ்ணமூர்த்தி மொழிபெயர்ப்பார். கொஞ்சம்கூடத்தயக்கமோ, தடங்கலோ இல்லாமல், அவர்கள் பேசும் உணர்ச்சி வேகம் கொஞ்சம்கூடப் பாதிக்கப்படாமல் அந்த மொழிபெயர்ப்பு அமையும். 1964ல் இத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில்தான் நான் அவரைச் சந்திக்க நேர்ந்தது. அறிமுகமும் கிடைத்தது.

அந்நாளில் மதுரையிலிருந்து சென்னைக்கு அவ்வப்போது கட்சிக் கூட்டங்களுக்கு வந்து போய்க் கொண்டிருப்பார். இப்போது சென்னையிலேயே நிரந்தரமாகக் குடியேறி விட்டார்.

இவரது சிறைவாச அனுபவம் சுவாரஸ்யமானது. 1947ம் ஆண்டில் ராஷ்டிரீய சுயம் சேவக் இயக்கம் அரசால் தடை செய்யப்பட்டபோது அந்த இயக்கத்தில் ஈடுபாடு கொண்டிருந்த கிருஷ்ணமூர்த்தியும் அவர் நண்பர்களும் சத்தியாக்கிரகம் செய்ய முனைந்தார்கள். அரசாங்கம் சத்தியாக்கிரகிகளைக் கைது செய்ய உத்தரவிட்டது. கைதாகி உள்ளே போய் விட்டால், இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த முடியாது என்ற காரணத்தால் கிருஷ்ணமூர்த்தி தலைமறைவானார்.

ஐந்து நாட்கள்தான் அவரால் தலைமறைவாக இருக்க முடிந்தது. காரணம், கைதாகி ஜெயிலுக்குப் போயிருப்பவர்களுக்கு உள்ள உரிமைகளை அவர்கள் பெற வழி சொல்லிக் கொடுக்கக் கூடிய தலைவர் இல்லை. ஆகவே தலைமறைவாக இருந்த இவர் வெளிப்பட்டுக் கைதானார். நான்கு மாதங்கள் கடுங்காவல் தண்டனை கிடைத்தது.

கடும் காவல் என்ற முறையில் கைதிகள் ஏதாவது வேலை செய்ய வேண்டும் என்று ஜெயில் அதிகாரிகள் வற்புறுத்தினார்கள். ஆனால் இந்த இயக்கத்தில் கைதானவர்களுக்குத் தலைவரான கிருஷ்ணமூர்த்தியோ, அரசியல் கைதி என்ற முறையில் தாங்கள் அதற்கு ஒப்புக்கொள்ள முடியாது என்று மறுத்தார்.

மதுரை ஜெயிலில் அப்போது அதிகாரியாகஇருந்த ஒரு முஸ்லிம் கனவான், கிருஷ்ணமூர்த்தியின் தகப்பனருக்கு நெருங்கிய நண்பர். அவர் மகனும், கிருஷ்ணமூர்த்தியும் ஒன்றாய்ப் படித்தவர்கள். அந்த அதிகாரி, கிருஷ்ணமூர்த்தியைச் சிறை விதிகளுக்கு அனுசரித்துப் போகுமாறு கெஞ்சினார். கிருஷ்ணமூர்த்தி இணங்காமல் போகவே, அவர் தம் கடமையைச் செய்யும் வகையில் இவரையும் இவருடைய குறிப்பிட்ட சில தோழர்களையும் 'கன்டெம்ட் செல்' என்று சொல்லப்படும் தனியான சிறை அறைக்குள் தள்ளினார். தூக்கு மேடைக்குப் போகும் கைதிகள் கடைசியாகத் தங்கியிருக்கும் அறைகள் அவை.



இதைக் கண்டித்துக் கிருஷ்ணமூர்த்தியும் அவர் தோழர்களும் உண்ணாவிரதத்தைத் தொடங்கினார்கள். உண்ணாவிரதம் இருக்கும்போது [illegible] குடிக்கலாம் என்று கிருஷ்ணமூர்த்திக்குத் தெரியாது. ஆகவே அவர்கள் [illegible] குடிக்காமல் உண்ணாவிரதம் இருந்

முட்டுக்கட்டையா முக்கியம்?

அமெரிக்காவில் இடாஹோ மாநிலத்தில் ஒரு மரக் கம்பெனி மூடப்பட்டது. காரணம் விற்பனை இல்லை. 325 தொழிலாளிகள் வேலை இழந்தனர். அந்தத் தொழிலாளர்கள் ஒன்று கூடிப் பேசி முடிவு செய்தார்கள். அவர்கள் செய்த தீர்மானம் - வியாபாரம் விருத்தியாகும் வரை 10 சதவிகிதம் குறைவாகச் சம்பளம் வாங்கிக்கொள்வது. சம்பளம் வாங்காமல் ஓவர் டைம் செய்வது. முடிவு? எல்லோரும் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர். உற்பத்தி பெருகியது. பொருட்களைக் குறைந்த விலைக்கு விற்க முடிந்ததால் வியாபாரம் அதிகமாகியது.

டைம் - பாரி



தார்கள். இந்த விஷயம் கலெக்டர் வரை ரிப்போர்ட் செய்யப்பட வேண்டிய விஷயமாதலால் கடைசியில் கலெக்டர் தலையிட்டு இவர்களின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து அந்த விசேஷ அறைகளிலிருந்து பொது அறைக்கு மாற்றினார்.

சமீபத்தில் விலைவாசி உயர்வைக் கண்டிக்கும் போராட்டத்தில் சேலத்தில் போய்க் கலந்துகொண்டு கைதானார். ஏழு நாட்கள் ரிமாண்டில் வைத்துவிட்டுப் பிறகு விடுதலை செய்துவிட்டார்கள்.

வெளியூர்களுக்குப் போனால் கட்சி ஊழியர்கள் வீட்டில்தான் தங்குவார். அதிலும், சாதாரண எளிய ஊழியர் வீடாகத் தேர்ந்தெடுத்துத்தான் தங்குவார். சீராப்பள்ளி என்ற கிராமத்தில் ஒரு தொண்டர் வீட்டுக்குப் போனார். அந்தத் தொண்டர் ஒரு நெசவாளி. வறுமை மிக்க குடும்பம். இவர் போனபோது அந்த நெசவாளி வீட்டில் இல்லை. வெளியூர் போயிருந்தார். மனைவி கடுமையான ஜுரத்தில் படுத்திருந்தாள். ஏழு வயதான சிறுவன் இருந்த சில்லறைகளைப் பொறுக்கிக் கொண்டு போய்த் தாயாருக்கு டீ வாங்கிக் கொண்டு வந்திருந்தான். அந்த நேரத்தில் இவர் அங்கே போயிருக்கிறார். அந்த அம்மாள் பாதி டீயை ஒரு குவளையில் ஊற்றி இவரிடம் நீட்டி உபசாரம் செய்தாள். இவரோ அவள் பட்டினி இருக்கக்கூடாதே என்ற நோக்கத்தில் மறுத்துப் பார்த்தார். "நீங்க சாப்பிடலேன்னா எனக்கும் வேண்டாம்" என்று படுத்து விட்டாள். வேறு வழியில்லாமல், பாதி டீயைச் சாப்பிட்டு அந்தப் பெண்மணியின் மனம் நோகாமல் பார்த்துக் கொண்டு அப்புறம் விடைபெற்றுக் கிளம்பினார். எல்லோர் மனத்திலும் இடம் பிடித்துக் கொள்ளும் கனிந்த தன்மை இவரிடம் உண்டு.

காலம் சென்ற கோல்வால்கரிடம் இவருக்கு நிறைய ஈடுபாடு உண்டு. அவருடைய மரணம் இவருடைய மனத்தை வெகுகாலம் பாதித்தது. நெருங்கிய உறவினர் காலமானதைப் போன்ற உணர்ச்சி.

1970ம் ஆண்டில் சென்னை நகரத் தொண்டர்கள் அபட்ஸ்பரியில் ஒரு மகாநாட்டுக்கு ஏற்பாடு செய்தோம். நாங்கள் எதிர்பார்த்ததை விட வெகு சிறப்பாக அமைந்துவிட்டது. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அதில் திரு கிருஷ்ணமூர்த்தி தம் முழு வேகத்தையும் காண்பித்து உழைத்து வெற்றி கண்டார். அந்த மகாநாடு அவருக்கு மிகுந்த உற்சாகத்தை அளித்தது.

காரியங்களை முன்யோசனையுடன் திட்டமிட்டுத் திறம்பட நடத்த வேண்டும் என்று வற்புறுத்துவார்; ஆசைப்படுவார். எங்கேயாவது சிறு பிசகு ஏற்பட்டாலும் இவருக்குக் கோபம் வந்துவிடும்.

எங்கள் கட்சி தனியாக நிற்கும் கட்சி. எந்தக் கட்சியுடனும் கூட்டோ இணைப்போ இல்லை. எங்கள் பொதுக்கூட்டங்களுக்கு நாங்களே அவ்வப்போது பணம் வசூலித்து நடத்திக் கொள்வோம். சொற்பொழிவு முடிந்தவுடன், காரியதரிசி, தலைவர் என்ற பாகுபாடு இல்லாமல் ஜமுக்காளங்களை மடித்து வைத்துவிட்டுக் கிளம்புவோம்.

எந்த மேடையிலும் பேச எடுத்துக் கொண்ட விஷயத்தைத் தெளிவாக, ஆதார பூர்வமாக, எளிமையாகப் பேசும் திறமை கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் உண்டு. அரைகுறையாக ஒரு விஷயத்தை விட்டோம் என்ற பேச்சுக்கே இடம் கொடுக்க மாட்டார். பேச்சில் கண்ணியமும், பண்பும் அலைமோதும்.

எங்கள் இயக்கத்துக்கு 'வடக்கத்தி இயக்கம்', 'ஹிந்திக்காரன் கட்சி', 'பசுமாட்டுக் கட்சி', 'ஜாதிக் கட்சி' என்றெல்லாம் வேண்டுமென்றே வக்கிரமாகப் பெயர்களைச் சூட்டி மாசு கற்பிக்க முயற்சி செய்பவர்கள் பலர் உண்டு. நாங்கள் எந்த ஒரு குறுகிய பிரிவினருக்கோ, வகுப்பினருக்கோ தொண்டு செய்ய உறுதி பூணவில்லை. முழு ராஷ்டிரத்துக்கும் தொண்டாற்றவே விரதமேற்றோம். "நாட்டு மக்கள் அனைவருமே நமது சகோதரர்கள் என்ற உணர்வினால் ஏற்படும் உண்மையான கௌரவம் நம் நாட்டில் உள்ள எல்லா மக்களுக்கும் கிடைக்க வேண்டும்" என்பதுதான் எங்கள் கொள்கை.

கேட்டு எழுதியவர்: **கோமதி சுவாமிநாதன்**

ரேஸர் வெட்டும் ரோமக் கட்டையும் ஏற்படும்போது வெட்கப்படுங்கள்...
அல்லது




ஆன் பிரெஞ்ச் ஹேர் ரிமூவர் தரும் பட்டு மேனியால் பெருமைப்படுங்கள்

ஷேவிங் வேண்டாம். அது ஆண்களுக்கு மட்டுமே! தவிர, உங்கள் சருமத்தை வெட்டி வதைக்கும்...,ரோமம் கட்டையாக வளரும். இதோ ஒரு விடிவு-பெண்மைக்கே உரிய நளினமான வழியில் வேண்டாத ரோமத்தை விரட்டியடிக்கலாம். மென்மையான ஆன் பிரஞ்ச் ஹேர் ரிமூவர்-இந்த க்ரீமை வேண்டாத ரோமத்தின் மீது தடவுங்கள். சிறிது நேரம் கழித்துத் துடைத்து எடுங்கள். ஆஹா! உங்கள் மென்பட்டு மேனி கண்டால் கண்பட்டு விடாதோ! இந்த க்ரீம் சருமத்தின் உட்சென்று வேலை செய்து வேண்டாத ரோமத்தை வழியனுப்புகிறது...வாரக்கணக்கில் பட்டுப் போல் மென்மை—தொட்டுப் பார்த்தால் மழமழப்பு...பெண்மையின் நளினத்தைப் பேசுகிறது உங்கள் மேனி-இல்லையா? எனவே இக்கணமே ரேஸருக்கு வழியனுப்பு: ஆன் பிரஞ்ச் ஹேர் ரிமூவருக்கு வரவேற்பு!



ஆன் பிரெஞ்ச்
ஹேர் ரிமூவர்

அருவருப்பூட்டும் ரோமத்தை அகற்றும் அருமையான க்ரீம்



2 சைஸ்களில் கிடைக்கிறது : 40 கிம் மற்றும் 75 கிம்.

Licensed User of TM : Geoffery Manners &Co. Ltd.

126 HR-182 Tam

''எங்கேடா வந்தே மூர்த்தி? வீட்டில் குழந்தை குட்டி எல்லாரும் சௌக்கியம் தானே?'' என்று நரசிம்மன் கேட்டார். ரிடையராகி விட்டவர். மெள்ள பூஜை புனஸ்காரங்களை முடித்துக் கொண்டு தினசரியை எடுத்துக் கொண்டார்.

''உங்க ஆசீர்வாதத்திலே எல்லோரும் சௌக்கியம்தான். உங்களைப் பார்க்க வரணும்னு இன்று லீவு போட்டேன். உங்க மாட்டுப்பெண் லீலாவும் நானும் தினமும் உங்களைப் பார்க்க வரணும்னுதான் துடிக்கிறோம். எங்கே முடியறது? அவள் ஏதோ பொதுபோக்குக்குன்னு சோஷல் சர்வீஸ்லே நுழைஞ்சாள். இப்ப அது விட மாட்டேங்கறது. வீட்டுலே தங்க முடியவில்லே. குழந்தைகளைப் பார்த்துக்க அவள் அத்தையை வீட்டோடு வெச்சிண்டிருக்கோம். எனக்கும் ஆபீஸிலே கொள்ளை வேலே. வர முடியலே.''

''புரியறதுடா ... குடும்பம்னு அப்பாவை மட்டும் நினைச்சுண்டிருக்கா முடியறதா? நாலுந்தான் வேண்டியிருக்கு. போன மாதம் குடும்பத்தோடு காஷ்மீர் பக்கமெல்லாம் போனே போலிருக்கு. நன்னா சுத்திப் பார்த்தேளா?''

மூர்த்திக்கு மனத்தோடு இந்தக் கேள்வி உறுத்தியது. ''ஓ, அதுவா? ஆமாம்பா ஆபீஸில் டி. ஏ. தருகிறார்கள். வீணாக்குவானேன்? கிளம்பினோம். நீங்க இல்லாம போனோமேன்னு லீலாகூடக் குறைபட்டாள். நீங்க ரிடையராகலே!''

''அவன் வந்தாச்சா? வருவான்னு தெரியும் ... இத்தனை நாளா உங்களைக் கூப்பிடாதவனுக்கு இப்ப என்ன கரிசனமாம்? குடும்பத்திக்கு மூத்த பிள்ளை. நியாயமா இத்தனை காலமா உங்களை அவன் தன்னிடம் வெச்சுண்டிருக்கணும். இப்ப கூப்பிடறான். ஏதுடா இது. மூர்த்திக்கு மூத்த பிள்ளை முரளி இருக்கானே; அந்த முரளி அமெரிக்காபோய்ப் படிக்கத் துடிக்கிறானே, படிச்சா முன்னுக்கு வரலாமேன்னு அவனுக்குத் தோணித்தா?''

''முரளியைஃபாரின் அனுப்பப்போறியா?''

''அந்தக் கவலேதான் எனக்கும் லீலாவுக்கும் பெரிசாப் போச்சு. அவன் மேலே படிக்கத் துடிக்கிறான். பணத்துக்கு வழி தெரியலே.''

''ஸ்காலர்ஷிப்புக்கு முயற்சி செய்யலியா?''





ஆண்டவன் தரும் குழந்தைகள்

எஸ். ரங்கநாயகி



''அதனாலே என்னடா. உங்க டி. ஏ.யில் நான் தொத்திக்க முடியுமா? எனக்காகத் தனியா செலவு செய்யணும். நானே கொஞ்ச நாளைக்குக் கங்கைக் கரையிலே இருக்கணும்னு ஆசைப்படறேன். ஆண்டவன்...''

''நன்னாயிருக்கு. இந்த வயசிலே கங்கைக் கரையாவது, தனியா இருக்கிறதாவது... இந்த வீட்டைக் காலி செய்துவிட்டு முதல்லே எங்கிட்டே வந்துடுங்கோ. சொல்லிட்டுப் போகத்தான் வந்தேன்.''

''எதுக்கடா அதெல்லாம்? இத்தனைநாளா இங்கேயே தள்ளியாச்சு. இனிமே எதுக்கு ஒருத்தனுக்குப் பாரமா...?'' நரசிம்மன் வழுக்கைத் தலையைத் தடவிக் கொள்கிறார். ''அவசரப்பட்டு ஒண்ணும் செய்ய முடியாதுப்பா. நேத்துதான் உன் அண்ணா ராமன் வந்து கூப்பிட்டு விட்டுப் போனான். அவன் கிட்டேயே நான் இருக்கணுமாம்.''

''போக வரப் பணம் வேண்டுமே? ஸ்காலர்ஷிப் கிடைக்காவிட்டாலும் போகத் துடிக்கிறான். 'தாத்தாவுக்கு என்மேல் கொள்ளை ஆசை. நிச்சயம் உதவுவார்' அப்படின்னு ஒரே போடாகப் போடறான்.''

பேசிக் கொண்டிருந்த போதே நரசிம்மன் பெயருக்கு ஒரு தபால் கவர் வருகிறது. நரசிம்மன் கடிதத்தைப் படித்து விட்டுத் தம் கையிலேயே வைத்துக் கொள்கிறார்.

''சாரங்கன் எழுதியிருக்கான்.''

''சாரங்கனா? என்ன எழுதியிருக்கிறான்?''

''ரிடையராகியாச்சு. இனிமே தனியா இருக்காம எங்கிட்டே வந்துடுன்னு கூப்பிடறான்.'' நரசிம்மன் சிரித்துக் கொண்டே கூறினார்.

''இந்தச் சாரங்கனை எனக்குத் தெரியாதா? குழந்தை குட்டி இல்லே. ஏதுடா அப்பா தனியாக இருக்கிறாரேன்னு, அம்மா போனதுமே வேலையை ராஜிநாமா செய்துட்டு வரும்படி

அப்பாவைக் கூப்பிட்டு வெச்சுக்கத் தோணலே. ஒரு மச்சினிக்குக் கல்யாணம் பண்ணி வெச்சான். குழந்தை இல்லாக் குடும்பம்னு அவன் தலையைத் தடவினார் மாமனார். இப்ப கையிலே பணம் இருக்காது. ஏதோ மெட்ராஸிலே வீடு வாங்கக் கூட ஏற்பாடு செய்யறான் போல் இருக்கு.''

''ஆமாம், அதை மறைக்கலே. அடையாறு பகுதியிலே ஒரு மாடி — நாற்பத்தைந்தாயிரமாம். 'எனக்குக் குழந்தை இல்லே. கடைசிக் காலத்திலே யார் கிட்டே இருக்கிறது? அதுக்காக வீடு வாங்கலாம்னு பாக்கறேன். உங்களுக்கு விழுப்புரம் பிடிக்கலேன்னு மதராஸிலே வாங்கப்போற வீட்டுலே நீங்கஇருங்கோ'ன்னு எழுதி யிருக்கான்.''

''எழுத மாட்டானா பின்னே! ரிடையராயாச்சு. உங்க கையிலே பணம் மொத்தமா வந்திருக்கும்னு அவனுக்குத் தெரியாதா?? இத்தனை நாட்களா உங்களைக் கூப்பிடத் தெரிந்ததா? வீடு வாங்கத் தோணித்தா? இவன் குணம் உங்களுக்குப் புரியலே. பெத்த பாசம்... அப்போ நான் வரட்டுமா?''

மகன் புறப்பட்டுப் போய் விட்டான். சமையல்காரன் பட்டாபி எதிரே வந்து நின்றான்.

''என்ன பட்டாபி, என்ன வேண்டும்?''

''என்னத்தை சொல்றது. மனசு தவிக்கிறது.''

''தைரியமாய்ச் சொல்லு.''

''வயசு நாற்பது ஆச்சு. கல்யாணம் பண்ணிக்கலே. இந்தாத்து மாமி போன பிற்பாடு தான் உங்ககிட்டே வந்தேன். மாமியோட போட்டோவுக்கும் எனக்கும் ரொம்பப் பரிச்சயம். என் கணவனை விட்டுடாதேடான்னு தினமும் எங்கிட்டே சொல்றாப்லே ஒரு தோற்றம். நீங்களும் சொந்த மகனா பாவிக்கறேள். இப்போ ரிடையராயிட்டேள். உங்களைப் பிள்ளைகள் கூப்பிடறா. என் கதி என்ன ஆகப் போறதோன்னு நினைச்சாலே பகீர்ங்கறது. உங்க பிள்ளைகள் அவா வீட்டுலே என்னை விடுவாளா?''

''இந்தா பட்டாபி, கடவுள்கிட்டே எல்லாப் பாரத்தையும் ஒப்படைக்கறாப்பலே, எங்கிட்டே எல்லாத்தையும் ஒப்படைச்சுட்டு வழக்கம்போல் ருசியா சமைச்சு, குடும்பத்தைப் பார்த்துக்கோ.''

அன்று தாயார் விசாலத்தின் திதி. வழக்கம் போல் ராமன் வீட்டிலேதான் ஏற்பாடு. சகோதரர்கள் மூவரும் வந்து விட்டனர். நரசிம்மன் சாப்பாட்டு நேரத்துக்கு மட்டும் தான் வருவார். உடனே புறப்பட்டுப் போய் விடுவார்.

நரசிம்மன் வரவில்லே. ஆனால் பட்டாபி வந்தான்.

''அப்பா எங்கேடா பட்டாபி. சாப்பிடக் காத்திண்டிருக்கோமே.''

''அப்பா இன்னைக்கு வர முடியாதாம். ஏதோ ரிஜிஸ்டிரார் ஆபீஸில் வேலையாம். வக்கீலையும் அழைச்சுண்டு போயிருக்கார்.''





''வக்கிலா? ரிஜிஸ்திரார் ஆபீஸா? எதுக்குடா, என்ன சமாசாரம்? உயில்கியில்னு...''

''அப்படித்தான் இருக்கும் போலிருக்கு.''

'உயிலா', 'உயிலா' அனைவரும் ஒரே கூச்சலிட்டுக் கேட்ட சப்தம்.

''உயில் எழுதிட்டாரா? ரிஜிஸ்தர் ஆயிடுத்தா?''

''இந்த நேரத்துக்கு ஆகியிருக்கும். நிரந்தர உயில்னு சொல்லிண்டார்.''

''அப்படியா? எப்படி எழுதி வைச்சிருக்கார். தெரியுமா? என் குடும்பம் பெரிசு''— மூர்த்தியின் பதற்றக் குரல்.

''குடும்பம் பெரிசானால்தான் அப்பா பணம் தரணுமா? குழந்தை குட்டி கிடையாதென்றால் பணமும் கிடையாதாக்கும். சொல்லப் போனால் பிற்காலத்தில் உட்கார வைத்துச் செய்யச் சந்ததி இல்லாததினால் எனக்குத் தான் பணம் அவசியம் வேணும்'' — சாரங்கனின் வாதம்.

''ஆண்டவன் தனக்குக் கொடுத்தவைகளுக்கு நன்றி செலுத்தறப்பலே எல்லோரையும் வஞ்சிக்காம எழுதி வைக்கறதா பேசிண்டார். நான் போயிட்டு வரேன். அப்பாவுக்குக் காத்திருக்காம நீங்க சாப்பிடுங்கோ.'' பட்டாபி கிளம்பிப் போய் விட்டான்.

''இந்தப் பட்டாபி சொல்றது சரியாக இருக்குமா? ஏதாவது உளறுகிறானா?''

''நன்னாயிருக்கு. அப்பாவுக்குப் பட்டாபி அந்தரங்கமாச்சே. அவனுக்குத் தப்பிதமில்லாம எல்லாம் தெரிஞ்சிருக்கும்.''

''திவசத்துக்குப் பிறகு நீங்க மாமனாரைப் பார்க்காமலே வந்துட்டேளா?'' மனைவி சந்திரா சாரங்கனைக் கேட்டாள். விழுப்புரத்திலிருந்து மாமியார் திவசத்துக்கென்று அவள் போவதில்லை.

''எதுக்குப் பார்க்கணும்? அப்பாதான் எல்லாத்துக்கும் உயில் எழுதியாச்சே ... வீடு வாங்கப் பணம் தருவார், நம்ம கிட்டே வெச்சுக்கலாம்னு யோசனை பண்ணினோம். அந்தப் பணத்தைக் கேக்கறதுக்கு வழி இல்லாம எழுதி வைச்சாச்சு. அதுவும் சம பங்குன்னு பட்டாபி சொல்றான். எப்படியும் அப்பாவுக்கு அப்புறம் அந்தப் பணம் கிடைக்கப் போறது. இப்பவே அப்பாவை 'அழைச்சு வெச்சிண்டு எதுக்குக் கஷ்டப்படணும்?''

''ஆமாம், இந்த விலைவாசியிலே ஒரு நாள் சாப்பாடுன்னாலும் மாசம் இருநூறுக்குக் குறையாது. உங்கப்பா சல்லிக் காசு குடும்பத்துக்குப் போட மாட்டார். கிழடையராயாச்சு. வீட்டிலே உக்காந்துண்டு தொணதொணப்பார். மூத்த பிள்ளைதான் வரிஞ்சு கட்டிண்டு அப்பாவை வெச்சுக்கப் போறதா சொன்னாரே. வைச்சுக்கட்டும்.''

''ஹலோ, யார், சந்திராவா? சௌக்கியமா இருக்கியா?''

''ஏதோ இருக்கேன். ரொம்பத் தலைவலி. மூச்சு முட்டறது. உடம்பெல்லாம் குத்தறது. உயிர் மட்டும் ஊசலாடறது. குடும்பத்தைக் கூட கவனிக்க முடியலை. படுக்கைதான்.''

''ஐயையோ அப்படியா? விலாவுக்குத்தான் உடம்புன்னு சொன்னா. உனக்குமா? நல்ல டாக்டரைப் பார். இங்கே இன்னைக்கு வீட்டைக் காலி பண்றேன்.''

''காலி பண்ணறேளா? மூத்த பிள்ளை வீட்டோடு போறேளா? அதுவும் சரிதான். உங்களை வைச்சுக்கறது அவா கடமை.''

''இல்லேம்மா அங்கே போகலே. ராமன் மாமியாருக்கு மயக்கம். நான் போனால் கஷ்டம்.''

''அப்படியா? இந்த உடம்புலே எனக்கு வாய் திறக்க வழியே இல்லே. என்னைப் பார்த்தால் நீங்க தவிச்சிடுவேளேன்னு கூப்பிடக் கூட முடியாம இருக்கேன்.''

''வேதனைப்படாதே. உன் மாமியார் திதியிலே உங்க எல்லோரையும் சேர்ந்து பார்க்கணும்னு நெனைச்சேன். நடக்கலே. பட்டாபி சொல்லியிருப்பானே.''

''சொன்னான்...உயில், சம பங்குன்னு ஏதோ சொன்னானே.''

''ஆமாம்மா. ஆண்டவன் மனிதனுக்கு அளிக்கும் குழந்தைகள் ஆரோக்கியமா இருந்துடணும். வஞ்சிக்க மாட்டான் சகவரன்னு எனக்கு நம்பிக்கை. அதனாலே எழுதி வைச்சாச்சு. கங்கைக் கரையிலே போய் நிம்மதியா இருக்கணும்னு திட்டம். பட்டாபியும் நிழல் போல் வரான். அழைச்சுண்டு போறேன். உடம்பைப் பார்த்துக்கோ.''

''சரிப்பா. வயசுக் காலத்திலே இது நல்ல நிம்மதியான ஏற்பாடுதான். பட்டாபியும் உங்களோடு வரது மனசுக்கு ஆறுதலா இருக்கு. அடிக்கடி கடிதம் போடுங்கோ.''

''என்னடா பட்டாபி. எப்படிடா ஆச்சு?'' ராமன், மூர்த்தி, சாரங்கன், எல்லோருமாகக் கேட்கிறார்கள்.

பட்டாபிக்குப் பேசக்கூட முடியலை. அழுகை பீரிட்டு வருகிறது. குரல் அடைக்கிறது. நரசிம்மன் கங்கைக் கரையிலேயே காலமாகி விட்டார். அவர் விருப்பப்படியே பட்டாபி கொள்ளி போட்டு விட்டு, சாம்பலைக் கங்கையில் கரைத்துவிட்டுப் பிள்ளைகளுக்குத் தகவல் கொடுத்தான்.

''கங்கையில் ஸ்நானம் செய்து விட்டு வீட்டுக்கு வந்து பூஜையை முடித்தார். சுவாமிக்குப் பழம் நிவேதனம் செய்தார். அந்தப் பழத்தில் ஒரு விள்ளலை வாயில் போட்டவர்தான். மார்புவலி என்றார். கண்ணைச் சொருகித்து. போய்விட்டார். நினைத்தாலே கதறி அழலாம் போலிருக்கு...''

''அதெல்லாம் கிடக்கட்டும்டா. ஏதோ உயில்னு எழுதியிருந்தியே. எடுத்துக்காட்டு.''

பட்டாபி பெட்டியிலிருந்து உயிலை எடுக்கிறான். ராமன் அதைப் பெற்றுக்கொள்கிறான். எல்லோரும் ஆவலுடன் கேட்க, படிக்கிறான்.

''மனிதனுக்குப் பெண்களாகவும் பிள்ளைகளாகவும் இருந்து கடைசிவரை அவனைப் பேணிக் காப்பது கை, கால், கண், காது, மூக்கு ஆகிய அவயவங்களே. இவை அவனை உண்மையாகப் பாதுகாக்கும் குழந்தைகள். இவற்றைப் பழுதுபடாமல் கடைசி மூச்சு வரை ஆண்டவன் அவனுக்கு அருளிவிட்டால், அந்த ஆண்டவனுக்கு நன்றிக் கடன் பட்டு விடுகிறான். ஆண்டவனின் அன்பை எதிர்நோக்கும், ஊனமுற்றோர்களுக்கு உதவி செய்வதே இந்த நன்றிக் கடனைத் தீர்க்கும் வழி. கடவுள் இந்த என் அவயவங்களைக் கடைசி மூச்சு வரை காப்பாற்றி அவை என்னைக் கட்டிக் காக்க வழி செய்வார் என்ற நம்பிக்கை. அதனால் ரொக்கப் பணத்தில் பாதிப் பாகம் ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு எழுதி வைக்கிறேன். மிகுந்தவைதாம் குழந்தைகளுக்கு எழுதி வைக்கிறேன். தங்கள் குழந்தைகளை நம்பிக் கொண்டு அவர்கள் நிற்காமல் கடைசிக் காலத்தில் இப்பணம் உதவும்படி தேசிய சேமிப்புப் பத்திரங்கள் வாங்கித் தங்களையும் நாட்டையும் காப்பாற்றிக் கொள்ள வேண்டியது. என் நிழல் போல் என்னுடன் இருந்த பட்டாபிக்குச் சம்பளப் பணச் சேமிப்புடன், அதற்குச் சமமாக ஒரு பங்கு போட்டு வந்த பணத்தையும், என் கையிலுள்ள மிகுதிப் பணத்தையும் எடுத்துக் கொள்ளும்படி எழுதி வைக்கிறேன்...''

'இந்த அப்பாவுக்குப் புத்தி சிதறிப்போயிருக்கும்' — நரசிம்மனின் மகவைப் பெற்றுத் தந்த மனிதகுலக் குழந்தைகளின் ஏகமனத் தீர்ப்பு!

சர்மாஜி மொட்டை மாடியில் நின்று கொண்டு தெற்கே தெரிகிற பனங்காட்டைப் பார்த்தார். அங்கிருந்து பார்த்தபொழுது ஒரே கூட்டமாய்க் கரிய நிறத்தில் பனைமரங்களின் தலைகள் மட்டுமே தெளிவில்லாமல் தெரிந்தன. இருந்தாலும் பனங்காட்டுக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்று அவருக்குத் தெரியும்.

சின்னக் குழந்தையாய்த் தத்தித் தத்தி நடந்து வந்து அவர் மடி மீது ஏறி நின்று, குறும்புத்தனமாய்ச் சிரித்தபடி அவரது மூக்குக் கண்ணாடியைப் பறித்து, அவரைப் படிக்க வொட்டாமல் பொல்லாத்தனம் பண்ணிய பூமா —

ஏழு வயதுச் சிறுமியாய்க் காலையில் தானே குளித்துவிட்டு நெற்றிக்கும் இட்டு, வெறும் பாவாடை. மட்டும் உடுத்திக் கொண்டு சமர்த்தாக அவர் முன்னால் உட்கார்ந்து சுலோகங்களை மனனம் செய்த பூமா —

விவரம் தெரியாத நாள் முதலாகவே தாயில்லாப் பெண்ணைத் தகப்பனே சகலமுமாய் வளர்த்து பெரியவளாகி, க்ஷண நேர சபலத்தில் அந்தத் தகப்பனையே தைரியமாய்த் துறந்து திக்குத் தெரியாத கானகத்தில் ஆபத்தான துணையுடன் முட்டாள்தனமாய் நுழைந்துவிட்ட பூமா —

அதோ, அந்தப் பனங்காட்டுக்குப் பின்னால் வைத்த நெருப்பில் எரிந்து கொண்டிருக்கிறாள்.

இருபத்திரண்டு வயதில் கன்னி கழியாமலேயே பூமா வீட்டைவிட்டு ஓடிப் போனாள். அவள் ஓடிப் போனதையே சர்மாஜி வெகு நேரம் அறியவில்லை. அப்படியோர் அவசியம் அவளுக்கு நேரும் என்றே அவருக்குத் தோன்றவில்லை. அவர்பாட்டுக்குக் காலம்





காலமாய்ப் படித்து உருவேறிய கீதையையும் உபநிஷத்துக்களையும் திரும்பத் திரும்பப் படித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

பட்டப் பகலில் ஒரு பெண் பரம சாதுவாய் வீட்டுக் காரியங்களை முடித்து, தகப்பனுக்கு வேண்டியதையெல்லாம் செய்து வைத்துவிட்டு அதன் பிறகு தைரியமாய் ஓடிப் போகும் என்று யாரும் எதிர்பார்க்கவும் முடியாதுதான்.

இருட்டத் தொடங்கின பிறகுதான் வீட்டில் மகள் இல்லாத குறையைச் சர்மாஜி உணர்ந்தார். வெளியே போன பெண் இவ்வளவு நேரமாகியும் வீடு திரும்பாததால் அவளுக்கு என்னவோ, ஏதோ என்றுதான் அவர் பேதைத்தனமாய்ப் பதறிப் போனார்.

போகிற பொழுது ஒரு கடிதாசுகூட அவள் அவருக்கு எழுதி வைத்து விட்டுப் போகவில்லை.

அண்டை அயல் வீடுகளுக்கெல்லாம் சென்று 'பூமா இங்கே வந்தாளா?' என்று கவலையுடன் விசாரித்து விட்டு வந்தார். கையில் அரிக்கேன் விளக்கைத் தூக்கிக் கொண்டு துணைக்கு இரண்டு பேரையும் அழைத்துக் கொண்டு கலவரத்துடன் ஏரிக் கரை மேட்டிலும், ஆல் விழுங்கிக் கவலைக் கிணறுகள் ஓரமும் பித்துப் பிடித்த மாதிரி வெகுநேரம் அலைந்தார். அவளைத் தேடி அங்கெல்லாம் திரிந்த போதே, அவர் நினைக்கிற மாதிரி அவள் அங்கு இருந்துவிடக் கூடாதே என்றும் ஈசனை வேண்டிக் கொண்டார்.

எல்லா இடங்களிலும் சுற்றிப் பார்த்து, வெறும் அலைச்சலே மிஞ்சிய பிறகு துணைக்கு வந்த எதிர்வீட்டு சாமா சாஸ்திரி வக்கிரமாய்ச் சிரித்தபடி, ''கதை வேற மாதிரி இருக்கும் போலத் தெரியறதே சர்மாஜி....'' என்று இழுத்தார்.

மனம் கோணிப் போன அந்த மனிதனின் முகத்தில் ஓங்கிக் குத்த வேண்டும் போல் அவருக்குள்ளே ஆவேசம் மூண்டெழுந்தது. சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டார்.

குழந்தையாக இருந்த நாளிலிருந்தே, 'அப்பா, அப்பா' என்று தம் காலைச் சுற்றி வந்த பெண், சின்ன வயதிலேயே ராமாயணமும் பாகவதமும் பாடம் கேட்ட பெண் அப்படிச் செய்யுமா என்று வெறும் கையுடன் வீடு திரும்பிய பிறகும் அவநம்பிக்கை தோன்றியது. தாம் நினைத்தபடியே ஏரிக் கரையிலோ கிணற்றுக்குள்ளேயோ அவள் கிடந்தாலே மேல் என்றுகூட ஒரு சமயம் குரூரமாய் எண்ணினார். தூக்கம் இன்றியே அன்றிரவு கழிந்தது.

மறு நாள் பொழுது விடிந்த பிறகு வன்னியர் தெரு சாமிக் கண்ணு படையாச்சியின் மகன் சோமுவையும் காணவில்லை என்ற செதி சர்மாஜியின் காதில் விழுந்தது. படையாச்சி அறுப்புச் செலவுக்காக அலமாரியில் எடுத்து வைத்திருந்த ஆயிரம் ரூபாய் பணத்தையும் காணவில்லையாம்.

அதற்கு முன்னரே சில மத்தியான வேளைகளிலும் சாயங்கால நேரங்களிலும் ஆற்றங்கரைப் பக்கமும் மூங்கில் தோப்பு அய்யனார் சிலை அருகிலும் பூமாவும் சோமுவும் தயங்கி நின்றதைப் பார்த்திருப்பதாக அப்போது தான் ஞாபகம் வந்த மாதிரி சில பேர் பேசிக் கொண்டார்கள்.

சாமா சாஸ்திரி மீது ஆத்திரப்பட்டு என்ன பிரயோஜனம்? கடைசியில் சாமா போட்ட கணக்குத்தான் சரியாகப் போயிற்று.

மகள் ஒருநாள் ஓடிப் போவாள் என்று எப்படி சர்மாஜி எதிர்பார்க்கவில்லையோ அதே போல் அவள் ஒரு நாள் திரும்பி வருவாள் என்பதையும் எதிர்பார்க்கவில்லை.

மூன்று வருடங்களுக்குப் பிறகு ஒரு விடியற் காலையில் சர்மாஜி வழக்கம் போல் ஆற்றங்கரைக்குக் கிளம்பிய போது வீட்டு வாசல் திண்ணையோரம் வெறும் நிழலாய் ஓர் உருவம் தெரிந்தது. அது தம்முடைய மகளாயிருக்கும் என்று அவருக்குத் தோன்றவேயில்லை.

''யாரது ?'' என்று அதட்டுகிற மாதிரி கேட்டார்.



மகள் எனும் பந்தம்

மலர் மன்னன்

பதிலுக்குப் பதில்!



ஜெனிவா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் குறைந்த மாணவர்களைக் கொண்ட கூட்டத்தின் முன்னால் விரிவுரை ஆற்ற விரும்பவில்லை. எனவே அவர் தமது விரிவுரையை டேப் ரிகார்டரில் பதிவு செய்து, அதனை விரிவுரை மண்டபத்துக்குள் வைத்து அதனை ஒலிக்கச் செய்துவிட்டார். அந்த விரிவுரை முடியும் தருணத்தில், அவர் அந்த மண்டபத்துக்குத் திரும்பவும் வந்தார். அவர் வந்து பார்த்தபோது அந்த மண்டபத்தில் மாணவர்கள் யாருமே இல்லை. மாணவர்களுக்குப் பதிலாக அங்கிருந்த பல டேப் ரிகார்டர்களும் அங்கு ஒலித்துக் கொண்டிருந்த அவரது விரிவுரையைப் பதிவு செய்து கொண்டிருந்தன. -நியூடைம்ஸ்

அந்த நிழல் உருவில் சிறு அசைவு.

''யாருன்னு?'' என்று மறுபடியும் அதட்டினார்.

''நாந்தானப்பா!'' என்று மெல்லிய குரலில் பதில் நிணறிக் கொண்டு வந்தது.

பாம்பை மிதித்தாற்போல் சர்மாஜி சட்டெனக் காலைப் பின்னால் வைத்தார். சிலையாய் ஸ்தம்பித்து நின்றார்.

ஒரு நிமிட நேரம் உலகமே சலனமற்றுக் கிடந்தது. அதன் பிறகு அவரே உணர்வு மீண்டவராய்ப் பேசத் தொடங்கினார்:

''யாரைக் கேட்டுப் போனே ?''

பதில் இல்லை.

''இப்ப யாரைக் கேட்டு வந்தே?''

சிறிது நேரம் மௌனம் சாதித்தார். பிறகு, ''சரி, உள்ளே போ'' என்றார்.

பூமா சற்றுத் தயங்கிவிட்டு வாசற்படி ஏற வந்தாள்.

''ஊஹூம். இந்த வழியா இல்லே. கொல்லைப் புறமா சுத்திண்டு போ. ஆத்துக்குள்ளே வராதே. வெந்நீர் உள்ளுக்கு அடுத்தாப்பல இருக்கே, அந்த ரேழியோட இருந்துக்கணும். அதைத் தாண்டி வரப்படாது.''

அவள் விக்கித்து நின்றாள்.

''என்ன பேசாம நிக்கறே? உம், போ'' என்று ஆக்ஞை பிறப்பித்துவிட்டு அவர் ஆற்றங்கரையை நோக்கி நடந்தார்.

எங்கே போனாள், என்ன ஆயிற்று, இத்தனை காலமும் எப்படி இருந்தாள் என்றெல்லாம் அவளிடம் விசாரிக்க வேண்டும் என்று சர்மாஜிக்குத் தோன்றவில்லை. அதற்கு அவசியம் இருப்பதாகவும் அவர் கருதவில்லை. மகள் வாயிலிருந்து அந்தக் கன்றாவிகளைக் கேட்டுத் தெரிந்து கொள்கிற கல் மனசும் அவருக்குக் கிடையாது.

பூமா வந்து சேர்ந்த அன்றே அவள் திரும்பி வந்துவிட்ட செய்தி ஊரில் பரவிவிட்டது.

எதிர்வீட்டு சாமா சாஸ்திரி வக்கிரச் சிரிப்புடன் அதைப் பற்றி சர்மாஜியிடமே விசாரித்தார்.

''சர்மாஜி! நான் சொல்றதைத் தப்பா எடுத்துக்கக் கூடாது. நான் சொல்லி உங்களுக்குத் தெரியணும்கிறதும் இல்லே.....''

''என்னது?''

''உங்களுக்குத் தெரியாதது இல்லே, சர்மாஜி. பூமா உங்க மகள்தான். இல்லேங்கல்லே. ஆனால் எப்பத் தாண்டிப் போயிட்டாளோ அதுக்கப்புறம் அவளுக்கு நீங்க முழுக்குப் போட்டிருக்கணும். அவள்தான் மானம் ரோஷம் கெட்டுத் திரும்பி வந்தாலும் நீங்க 'வந்த வழியைப் பார்த்துண்டு போ'ன்னு விரட்டியடிச்சிருக்கணுமே யொழிய ஒண்ணுமே நடக்காத மாதிரி உள்ளே கூடத்திலிருக்கப்படாது. பார்க்கறதுக்கு இது கொஞ்சம்கூட நன்னாயில்லே. ஊருக்கு மத்தியிலே இருக்கோம். மானமா நாலு மனுஷா வாழற எடம்......''

''சாமா சாஸ்திரி, இத்தாரும். நான் சொல்றதைக் கேட்டுண்டு போம். அவ என் பொண்தான். ஆனா அவளை என் பொண்ணுங்கிறதுக்காக உள்ளே கூப்பிட்டுக்கலேய்யா... உம்ம மாதிரி நாலு பேர் பேசுவேள், ஊரை மதிச்சு நடந்துக்கணும்னுதான் அவளை நான் ஆத்துக்குள்ளே விடல்லே..... நிராதரவாய்ப் போன அன்னிய ஸ்திரீக்கு அடைக்கலம் கொடுக்கிற மாதிரி கொல்லையிலே, மாட்டுக் கொட்டிலுக்குப் பக்கத்துலே எடம் கொடுத்திருக்கேன். தெரிஞ்சுக்கும்.''

சாமா சாஸ்திரி சிறிது நேரம் பிரமித்து நின்றுவிட்டுத் திரும்பிப் போனார்.

சாமா போன பிறகு சர்மாஜி கூடத்துக்கு வந்து வெந்நீர் உள்ளைப் பார்த்தபடி இரைந்தார்: ''இந்தா, இனிமே உன் தலை வெளியே தெரியப்படாது.''

அதன் பிறகு பத்து வருஷங்கள் தந்தையும் மகளும் ஒரே வீட்டில் வசித்தார்கள். அந்தப் பத்து வருஷ காலத்தில் சர்மாஜி மகளின் முகத்தை ஏறிட்டுப் பார்க்கவில்லை. தம்முடைய காரியங்களைத் தாமே பார்த்துக் கொள்வார். அவளுக்குத் தேவையானவற்றை அவ்வப்போது வெந்நீர் உள் பக்கம் எடுத்து வைத்து விடுவார்.

பூமாவும் அந்த நெடிய நாட்களில் வெளியில் தலை காட்டவேயில்லை. அவள் எப்போது எழுகிறாள், என்ன செய்கிறாள் என்பதெல்லாம் சர்மாஜிக்குத் தெரியாது.

மகளை வீட்டுக்குள் அடைத்துக் கொண்டதற்காக சர்மாஜியை ஊர் இலேசில் விடவில்லை. ஆனால் கால வித்தியாசம் காரணமாய் அவரைத் தூற்றுவதற்கு மேல் வேறு எதுவும் செய்ய ஊருக்குத் திராணியில்லை.

ஒரு காலத்தில் சர்மாஜிக்குப் பரிந்து பேசியும், பரிதாபப்பட்டும் புலம்பிய வம்படிக்கிற பாட்டிமார்கள் இப்போது ஓர் ஓடுகாலியைத் தம் மகளாக அங்கீகரித்து ஒண்ட இடம் கொடுத்ததற்காக அவரைக் கரித்துக் கொட்டினார்கள்.

பத்து வருஷங்களை ஒரு ஜன்ம தண்டனை மாதிரி சகித்துக் கொண்டிருந்துவிட்டு வடக்கிருந்து உயிர் துறப்பது போல் பூமா ஒரு நாள் அல்பாயுசில் செத்துப் போனாள்.

மகள் செத்துப் போய் அரை நாள் கழிந்து தற்செயலாகத்தான் அந்தச் சாவு தகப்பனுக்குத் தெரிந்தது.

நெருப்பு எறும்புகள் எங்கிருந்தோ புறப்பட்டு வெந்நீர் உள் ரேழியை நோக்கிச் சமையல்கட்டு வழியாகச் சாரி வைத்துப் போவது துர்க்குறியாய் அவர் கண்களை உறுத்தியது. ரேழியிலிருந்து ஏதோ துர்நாற்றம் அடிக்கிற மாதிரியும் இருக்கது. தவிப்புடன் ரேழிக்குப் போய்ப் பார்த்தார். பூமா அங்கே மல்லாந்து படுத்திருந்தாள்.

நெருப்பு எறும்புகள் அப்போதுதான் துணிவு . பெற்றவையாய்ப் பூமாவின் முகம் மீது ஊறத் தொடங்கியிருந்தன.

பதறிப் போனவராய் அருகில் விரைந்து மகளின் முகத்தைக் குனிந்து பார்த்தார்.

இமைகளை விரல்களால் நீவி விழிகளை மூட முயன்றார். மூடியபாடில்லை. அவசரமாய்த் திரும்பி வாசலுக்கு வந்தார். எதிர் வீட்டுத் திண்ணையில் சாவகாசமாய் உட்கார்ந்து வெற்றிலை போடும் சாமா சாஸ்திரியைச் சத்தம் போட்டு அழைத்தார்.

''என்ன சர்மாஜி ?'' என்றவாறு சாமா விரைந்து வந்தார்.

''அவ போயிட்டா, சாமா.''

''என்னது?'' என்று குழப்பத்துடன் கேட்டார் சாமா.

''ஆமாம், சாமா. அவ போயிட்டா.... செத்துப் போயிட்டா....!'' — சர்மாஜிக்குத் தொண்டைக் குழியில் சட்டென்று ஏதோ அடைத்தது.

''அடே !'' என்றார் சாமா. ''வாங்கோ, போய்ப் பார்க்கலாம்'' என்று சர்மாஜியையும் முந்திக் கொண்டு உள்ளே விரைந்தார்.

இரண்டு பேருமாக ரேழிக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

'' இனிமேல் நாழி கடத்தப்படாது '' என்று மேல் துண்டால் மூக்கைப் பொத்தியவாறு கூறினார் சாமா. ''சீக்கிரமா பெண்ணுக்கு ஆக வேண்டிய காரியங்களைப் பாருங்கோ. நானும் போய் எல்லாத்துக்கும் ஏற்பாடு பண்ணறேன்'' என்று கூறியபடி நகர்ந்தார்.

சர்மாஜி சாமாவை நிஷ்டூரமாய்ப் பார்த்தார்: ''இப்ப இவளை என்னோட பொண்ணுன்னு நான் சொல்லிக்க உங்களுக்கெல்லாம் ஆட்சேபம் இருக்காது. இல்லியா, சாமா?''

சாமா அவரை ஆச்சரியத்துடன் பார்த்தார். ''அதுலே என்ன சந்தேகம்?'' என்றவாறு அருகில் நெருங்கி வந்தார்.

''சர்மாஜி! நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியணும்கிறது இல்லே.... கல்லு, கட்டைகள்கிட்ட எல்லாம் விரோதம் பாராட்டமாட்டோம். குத்தம் பார்க்கமாட்டோம். இப்ப பூமாவும் அந்த ஸ்திதியிலே இருக்கிறவதான். ஆமா, இப்ப அவ வெறும் ஜடம். உங்களுக்கும் அவளுக்கும் இருக்கிற பந்தத்தை இப்ப ஒங்க மனசே ஒத்துக்கல் வேண்ணாலும் ஊருக்காகவாவது அதை ஒப்புத்துண்டு அவளுக்குப் பண்ண வேண்டியதையெல்லாம் நீங்க பண்ண வேண்டியதுதான்.''

"சர்மாஜி, என்ன நீங்கபாட்டுக்கு மொட்டை மாடியிலே நின்னுண்டு..... அடடா, உடம்பெல்லாம் நனைஞ்சு கிடக்கே'' என்றபடி மாடிப் படியேறி வந்தார், சாமா சாஸ்திரி.

சர்மாஜி திடுக்கிட்டார். விடிய விடிய மொட்டை மாடியிலேயே மரத்துப் போய் நின்றிருக்கிறோம், தமக்குத் தெரியாமலேயே பொழுதும் விடிந்தாயிற்று என்பது அப்போதுதான் அவருக்கு உறைத்தது. சாமாவை நோக்கி மலங்க மலங்க விழித்தார்.


சாமா கையில் பால் செம்புடன் வெகு கரிசனத்தோடு காட்சியளித்தார்.

''என்ன அப்படிப் பார்க்கிறேள்? பொழுது விடிஞ்சாச்சே.... வாங்கோ, உங்க பொண்ணுக்குப் பால் வார்த்துட்டு வரலாம்.''

பால் செம்பைப் பிடுங்கி அந்த மனிதனின் முகத்திலேயே அதை வீசி எறிய வேண்டும்போல் சர்மாஜிக்கு ஓர் ஆவேசம்.

ஆனால் இப்போதும் சிரமப்பட்டு அதை அடக்கிக் கொண்டார்.

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்பு மூலம்



ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெத்தென்றும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் புரதத்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.



ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ:
ஏராளமான நுரையின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.

இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு—இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

நம்பமாட்டேன்!

ஆக. தரஜா



''யோகி அற்புதானந்த சச்சிதானந்த மகராஜ்' என்ற பெயரில் ஒரு சாமியார் ஊருக்குப் புதிதாக வந்திருக்கிறாராம்.... அவரைப் போய்ப் பேட்டி கண்டு விட்டு வாருங்கள்....'' என்றார் 'காலேத் தூதன்' பத்திரிகை ஆசிரியர் தமது பிரதம நிருபரிடம்.

''நாம் பேட்டி காண வேண்டிய அளவு அதிசயமான மனிதரா அவர்?'' என்று கேட்டார் நிருபர்.

''நிச்சயமாக... அவரது பிரதாபங்களையும், சாகசச் செயல்களையும்பற்றி நிறையப் பேசிக் கொள்கிறார்கள்...அதனால்தான் சொல்கிறேன்.''

''சரி, இதோ புறப்படுகிறேன்!'' என்று புறப்பட்டார் நிருபர்.

சாமியாரைச் சுற்றி நிறையக் கூட்டம் கூடியிருந்தது. நிருபர் முண்டியடித்துக் கொண்டு முன்னேறினார். சாமியாரை நெருங்கினார். தாம் வந்த காரியத்தைச் சொன்னார். சாமியாரும் பேட்டி கொடுக்க உடனடியாக இசைந்தார். சாமியாரும் நிருபரும் தனி அறையில் போய்த் தாளிட்டுக் கொண்டு பேசத் தொடங்கினார்கள்.

''உங்களைப் பற்றி நிறையப் பேசிக் கொள்கிறார்களாமே...? அதாவது 'அற்புத சக்தி வாய்ந்த அதிசய மனிதர்' என்று சொல்கிறார்களாமே...? அது ஏன் என்று சொல்ல முடியுமா?....'' என்று கேட்டார் நிருபர்.

''நான் அற்புதங்கள் நிகழ்த்துவதால்தான்...''

''எங்கே, நீங்கள் நிகழ்த்திய ஓரிரு அற்புதங்களைச் சொல்லுங்களேன், கேட்போம்!...''

''ஒன்றிரண்டு என்ன — நிறையவே சொல்கிறேனே! அஷ்டமா சித்திகள் என்று கேள்விப் பட்டிருக்கிறாயல்லவா...? அத்தனையும் நான் செய்து காட்டுவேன்...''

''அதாவது....''

''நீரின் மேல் நடப்பேன்; நெருப்பில் நிற்பேன்; வானில் பறப்பேன்; பிறர் கண்ணில் படாதவாறு ஒளிவேன்..... இப்படிப் பல சித்துக்கள் செய்வேன்....''

''அப்படியா?''

''இமயமலைச் சாரலில் பன்னிரண்டு ஆண்டுகள் அன்ன ஆகாரமின்றித் தவம் செய்திருக்கிறேன்....''

''ஓ!''

''மதம் பிடித்த காட்டு யானையை என் கடைக் கண் பார்வையினாலேயே கட்டுப் படுத்தியிருக்கிறேன்....''

''அப்பாடி!''

''ஈர் காட்டுச் சிங்கங்கள் மூன்றுடன் ஒரே சமயத்தில் சண்டையிட்டு, மூன்றையும் வீழ்த்தியிருக்கிறேன்....''

''ஐயோடா!''

''ஜலந்தரில் ஒரு ராணுவ அதிகாரியின் கண்ணெதிரிலேயே இதோ இந்தக் கையினால் ராணுவ டாங்கையே தூள்தூளாக்கியிருக்கிறேன்!''

''அச்சா!''

''இதோ இந்த மார்பில் முப்பத்தாறு தோட்டாக்களை ஏந்தியிருக்கிறேன்... துப்பாக்கிக் குண்டு என்னைத் துளைக்க முடியாது என்று நிரூபித்திருக்கிறேன்....''

''அம்மாடியோவ்!''

''ஜாம்ஷெட்பூரில் இருப்புப் பாதையில் நின்று, வேகமாக வரும் ரயில் வண்டியை ஒற்றைக் கையினால் தடுத்து நிறுத்தியிருக்கிறேன்!....''

''பிரமாதம் போங்கள்!''

''ஒற்றை ஆளாக நின்று, 18 அடி விட்டம், 54 அடி ஆழம் உள்ள கிணற்றை, ஒன்பதே மணி நேரத்தில் வெட்டி முடித்திருக்கிறேன்....''

''அற்புதம்!''

''எனக்குத் தெரியாத கலைகள் இல்லை.... மந்திரம் தெரியும்; ஜோதிடம் அறிவேன்; வைத்தியமும் தெரியும்.....''

''பேஷ்! பேஷ்!''

''எனக்குத் தெரிந்த மொழிகள் பதினெட்டு.... ஏதாவது நூலை ஒரு முறை படித்தால்கூடப் போதும்.... அப்படியே மனப்பாடமாகி விடும்....''

''ஐஸீ!''

''வான சாஸ்திரம், பட்சி சாஸ்திரம், எண் இடுகுறி சாஸ்திரம் — இப்படி ஒரு பத்துப் பதினைந்து தெரியும்!''

''ஐயோ! ஐயோ!''

''இன்னும் கேள்; நான் ஒரு நாளைக்குத் தூங்குவது முப்பத்தாறே நிமிடங்களுக்குத்தான்.....''

''சுவாமிகளுக்குத் தினசரி ஆகாரம் எப்படியோ?''

''ஆகாரமாவது ஒன்றாவது... கிடைத்தால் காய் கனி; அதுவும் கிடைக்காவிட்டால் வெறும் காற்றுத்தான் ஆகாரம்....''

''ஆகா! ஆகா!''

''ஒரு விஷயம் கவனமாகக் குறித்துக் கொள்; தினசரி ஒன்பது முறை குளித்தாக வேண்டும் எனக்கு... அதை மட்டும் எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் மாற்றிக் கொள்வதில்லை...''

நிருபர் நோட்டை மூடினார். ''ரொம்ப நன்றி. நான் போய் வருகிறேன்!....'' என்று வணக்கம் செலுத்தி விட்டுக் கிளம்பினார்.

''என்ன, பேட்டியெல்லாம் எப்படி இருந்தது?... சுவாரசியமாகத்தானே இருந்தது?'' என்று நிருபரைக் கேட்டார் ஆசிரியர்.

சப்புக் கொட்டினார் நிருபர். ''எனக்கென்னவோ அந்தச் சாமியார் சொன்னது நம்புகிற மாதிரி இல்லை'' என்று சொல்லிவிட்டு, தாம் குறித்துக் கொண்டு வந்ததைப் படித்துக் காட்டினார்.

''இவற்றில் எது நம்புகிற மாதிரி இல்லை என்கிறீர்கள்?''

''எல்லாவற்றையும் கூட நான் நம்புவேன்.... ஆனால் இந்தத் தண்ணீர்ப் பஞ்ச காலத்தில்கூடத் தினமும் ஒன்பது முறை குளிப்பதாகச் சொன்னாரே — அதைத்தான் என்னால் நம்ப முடியவில்லை! சாமியார் நன்றாகச் சரடுவிடுகிறார்!... இதற்காகவே இந்தப் பேட்டியை நாம் பிரசுரிக்கக் கூடாது!'' என்று அடித்துச் சொன்னார் நிருபர்.

ஆசிரியரும் ஒப்புக் கொண்டார்.

மேஜை துடைத்த பிரதமர்!

பிப்ரவரி மாதம் 22ம் தேதி சனிக்கிழமை இரவு சென்னையில் தம் நிகழ்ச்சிகளை முடித்துக் கொண்டு தில்லி திரும்பிய திருமதி இந்திரா காந்தி 24ம் தேதி தம் காரியாலயம் சென்றார். அறையில் உள்ள மேஜையும், நாற்காலிகளும் துடைக்கப்படாமல் தூசி படிந்து கிடந்தன. உடனே இந்திரா காந்தி தம் மேஜை டிராயரைத் திறந்து ஒரு பழம் துணியை எடுத்தார். அதைக் கொண்டு மேஜையைத் துடைக்க ஆரம்பித்தார்.

அறையின் கதவைத் திறந்து கொண்டு பியாரேலால் வந்தான்.

''அம்மா! நீங்கள் மேஜையைத் துடைக்கக் கூடாது. அதை நான் ஆட்சேபிக்கிறேன்!'' என்றான்.

'' நீ துடைக்காததால் நான் துடைத்தேன். அதனால் என்ன?''

''நானும் துடைக்கமாட்டேன், நீங்களும் துடைக்கக் கூடாது. இப்பொழுது உங்களோடு பேசிக் கொண்டிருப்பது உங்கள் பணியாள் பியாரேலால் அல்ல.''



''பின்?''

''அ.இ.அ.அ.நா.வ.ப. சங்கத்தின் காரியதரிசி.''

''அப்படியென்றால்?''

''அகில இந்திய அரசாங்க அலுவலக நான்காவது வகுப்புப் பணியாட்கள் சங்கம். நாங்கள் இன்று அடையாள வேலைநிறுத்தம் செய்திருக்கிறோம்.''

''எதற்காக ?''

''இரண்டு நாளைக்கு முன்னர் நீங்கள் சென்னையில் பேசியதை ஆட்சேபித்து. உங்கள் மேஜை நாற்காலிகளை நாங்கள் துடைக்காவிட்டால் அதை சிசர்வ் பாங்கு அதிகாரிகளைப் போலப் பெரிதுபடுத்தமாட்டீர்கள் என்றும், உங்கள் மேஜையை நீங்களே துடைத்துக் கொள்வீர்கள் என்றும், அதை ஓர் இழிவாகக் கருதமாட்டீர்கள் என்றும் சொன்னீர்கள், அல்லவா ?''

''ஆம், சொன்னேன். அதில் என்ன தவறு ?''

''எங்கள் சங்கம் நேற்று அவசரமாகக் கூடி நான்கு முக்கிய தீர்மானங்களை நிறைவேற்றிற்று.''

'' என்ன அவை ?''

''முதலாவது உயர் அதிகாரிகள் மேஜை, நாற்காலிகளைத் துடைக்க விரும்பினால் அவர்கள் தங்கள் பதவியை ராஜிநாமாச் செய்து, எங்களைப் போல நான்காவது வகுப்புப் பணியாட்களாக மாறி, எங்கள் சங்கத்திலும் அங்கத்தினராகச் சேர வேண்டும்.''

''இரண்டாவது தீர்மானம் ?''

''பிரதம மந்திரியின் சென்னைப் பிரசங்கத்தைக் கண்டிக்கும் வகையில் ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம் செய்வது.''

'' நாங்கள் எங்கள் மேஜைகளைத் துடைத்தால் துடைத்துவிட்டுப் போகிறோம். எதற்காக எங்களைக் கண்டிக்க வேண்டும்?''

''வெகு அழகாக இருக்கிறதே! எங்கள் பிழைப்பை நீங்கள் கெடுத்தால் நாங்கள் சும்மா பார்த்துக் கொண்டிருக்க முடியுமா ? நாளைக்கு நாங்கள் பைல்களைத் தாமதமாகக் கொண்டு போய்க் கொடுக்கிறோம் என்பதால் நீங்களே உங்கள் பைலை எடுத்துக் கொண்டு ஓடினாலும் ஓடலாம் !''

இது சமயம் வெளிநாட்டு மந்திரி திரு சவான் ஒரு பைலை எடுத்துக் கொண்டு ஓடோடி உள்ளே நுழைந்தார். அவருக்கு மூச்சு வாங்கிற்று.

''பார்த்தீர்களா ! நாளைக்கு என்று சொன்னேன், இன்றைக்கே இந்த அமைச்சர் பைலை எடுத்துக் கொண்டு ஓடி வந்திருக்கிறார்'' என்றான் பியாரேலால்.

அந்தச் சமயம் ஒரு பணியாள் ஓடோடி வந்து அந்த அறைக்குள் நுழைந்தான். அவன் திரு சவானின் பணியாள் !

''இத்தனை பெரிய உடம்பை வைத்துக் கொண்டு இத்தனை வேகமாக ஓடி வந்துவிட்டீர்களே! என்னாலேயே உங்களைப் பிடிக்க முடியவில்லையே!'' என்று சொல்லிக்கொண்டு அவன் திரு சவானின் கையிலிருந்த பைலைப் பிடுங்கிக் கொண்டு வெளியே ஓடினான்.

''பைலை இப்படிக் கொடு. அது மிகவும் முக்கியமான பைல். அமெரிக்கா பாகிஸ்தானுக்கு யுத்த தளவாடங்கள் அனுப்பப் போவதைப் பற்றிய பைல்'' என்று திரு சவான் கூவினார். ஆனால் அவருடைய பணியாள் ஓடியே போய்விட்டான்.

பியாரேலால் திரு சவானிடம் கூறினன்: ''ஐயா! எங்கள் சங்கத்தின் காரியதரிசி என்கிற முறையில் கூறுகிறேன், உங்கள் பணியாள் செய்ததில் ஒரு தவறும் இல்லே. எங்களுடைய மூன்ருவது தீர்மானப்படி தான் அவன் அப்படி நடந்து கொண்டான். பைலே ஓர் அறையிலிருந்து இன்னேர் அறைக்கு எடுத்துச் செல்வது அ.இ.அ.அ.நா. வ. பணியாளர்களின் ஏகபோக உரிமை. அந்த உரிமையில் யார் குறுக்கிட்டாலும், அவர்கள் கையிலிருந்துபைலேப்பிடுங்கிக்கொள்வோம்.''

இந்தச் சமயம் பிரதம மந்திரியின் அந்தரங்கக் காரியதரிசி உள்ளே நுழைந்தார். அவர் கையில் ஒரு கப் காப்பி இருந்தது. அதை அவர் இந்திராகாந்தியின் முன்னல் வைத்தார்.

இந்திரா காந்தி காப்பியைக் குடிக்கக் கப்பை எடுக்குமுன் பியாரேலால், அந்தக் கப் காப்பியைத் தான் கையில் எடுத்துக் கொண்டு, ''இப்பொழுது நான் செய்யப் போவது, நேற்று நடந்த கூட்டத்தின் நான்காவது தீர்மானத்தை ஒட்டியதாகும்'' என்று கூறிக் காப்பியைத் தானே குடித்தான்.

''அந்தத் தீர்மானம் என்ன என்று எனக்குப் புரிகிறது. அமைச்சர்களுக்கும், அதிகாரிகளுக்கும், கான்டீனிலிருந்து காப்பி கொண்டு வருவது நான்காவது வகுப்புப் பணியாட்களின் ஏகபோக உரிமை. இந்த உரிமைகளில் யாராவது குறுக்கிட்டால் அவர்கள் கையிலிருந்து காப்பியைப் பிடுங்கிச் சாப்பிடவேண்டியது'' என்ருர் திருமதி இந்திரா காந்தி.


''அடேடே! சரியாக ஊகித்து விட்டீர்களே!'' என்ருன் பியாரேலால். பிறகு அந்தரங்கக் காரியதரிசியைப் பார்த்து, ''காப்பி நன்ருகவே யில்லேயே! எந்தக் கான்டீனிலிருந்து வாங்கிக் கொண்டு வந்தீர்கள்?'' என்று கேட்டான்.

அந்தரங்கக் காரியதரிசி தலேயைச் சொறிந்து கொண்டு பதில் கூற யோசிப்பதற்குள் கதவைத் திறந்து கொண்டு காங்கிரஸ் தலேவர் பருவா உள்ளே நுழைந்தார். அவர் பின்னல் கையில் காமிராவுடன் ஒரு போட்டோகிராபரும் நுழைந்தார்.

''அம்மா! நீங்கள் மேஜை துடைக்கப் போவதாகச் சென்னேயில் பேசியதிலிருந்து எனக்கு இருப்புக் கொள்ளவே யில்லே. அந்தக் காட்சியைப் படம் பிடித்து எல்லாப் பத்திரிகைகளிலும் வெளியிட்டால் நம் கட்சிக்கு எப்படிப்பட்ட விளம்பரம்!'' என்ருர் பருவா.

உடனே பியாரேலால் மேஜை துடைக்கும் துணியைத் தன் கையில் எடுத்து வைத்துக் கொண்டுவிட்டான்! ''அதுதான் நடக்காது. பிரதம மந்திரி மேஜையைத் துடைப்பதை நான் அனுமதிக்க மாட்டேன்!'' என்ருன்.

''அப்படியாளுல் நீயாவது துடை'' என்ருர் பருவா.



''நான் துடைத்தால் போட்டோ எடுத்துப் பத்திரிகையில் பிரசுரிப்பீர்களா?'' என்று கேட்டான் பியாரேலால்.

''நீ துடைத்தால் பிரசுரிப்பார்களா? பிரதம மந்திரியோ, மற்ற அமைச்சர்களோ துடைத்தால்தான் படம் எடுத்துப் பிரசுரிப்பார்கள்!''

இந்தச் சமயம் இன்னும் நாலு பேர் உள்ளே நுழைந்தார்கள். ஒருவர் கையில் சினி காமிரா இருந்தது. மற்ற மூன்று பேர் கையில் பெரிய பல்புகள் பொருத்திய மின்சார விளக்குகள் இருந்தன.

''நாங்கள் பிலிம் டிவிஷனிலிருந்து வருகிறோம். பிரதம மந்திரி தம் மேஜையைத் தாமே துடைக்கப் போகிறார் என்று செய்தி கிடைத்தது. அதைப் படம் பிடித்துச் செய்திக் கதிரில் வெளியிடுவதற்காகத்தான் நாங்கள் வந்துள்ளோம். பிரதம மந்திரி அவர்கள் அவசரப்பட்டு மேஜையைத் துடைக்க வேண்டாம். நாங்கள் காமிராவையும், விளக்குகளையும் சரியாக வைத்த பிறகு, 'ரைட்' என்று சொல்லுகிறோம். அப்போது மேஜையைத் துடைக்க ஆரம்பித்தால் போதும்'' என்றார் சினி காமிராவைக் கையில் வைத்துக்கொண்டிருந்தவர்.

இந்தச் சமயம் இன்னும் இரண்டு பேர் உள்ளே நுழைந்தார்கள். அவர்கள் கையில் டெலிவிஷன் காமிராவும் விளக்குகளும் இருந்தன.

''நல்ல வேளை, இன்னும் பிரதம மந்திரி மேஜையைத் துடைக்க ஆரம்பிக்கவில்லை! எங்கே தாமதமாக வந்து விட்டோமோ என்று பயந்தோம்'' என்றார் அவர்களில் ஒருவர்.

பியாரே லாலுக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. 'இது என்ன பிரதமர் மேஜையைத் துடைத்தே விடுவார் போலிருக்கிறதே' என்று கவலைப்பட்டான். கடைசியாக ஓர் அஸ்திரத்தைப் பிரயோகித்தான். ''இதோ பாருங்கள்! எங்கள் வேலை நிறுத்தத்தில் நீங்கள் தலையிட்டால் நாளைக்கு நீங்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கும்போது நாங்கள் தலையிடுவோம். அனுதாபம் தெரிவிக்க மாட்டோம், ஜாக்கிரதை!'' என்றான்.

இதைக் கேட்டதும் டெலிவிஷன்காரர்களும் திரைப்படக்காரர்களும் புகைப்படக்காரரும் அவசரம் அவசரமாய் அறையை விட்டு வெளியே போய்விட்டார்கள்.

பியாரேலால் வெற்றிப் பெருமிதப் புன்முறுவலுடன் இந்திராகாந்தியை நோக்கினான்.

''நாழியாகிறது. பேரக் குழந்தை என் வருகைக்காக ஆவலோடு காத்திருக்கும். இதோ நானும் வீட்டுக்குக் கிளம்புகிறேன்'' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் திருமதி இந்திரா காந்தி.



ஒரு சமயம் நெல்ஸன் ராக்கஃபெல்லர் ஷிகாகோவில் ஒரு ஹோட்டலில் தங்கினார். சிறிதுநேரத்துக்குப் பின் அவ்விடுதி அதிபர் ராக்கஃபெல்லரின் அறைக்கு ஓடி வந்து, ''இது என்ன அநியாயம்? கோடீசுவரரான நீங்கள் இந்த 'ஸி' க்ளாஸ் அறையிலா தங்குவது? உங்கள் மகன் இங்கு வரும்போதெல்லாம் 'சூப்பர் ஏ' க்ளாஸில் தான் தங்குவது வழக்கம்'' என்றார்.

ராக்கஃபெல்லர் சிரித்தபடியே பதில்சொன்னார்: ''ஐயா, என் மகனுக்கு ஒரு பணக்காரத் தகப்பன் இருக்கிறார். ஆனால் எனக்கு அப்படி யாரும் இல்லையே!'' - எஸ். ராதா



'' மூம்மொழி '' ஜோக்

நமக்குத் தலைவலி வந்தால் அது 'ஹெட் - ஏக்'. இராவணனுக்குத் தலைவலி வந்தால் 'ஹெட் - தஸ்'. - இ. சுதாகரன்





நாத்திகக் கருவறுப்போம்

ஆத்திகம் தழைக்க வைப்போம்
அறநெறி வளர்த்து வைப்போம்
சாத்திரம் படிக்க வைப்போம்
தலையாய மதஉ ணர்ச்சி
தீத்திறம் கொள்ள வைப்போம்
திருநாட்டைப் பாழ்படுத்தும்
நாத்திகக் கருவ றுத்தே
நடுகல்லும் நட்டு வைப்போம்!

தெய்வத்தை நம்ப வைப்போம்
சிறுமையை ஓட வைப்போம்
சைவத்தைச் செழிக்க வைப்போம்
தமிழ்மறை அறிய வைப்போம்
கைவந்த கலைஞ ரெல்லாம்
கடவுளை விளக்க வைப்போம்
பொய்யாளை மூடவைத்தே
புல்லரைத் துடிக்க வைப்போம்!

ஆண்டவன் ஒருவன் உண்டு
அன்பவன் பெயர்தா னென்று
ஈண்டவன் மகிமை கூறி
இளந்தலை முறைகள் யாவும்
காண்டகு சிறப்பில் ஆழ்ந்து
கடவுளை நாட்கள் தோறும்
வேண்டியே வணங்க வைப்போம்
வேலொடு குழலும் காப்போம்!

இறந்தபின் உயிர்கள் எல்லாம்
எவ்வழி ஏகும் என்றே
அறிந்தவன் எவனும் இல்லை
ஆண்டவன் ரகசி யத்தை
தெரிந்தவன் அவனே யன்றி
திறமுள விஞ்ஞா னங்கள்
அறிந்தன ஏதும் இல்லை;
அவனேதான் வாழ்வின் எல்லை!

தாயவள் உடம்பைத் தந்தாள்,
தந்தைதன் துளியைத் தந்தான்,
சேயென உருப்பெற் றோம்யாம்;
தேகமும் காலும் கையும்
வாயொடு செவியும் பெற்றோம்;
மரணத்தை வென்றோ மில்லை!
தாயவன் பெயரைச் சொல்லி
துலங்கட்டும் பக்தி வெள்ளம்!







கண்ணதாசன்



அங்கூர்

ஸத்ய ஜித்ரேயின் படங்கள்; ''திக்கற்ற பார்வதி'' ஆகியவற்றுடன் சேர்த்து மதிக்கப்படவேண்டிய படம் 'அங்குர்' வெளிவந்திருக்கிறது.

பாட்டு, கூத்து, மல்யுத்தம், துச்சாதனக் காட்சிகள் ஏதுமில்லாமல் வாழ்க்கையைத் தத்ரூபமாய்ப் படம் பிடித்துக் காட்டும் ஓர் அபூர்வக் கலைப்படம்.

படித்துப் பட்டம் பெற்ற சூரியா மேலே படிக்க வேண்டும் என்று விரும்புகிறான். அந்த ஆசையைத் தடுத்து ஒரு கல்யாணம் பண்ணி வைத்து, நிலபுலன்களைப் பார்க்கக் கிராமத்துக்கு அனுப்பி வைக்கிறார் தந்தை.

திருமணம் செய்துகொண்ட மங்கை உரிய பருவமடையாத காரணத்தால் கல்யாணமாகியும் பிரம்மச்சாரியாகக் கிராம வீட்டுக்கு வந்து சேருகிறான்.

வந்த இடத்தில் கிராம வீட்டைப் பெருக்கி மெழுகி வைத்துக் கொள்ளும் இளம் பெண் லட்சுமியைப் பார்க்கிறான். அவள் கணவன் செவிடு, ஊமை. போதாக் குறைக்குக் குடிப்பழக்கம் உள்ளவன்.

ஒரு நாள் கிருஷ்ணய்யா என்ற அந்த ஊமை மரத்தில் ஏறிக் கள்ளைத் திருடிக் குடித்து விடுகிறான். இது புது எஜமானனாக வந்துள்ள சூரியாவுக்குத் தெரிய வருகிறது. இத்திருட்டுத்தனத்துக்காக அவன் தலையை மொட்டையடித்துக் கழுதைமேலேற்றி ஊர்வலம் விடுகின்றனர். வேலையற்ற சோம்பேறியானாலும் அவமானம் தாங்க மாட்டாமல் ஊரை விட்டு ஓடிவிடுகிறான் கிருஷ்ணய்யா. மனைவி லட்சுமி ஆதரவின்றித் தனியாக விடப்படுகிறாள்.

ஏற்கனவே லட்சுமியினிடம் கவர்ந்திழுக்கப்பட்ட சூரியா, இப்போது ஓரளவு பகிரங்கமாகவே தனது உள்ளக் கிடக்கையை வெளிப்படுத்துகிறான். கணவனால் கைவிடப்பட்ட லட்சுமி, காலகாலத்துக்கும் தன்னைக் காப்பதாகச் சூரியா வாக்குறுதியளித்த பின் ஒருப்படுகிறாள் — தாய்மையுறுகிறாள்.

இந்த நிலையில் தாலி கட்டிய மனைவி சூரியாவுடன் குடித்தனம் செய்ய வருகிறாள்.

மனைவி வரும்பொழுதே தனது இயற்கையான மோப்ப உணர்ச்சியால் தன் கணவன் மீது ஐயுறுகிறாள். முக்கோணம் ஏற்பட்டு விடுகிறது.

இப்போது சூரியா, லட்சுமியினிடம் கருவைக் கலைத்துக் கொள்ளுமாறு கெஞ்சுகிறான். தாய்மையுற்ற பெண், தன் தாய்மையை இழக்கத் தயாராக இல்லை.

இந் நிலையில் ஓடிப்போன ஊமைக் கணவன் வந்து சேருகிறான்—கைநிறையப் பணத்துடன். மனைவி தாய்மையுற்றிருக்கிறாள் என்பது உணர்ந்து பெருமையே கொள்கிறான். அவனுடைய தூய அன்பைக் கண்டு லட்சுமி உள்ளம் நெகிழ்ந்து போய், 'ஓ' என்று அலறுகிறாள். கிருஷ்ணய்யா அவளை இனிக் காப்பாற்ற உறுதி பூணுகிறான். சூரியாவிடம் வேலை கேட்கப் போகிறான்.

சூரியா, அவனைக் கண்டதுமே திடுக்கிடுகிறான். தன்னைத் தாக்கத்தான் ஊமைக் கிருஷ்ணய்யா வருகிறான் என்று நினைத்துக் கொண்டு வீட்டுக்குள் போய்ச் சாட்டை கொண்டுவந்து, ஆட்களை அவனைப் பிடித்துக் கொள்ளச் செய்து சாட்டையால் நையப் புடைக்கிறான். ஒரு பாவமும் அறியாத கிருஷ்ணய்யா சாட்டையடி வாங்குவதாகக் கேள்விப்பட்டு லட்சுமி ஓடிவருகிறாள். கிருஷ்ணய்யா வந்த காரணத்தைச் சொல்லி, சூரியாவின் செய்கைக்காக மண்ணை வாரித் தூற்றி நிந்திக்கிறாள். சூரியா தன் தவற்றை உணர்கிறான்.

இத்தகைய ஓர் அரிய கற்பனையில் லட்சுமியாக நடிக்கும் ஷப்னா அஸமி மிக நேர்த்தியாகச் செய்திருக்கிறார்.

அவளுடைய ஊமைக் கணவனாக ஸாது மேஹர் சிறப்பாக நடித்திருக்கிறார்.

சூர்யாவாக அனந்த நாகும், அவன் மனைவியாக பிரியா டெண்டுல்கரும் நன்றாக நடித்திருக்கின்றனர்.

ஆந்திரப் பிரதேசப் பின்னணியில் குறைந்த வசனத்துடன் இயற்கையான நடிப்போடு இப்படம் எடுக்கப்பட்டிருக்கிறது.

பெர்லினில் நடைபெற்ற திரைப்பட விழாவுக்கு இந்திய அரசாங்கம் இப்படத்தைத் தேர்ந்தெடுத்து அனுப்பியது. பாரத மக்களின் இயல்பான நடை உடை மனோபாவங்களைப் பிரதிபலிக்கும் படம் இது என்பதில் ஐயமில்லை.

—எஸ்.வி.எஸ்.

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran



நாகரீகம், அத்துடன் நீடித்தும் உழைப்பவை — பின்னி மட்டுமே நயமுடன் இணைத்துத்தர முடியும்!

Interpub BB/53/75 Tam

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

வீட்டை பாதுகாப்பதில் நல்ல ஞானம்



டூலக்ஸின் நீடிப்புத் தன்மை, உங்கள் வீட்டிற்கு நெடுங்கால பாதுகாப்பு மற்றும் சிக்கனமும் அளிக்கின்றது.

டூலக்ஸ், வெயிலில் ஒளி மங்காது.

டூலக்ஸ், நீரை உட்புக விடாது: பராமரிப்பதற்கும் சுலபமானது.

டூலக்ஸை சிறிதளவு கொண்டு அதிகமான இடத்திற்குப் பூசலாம்.

டூலக்ஸ், பரவலான பற்பல எழில் மிகுந்த நிறங்களில் கிடைக்கிறது—அதாவது, உங்கள் விருப்பத்திற்கும் மன நிலைக்கும் பொருந்திய பிரகாசமான மற்றும் இலேசான, சுத்தமான மற்றும் கலப்பானவை முதலியன.

நீடித்திருக்கும் ICI டூலக்ஸ்

அடிக்கடி அதிகச்செலவாகும் வெயின்ட் பூசுவதிலிருந்து உங்கள் வீட்டை பாதுகாக்கின்றது

இலவசம்

தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்
டூலக்ஸ்-இந்தியாவில் தயாரிப்பாளர்களும் விற்பனையாளர்களும்: இம்பீரியல் கெமிகல் இண்டஸ்டிரீஸ் லிமிடெட், லண்டனின் டிரேடு மார்க் 'டூலக்ஸ்' பதிவு பெற்ற உபயோகிப்பாளர்: தி ஆல்கலி அண்டு கெமிகல் கார்ப்பரேஷன் ஆஃப் இந்தியா லிமிடெட்



கூப்பனை வெட்டி இன்றே அஞ்சலில் அனுப்பவும்: டூலக்ஸ் இன்ஃபர்மேஷன் ஸர்விஸஸ், அஞ்சல் பெட்டி 10222, கல்கத்தா-700 019

*தயவு செய்து வீடுகளுக்கான நிறத்திட்டங்கள் பற்றிய இலவச அட்டை ஒன்று அனுப்புங்கள்

பெயர் ....

முகவரி ....

தொழில் ....

ICI டூலக்ஸ்—வீட்டின் சிறந்த நண்பன்

HT-ACCI (P) 8106